கல்கி

KALKI 30-8-81 ரூ. 1.20



□ ஸ்ரீமதி விமலா வெங்கடேசன் மலரால் அலங்கரிக்கும் பஞ்சமுக விநாயகர். நேபாள பாணியில் தயாரான மரச் சிலை. உயரம் இரண்டரை அடி. எடை: பத்து கிலோ. புராதனக் கலைப் பொருள். விற்பனையாளரிடமிருந்து வாங்கினாராம்.


சயனித்த — நர்த்தனமாடுகிற — ஐந்துமுக விநாயகர் சிலைகள் நேபாளத்திலும் திபெத்திலும் பஞ்சலோகம், வெள்ளி, அல்லது தங்கத்தினால் ஓர் அடி முதல் எழடி உயரம் வரை செய்கிறார்களாம்!

இந்தச் சிலை வீட்டில் இருந்தால் ஐசுவரியமானது என்கிறார்கள்.

புகைப்படம்: உத்ரா


முடி வளர்க்கும் மூலிகை மருந்துகளை
உங்களுக்காகவே உருவாக்கி இருக்கிறோம்!
CROWN
HERBAL HAIR CREAM
HERBAL HAIR TONIC
Herbal Hair Care
பண்டைய சித்தர்கள் ஆராய்ந்து
பயன்படுத்திய முடிவளர்க்கும்
மூலிகை மருந்துகளை இப்போழுது
நீங்களும் பயன்படுத்தலாம்!
பழமையின் மெய்ஞான வலிவும்
புதுமையின் விஞ்ஞானப் பொலிவும்
ஒன்றாக இணைந்து உருவாகியுள்ள
நன்மை பயக்கும் ஆராய்ச்சி மருந்துகள்!
• முடி உதிர்தல் நின்று, கருகரு என்று மயிர் வளரும்!
• இளநரை மாறும்! புழுவெட்டில் மயிர் முளைக்கும்!
• பொடுகு, பேன், ஈறுகள் அடியோடு மறையும்!
• குளுமையும், புத்துணர்ச்சியும் உண்டாகும்!
• ஞாபக சக்தி வளரும்! நன்கு தூக்கம் வரும்!
கிரௌன் முடிவளர்க்கும் மூலிகை மருந்துகள்—
உங்கள் கேசத்தைப் பாதுகாக்கும்
இயற்கை கிவ்ரானிகள்!
கிரௌன் ஹெர்பல் ஹேர் க்ரீம்
(HERBAL HAIR CREAM)
கிரௌன் ஹெர்பல் ஹேர் டானிக்
(HERBAL HAIR TONIC)
கிரௌன் ஹெர்பல் ஹேர் கேர்
(HERBAL HAIR CARE)
தயாரிப்பாளர்கள்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ்
(CROWN HERBAL PRODUCTS)
55, ஹாரிஸ் சாலை, புதுப்பேட்டை,
சென்னை-600 002
(எழும்பூர் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு எதிரில்)
CROWN
Siddhar

எத்தனை வித்தியாசம்!




டார்ஜிலிங்கிலிருந்து கலிம்பாங் போகிற வழியில், இந்தச் சிறுவர்களைப் பார்த்தேன். இரண்டு நண்பர்களுக்கிடையிலும்தான் எத்தனை வித்தியாசம்! ஒருவன் துணிச்சலும், தன்னம்பிக்கையும் உள்ள 'எக்ஸ்ட்ரோவர்ட்.' இன்னொருவன் சற்றே பயந்த சுபாவமுள்ள 'இன்ட்ரோவர்ட்.'

பான்ட்டகன்-6, 120 சைஸ் காமிராவில், டெலிஃபோட்டோ லென்ஸை உபயோகித்து எடுத்தேன் இந்தச் சிறுவர்களின் படத்தை. -எஸ். ஆஸாத். பேட்டி: தமயந்தி

ஒரு ரகசியப் பயிற்சி!

தியானம்

தியானத்தின் பயன்:



குழப்பம் ஒழுங்கு அமைதி

தியானத்துக்கென்றே தனியாக தி. நகரில் வகுப்புகள் நடத்துகிறார் லக்ஷ்மண் எஸ். கோபி. மஹேஷ் யோகியிடம் ஆறு வாரம் பயிற்சி பெற்றிருக்கிறார்.

''எத்தனை நாள் வகுப்பு?''

''முதலில் ஒரு மணி நேரம் பொதுவாகச் சொல்லித் தருவோம். பிறகு நாலு நாள் பிராக்டிகல் பயிற்சி. காலையும் மாலையும்.''

''இதனால் என்ன பயன்?''

''மன அமைதி பெறுவதுதான். இந்த அவசர யுகத்தில் பல காரணங்களால் மனம் சலனப்படுகிறது. தினமும் 20 நிமிடம் தியானம் செய்தால் அமைதி பெறலாம். சூழ்நிலைக்கு ஏற்ப மாறி உண்மை நிலையை எதிர்கொள்ள நாங்கள் பயிற்சி அளிக்கிறோம்.''

''இதனால் பலன் பெற்றவர்கள் இருக்கிறார்களா?''

''நிறைய. இதோ பாருங்கள் (ரிஜிஸ்டரைக் காண்பிக்கிறார்.) மிகக் கோபக்காரராயிருந்த ஒரு பிஸினஸ்மேன், இங்கு பயிற்சி பெற்றவுடன் முற்றும் மாறிவிட்டார். பிரபல மன நோய் நிபுணர்கள் கூட இங்கே போகுமாறு சிபாரிசு செய்கிறார்கள். ஒரு சமயம் பரீட்சைக்கு மிக அதிகமாகப் படித்த மாணவர் குழம்பிப்போய் இங்கு வந்து மனத் தெளிவு அடைந்தார். இப்போது சிறைக்குச் சென்று அங்குள்ள கைதிகளுக்கும் சொல்லிக் கொடுக்க எண்ணியுள்ளோம்.''

''எவ்வளவு சார்ஜ்?''

''இலவசம். ஆனால் பலர் டொனேஷனைத் தாங்களாகவே மனம் உவந்து அளிக்கிறார்கள். அது மகேஷ் யோகி டிரஸ்டுக்குப் போகிறது. இதுபோன்ற தியான வகுப்புக்கள் நடத்த ட்ரஸ்ட் நிதி உதவி செய்கிறது.''

''ரொம்பச் சரி; இப்போது எனக்குத் தியானம் சொல்லிக் கொடுங்களேன்.''

சிரிக்கிறார் லக்ஷ்மண்.

''நீங்கள் தனியாக அதற்கென்றே வாருங்கள். சொல்லித் தருகிறேன். இங்கு வந்து போனவர்களிடம் கூட விசாரியுங்கள். அந்த ரகசியத்தைச் சொல்ல மாட்டார்கள். அது இங்கு வந்து கற்று, பயிற்சி பெற்றுப் புரிந்து கொள்ள வேண்டியது.''

—தமயந்தி


லக்ஷ்மண் எஸ். கோபி



விஞ்ஞானம்

'ஜாம்', 'ஜஸ்ட் ஏ மினிட்' என்கிற பெயர்களில் கல்லூரி விழாக்களில் நடத்தப்படும் போட்டி, பி.பி.ஸி. லண்டனின் அன்பளிப்பு.

மேடையின் நடுவில் நடுவர். 1, 2, 3, 4... எனப் போட்டியாளர்களின் வியூகம். தலைவர் தலைப்பைக் கொடுத்த முதல் விநாடியின் ஆரம்பத்தில் முதல் போட்டியாளர் பேச ஆரம்பிக்க வேண்டும். அவர் பேசியதில் தவறோ, தலைப்பிலிருந்து விலகலோ, தயக்கமோ இருப்பின் அதைக் கண்டுபிடித்த இன்னொரு போட்டியாளர் அதே தலைப்பில் தொடர்ந்து பேச அழைக்கப்படுவார். முதலாமவர் சரியாகப் பேசியதை இரண்டாமவர் தவறு எனக் கணித்திருப்பாராகில் மீண்டும் முதலாமவரே பேசுவார். அழைத்தலும், மறுத்தலும் நீதிபதியின் பணி. 60 வது விநாடியின் முடிவில் எந்தப் போட்டியாளர் பேசிக் கொண்டிருக்கிறாரோ அவருக்குப் போனஸ் மார்க்குகள் கிடைக்கும்.



'ஜாம்' எனில் குழப்பம். இப்போட்டி நடைபெறும்போது ஏற்படும் குழப்பங்களில் நடுவர், போட்டியாளர்கள், பார்வையாளர்கள் எல்லோருமே தலை முடியைப் பிய்த்துக்கொண்டு ஓட வேண்டியிருக்கும். அதைத் தவிர்த்து நடுவருக்கு உதவ ஒரு மிஷின் கண்டுபிடித்திருக்கிறார்கள் — நம்மவர்கள்! கோவை அரசினர் தொழில் நுட்பக் கல்லூரி எலெக்ட்ரானிக்ஸ் துறை பேராசிரியர் திரு சண்முகசுந்தரமும், விரிவுரையாளர்கள் திரு பீட்டர் ஸ்டேன்லி பெடிங்டனும், திரு இராமமூர்த்தியும்தாம் அவர்கள். இந்த மெஷின் குழப்பங்களைத் தவிர்க்கிறது.

இதே மெஷினைக் கல்லூரி எலெக்ஷனுக்காகவும் பயன்படுத்தப் போகிறார்களாம்... ஜாம்....ஜாம்...,ஜாம்.

-மார்ஷல்

பொருளாதாரம்

கறுப்புப் பணம்



டைபாய்ட் அல்லது மஞ்சள் காமாலை, அந்த அந்த நோய் கண்டவர்களை மட்டுமே பாதிக்கும். ஆனால் கறுப்புப் பண நோய் யாரைப் பீடித்துள்ளதோ அவர்களைக் கொழுக்க வைக்கிறது; மற்ற எல்லாரையும் பாதித்துத் துன்பப்படுத்துகிறது!

கறுப்புப் பணம் எவ்வளவு புழங்குகிறது நம் தேசத்தில் என்று யாருக்கும் நிச்சயமாய்த் தெரியாது. 7,500 கோடி முதல் 25,000 கோடி வரை பலவித மதிப்பீடுகள்.

கறுப்பு வெளுப்பாவதும், வெளுப்பு கறுப்பாவதும் உண்டு. லட்ச ரூபாய்க்குக் குடியிருப்பு வாங்குகிறவன் 75,000க்கு ரசீது பெற்றால் விற்பவனிடம் ரூ. 25,000 கறுப்புப் பணம் உருவாகிறது. கறுப்புப் பணம் தந்து ஒருவன் ஐந்து நட்சத்திர ஓட்டலில் ஆடம்பர பார்ட்டி கொடுத்தால் அது ஹோட்டல் நிர்வாகத்தினிடம் வெளுப்பாகி விடுகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஏகப்பட்ட கண்ட்ரோல்கள் வந்தன. யுத்தம் முடிந்தபின்னர்மேற்கத்திய நாடுகள்அவற்றை நீக்கிவிட்டன. நாம் நீக்கவில்லை. இதனால் ரொம்ப ஆபத்துக்கள் உண்டு என்று காந்திஜி மீண்டும் மீண்டும் எச்சரித்தார். உதாரணம்: 3–11–47ல் சொன்னார்: ''கண்ட்ரோல்கள், ஏமாற்று வேலைகளுக்கும் பதுக்கலுக்கும் செயற்கையான பற்றாக்குறைக்கும் உதவி, கறுப்புப் பணத்தை அதிகரிக்கச் செய்வன''. 33 ஆண்டுகள் ஆகியும் காந்திஜி சொன்னதை நாம் கேட்கவில்லை.

எனவேதான் 30 ரூபாய் செமண்ட் ரூ. 100க்கு விற்கிறது. அதாவது ஒரு மூட்டை செமண்ட் 70 ரூ. கறுப்புப் பணம் உருவாக்குகிறது. இப்படியே யூரியா, காகிதம், கார் டயர்கள், வனஸ்பதி, எஃகு போன்ற எல்லாம் கறுப்புப் பணம் உற்பத்தி செய்கின்றன. 74–75 முடிய ஒன்பது ஆண்டுகளில் இந்த ஆறு அம்சங்களில் மட்டும் 840 கோடி கறுப்புப் பணம் உருவானதாக ஒரு மதிப்பீடு.

கண்ட்ரோல்கள் தவிர அபரிமிதமான வரிகளும் கறுப்புப் பண உற்பத்திக்கு முக்கிய காரணம்.

குறிப்பிட்ட அளவுக்கு மேல் வருமானமுள்ள ஒரு டாக்டர், ஒரு ஆபரேஷனுக்கு ஆயிரம் ரூபாய் வாங்கினால் அதில் 977 ரூ. வரியாகப் போய்விடும். எனவே 1000 ரூ. சம்பாதிக்க அவர் மேலும் 44 ஆபரேஷன் செய்ய வேண்டும்! அல்லது இந்த ஒரு ஆபரேஷனோடு நிறுத்திக் கொண்டு வருமானத்தைக் கணக்கில் காட்டாமல் இருந்து விடலாம்! எது சுலபம்?

வருமான வரி மட்டுமல்ல, சுங்க வரி, உற்பத்தி ஸ்தானத்தில் எக்ஸைஸ் வரி; விற்பனை வரி போன்றவை மிதமிஞ்சினாலும் கறுப்புப் பணம் கொழிக்கும்.

ஒரு காலத்தில் கறுப்புப் பணத்தைத் தீண்டப் பயந்தார்கள். இன்று ஜம்பம் அடித்துக்கொள்ளும் விஷயமாகிவிட்டது.

தேர்தல்கள் உற்பத்தி செய்யும் கறுப்புப் பணம் ஏராளம். வேட்பாளர் ரூ. 35,000க்கு மேல் செலவழிக்கக் கூடாது என்று (அபத்தமான) சட்டம். நாடாளு மன்ற தேர்தலுக்கு நிற்பவர் குறைந்தபட்சம் ரூ. 5 லட்சம் செலவழிக்க நேரும் என்பது நாடறிந்த உண்மை. எனவே ஒவ்வொரு நாடாளு மன்ற வேட்பாளரும் 4,65,000 கறுப்புப் பணம் உருவாக்குகிறார். கறுப்புப் பணமாக நன்கொடை அல்லது 'கடன்' பெறுகிறார். கணக்கில் காட்டாமல் செலவழிக்கிறார். இதற்குப் பிரதி உபகாரம் பண்ண அவர் பதவிக்கு வந்த பின் சலுகை காட்டி அநீதிகள் இழைக்கிறார். இதனால் மேலும் கறுப்புப் பணம் உற்பத்தியாகிறது! ஆக மொத்தம் ஒரு லோக சபைத் தேர்தல் காரணமாக 400 கோடி கறுப்புப் பணம் உற்பத்தியாகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள்.

இப்படிப் பலவாறாகக் கறுப்புப் பணம் உருவாவதால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2500 கோடி வரி நஷ்டமாகிறது! நேர்மையான பிரஜைகளின் எண்ணிக்கை குறைகிறது. தேசம் மோசம் ஆகிறது!

கறுப்புப் பணத்தை ஒழிக்கிறேன் என்று பல உத்திகளைக் கையாண்டார்கள். ஆயிரம் ரூபாய் நோட்டு செல்லாது என்றார்கள்; கறுப்புப் பணப் பத்திரங்கள் வழங்கினார்கள்; ரெய்டு நடத்துகிறார்கள். எதுவும் எதிர்பார்த்த பலன் தரவில்லை.

நற்பலன் தரக்கூடிய வழிகள்: பல்வேறு வகையான வரிகளைக் குறைப்பது: அரசாங்க இயந்திரத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவது; கண்ட்ரோல்களை நீக்கி, தனியார் துறையை ஊக்குவித்து, உற்பத்தியை அதிகரிப்பது; தேர்தல் சட்டங்களில் அடிப்படையான, ஆரோக்கியமான மாறுதல்களைச்செய்வது ஆகியவைதாம்.

ஆதாரம்: டி. ஆர். பெண்ட்லே எகனாமிக் டைம்ஸில் எழுதியது

சுருக்கிய தமிழாக்கம்: குட்டி கிருஷ்ணன்

புகைப்படம்: உத்ரா



✠ ஒட்டு எலுமிச்சை

தோட்டக்கலை

ஒரே மரத்தில் 22 தினுசு பழங்கள்!



✠ தாத்தாச்சாரியார்

ஸ்ரீரங்கத்தில் ஒரு ஆச்சரியமான ஆசாமி இருக்கிறார்.

அவர் பெயர் எஸ். ஆர். வி. தாத்தம்.

இப்போது ரொம்பப் பிரசித்தமாக அடிபடுகிறதே அந்த மொட்டைக் கோபுரத்துக்கு இடப் பக்கம் திரும்பி, மேலூர் ரோடுவரை நடந்தால் இரண்டு பக்கமும் பசேல் என்று நூறு ஏக்கர் பார்வையில் படும். அதுதான் தாத்தாச்சாரியார் தோட்டம்.

என்ன ஆச்சரியம் என்று கேட்கிறீர்களா?

இந்தத் திருவாளர் தாத்தம் ஒட்டு வேலையிலே கெட்டிக்காரர்.

இங்கே ஒரு மாமரத்தில் இருபத்திரண்டு கிளைகள் இருக்கின்றன. ஒரு கிளை பங்கனபள்ளி காய்க்கிறது; இன்னொரு கிளையில் மல்கோவா பழுக்கிறது; மூன்றாவதில் நீலம் பிஞ்சு விடுகிறது! இப்படிக் கிளைக்கு ஒரு வகை மாம்பழம்!

விரை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமா?

மாவைப் பொறுத்த வரையில் நாம் போடும் கொட்டையிலிருந்து வரும் மரம் ரொம்ப சாதாரண வகைக் காய்களைத்தான் தருமாம். ஒட்டுக் கட்டுவதன் மூலம்தான் உயர் வகைப் பழங்களைப் பெற முடியுமாம்.

சரி.

இப்படி ஒரே மரத்திலே 22 வகைப் பழங்கள் விளையும்படி சாதனை செய்திருக்கிறீர்களே, என்ன பிரயோஜனம்?

ஒரு நிமிஷம் புன்னகையோடு பார்க்கிறார், தினம் டென்னிஸ் ஆடும் கட்டுக்கோப்புடன் கூடிய எழுபது வயது இளைஞர்.

''உங்க வீட்டிலே ஒரு மாமரத்துக்குத் தான் இடம் இருக்கு. ஆனா, வெரைட்டியாய்ப் பழம் சாப்பிட ஆசைப்படுகிறீர்கள் என்றால் இதுதானே ஒரே வழி?''

இந்த ஒட்டு வேலையை மாவுடன் நிறுத்திவிடவில்லை அந்தச் சாதனையாளர்.

ஒரே எலுமிச்சைச் செடியில் ஏழெட்டு வகைப் பழங்கள் உற்பத்தியாகும்படி செய்திருக்கிறார்.

சுத்தரிச் செடி ஆறு மாதம்தான் பலன் தருமாம். கண்டைச் செடி மூன்று வருடம் வாழும். இந்த இரண்டையும் ஒட்டி இவர் கண்டுபிடித்திருக்கிற செடியில் (கத்திரி என்று பெயர் வைக்கலாமோ?) மூன்று வருடம் கத்தரிக்காய் காய்க்கிறது.

இங்குள்ள மாவிலேயே 'ஹிமாம் பஸந்த்' தான் பிரமாதமான வகை என்று பழங்களை நறுக்கிக் குவிக்கிறார். வாயில் பாதம் அல்வாவாய்க் கரைகிறது அது.

எழுபத்தேழில் காவிரி வெள்ளம் பண்ணையைக் கணிசமாய்ச் சூறையாடிவிட்டது. உர மூட்டைகளும், தென்னை நாற்றுக்களும் ஏகமாய்ப் பாழாயின. சமாளித்து மறுபடி நிமிர்ந்து நிற்கிறது பண்ணை.

ஒட்டுப் பண்ணையில் ஒரு வெட்டும் நிகழ்ந்திருக்கிறது. — அதுதான் மேனேஜர் திரு சின்.

அமெரிக்கப் பெயரோ என்று அவரை நிமிர்ந்து பார்த்தேன். நம்மூர் திரு சின்னையன்தான். ஐயனை வெட்டிவிட்டு அழகாய்ச் சிரிக்கிறார் அவர்!

—ரமணீயன்

''டக்குன்னு சொல்லிட்டீங்களே! எனக்கு டி.வி. யில் நிகழ்ச்சி அறிவிப்பாளர் வேலை கிடைத்த சங்கதி உங்களுக்கு எப்படித் தெரிந்தது?''

''நீ தலையை, மேலிருந்து கீழே ஒரு தடவை; இடமிருந்து வலம் ஒருதடவை; கீழே இருந்து மேலே ஒரு தடவை மெல்ல அசைப்பதிலிருந்தே தெரிஞ்சுக் கிட்டேன்!''

—சுதர்ஸன்

குடும்பக் கதை

தனக்கென்று வரும்போது...

—நிவேதா

'பளார்'

மைதிலியின் கன்னத்தில் வேகமாய் விழுந்தது நாராயணனின் கை. தடுமாறினாள் அவள்.

பாதிச் சாப்பாட்டில் கையை உதறினான். கோபத்துடன் எழுந்து கொண்டான்.

''சாதத்தில் இவ்வளவு கற்களா? பார்த்துப் பொறுக்கி எடுத்துவிட்டுச் சமைத்திருக்கக் கூடாது? அதைவிட உனக்கு வேற என்ன வேலே?'' துர்வாசனுய்க் காட்சியளித்தான் நாராயணன்.

மைதிலி வார்த்தைகளைக் கொட்டிவிட்டாள், கணவனின் இட்டுக்களைப் பொறுத்துக் கொள்ள இயலாமல்.

''இன்னிக்குக் கொஞ்சம் லேட்டாத்தான் எழுந்தேன். உடம்பெல்லாம் ஒரே அசதி. அரிசியிலே கல் பொறுக்க முடியலே. தினமும்தான் கண்ணிலே விளக்கெண்ணெய் ஊத்திக்கிட்டுப் பார்க்கிறேனே? ஒரு நாள் கல் பொறுக்க முடியாமல் போனுல் 'அட்ஜஸ்ட்' செய்துக்கிட்டுப் போகணும்.''

''அம்மா மெதுவா எழுந்து கல்லோடும் மண்ணேடும் சமைப்பாங்க. அதையெல்லாம், சம்பாதித்துக் கொண்டு வந்து கொட்டற நான் தலைவிதியேன்னு சாப்பிட்டுவிட்டுப் போகணும், இல்லே?'' எரிமலையானுன் நாராயணன்.

''ஆயிரம் வேலைகளுக்கிடையே சில சமயம் இது மாதிரி நேர்ந்து விடுவது சகஜம். மத்த நாட்களிலே நல்லா சமைக்கலே? அப்போ ஒரு வார்த்தை பாராட்டிச்சொன்னதுண்டா? என் சமையல் பிடிக்கலேன்னு தாராளமாக ஓட்டல்லே சாப்பிட்டுக்கலாம். ஆட்சேபணை ஒன்றும் இல்லே.'' ஏதோ உணர்ச்சியில் பேசிவிட்டாள் மைதிலி. ஆத்திரத்தில் அறைந்துவிட்டான் நாராயணன்.

கோபத்துடன் ஆபீஸுக்குக் கிளம்பினான்.

ஆபீஸில் நுழைந்த நாராயணனுக்கு எரிச்சலாக இருந்தது. ஃபேன், லைட் இல்லே. பவர்கட்!

தன் சீட்டில் அமர்ந்து கொள்வதற்குள் பியூன் வந்து மானேஜர் அழைப்பதாகச் சொல்லவே, 'காலையில் வந்தவுடனேயே என்ன ரோதனை இது?' என்றபடி சென்றான் நாராயணன்.

''மிஸ்டர்! நேற்று நீங்க போட்டுக் கொடுத்த ஸ்டேட்மெண்டிலே ஏகத் தப்புக்கள். அடித்தல் — திருத்தல் வேறே. ஒரு சின்ன விஷயத்தைக் கூட உங்களாலே ஒழுங்காச் செய்ய முடியலேயே?'' மேனேஜர் கேட்டார்.

''சார்! எப்படியோ தவறு நடந்துவிட்டது. ஆயிரம் வேலைகளுக்கு மத்தியிலே இப்படி நேரத்தான் செய்யும். மற்ற நாட்களிலே சரியாச் செய்யலேயா? அப்போவெல்லாம் ஒரு வார்த்தை பாராட்டிச் சொல்லியிருக்கிங்களா? இப்போ இவ்வளவு சொல்றீங்களே?'' என்றான் நாராயணன்.

''இங்க பாருங்க மிஸ்டர், நீங்க செய்யற ஒவ்வொரு வேலைக்கும் பாராட்டிக்கிட்டு இருக்க முடியாது. தப்பை மட்டும்தான் இங்கே கண்டு பிடிப்போம். இந்த ஸ்டேட்மெண்டை ஒழுங்காப் போட்டு எடுத்துக்கிட்டு வாங்க'' ஸ்டேட்மெண்டை நாராயணனை நோக்கி வீசி எறிந்தார்.

சே! — முணு முணுத்தபடி தன் சீட்டுக்குச் சென்றான் நாராயணன்.

இரவு.

'படக்.'

நாராயணன் சாதத்தை மெல்லும்போது கடைவாயில் கல் அடிபட்டது.

''காலேல வடித்த சாதம்தான். அதான் அப்படியே கல்லு.... நாளைக்கு ஒழுங்கா சமைக்கிறேன்...''

''பரவாயில்லே. ஆயிரம் வேலைகளுக்கு இடையே சமையல் செய்திருப்பே. இது மாதிரிச் சின்னத் தவறு ஏற்படுவது சகஜம்தான். அட்ஜஸ்ட் செய்துகிட்டுத்தான் போகணும். நாளைக்குப் பார்த்துச் சமை'' என்ற நாராயணன் சாப்பிட ஆரம்பித்தான் அமைதியாக.



சாலிடெர் அ
வைத்திருப்
வருந்த




நீங்கள் மிகவும் விரும்பும் கிரிக்கெட் டெஸ்ட்
மாட்ச் ஒளிபரப்பப் படுகிறது. ஆனால்
உங்களால் அதைக் கண்டு களிக்க
இயலாதபடி படம் தெளிவாக இல்லாமல்
மங்கலாக உள்ளது. அல்லது உங்களுக்
இசைவான இசைக்கச்சேரி
இன்னமுதாய் இனிக்கையில்
தேவையில்லாத வெளிப்புற
ஓசைகள் கலந்து, திடீரென ஒலி
நின்றுவிட்டால் எப்படி
இருக்கும் உங்களுக்கு?

)லாது வேறு டிவ
ிவர்கள்
கூடிய நேரங்கள் பல

சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களில் காட்டப்பட இருக்கும் திரைப்படத்தை ஏக்கத்துடன் எதிர்பார்த்துக் கொண் டிருக்கையில் படம் நெளிந்து கோணலாகத் தெரிகிறது. பலமுறை போன் செய்தும் சர்வீஸ் என்ஜினியர் தலைகாட் டாமல் இருந்தால் எரிச்சலூட்டாதோ உங்களுக்கு?

டிவி செட்டை பழுதுபார்க்க நீங்களே சர்வீஸ் சென்டருக்கு தூக்கிச் செல்லும் படி நேர்ந்தால் எரியும் நெருப்பில் எண்ணெய் விடுவது போன்றிருக்காதோ உங்களுக்கு? இத்தகைய டிவியை வாங்கியதற்காக நீங்களே உங்களைச் சபித்துக்கொள்ள நேரிடும்.




இத்தகைய நிலை உங்களுக்கு நேராமலிருக்க நீங்கள் வாங்கும் டிவி சாலிடெராக இருக்கட்டும். சாலிடெர் டிவி வைத்திருப்போரிடம் விசாரித்து நீங்களே நிரூபணம் செய்துகொள்ளுங்கள். சாலிடெர் டிவி வைத்திருப்போருக்கு இத்தகைய நிலை ஏற்பட வாய்ப்பில்லை. ஏனெனில் இதில் மிகச்சிறந்த தரமிகுந்த உறுப்புகளும், உலகப் புகழ்பெற்ற பிக்சர் ட்யூபுகளுமே உபயோகிக்கப் படுகின்றன. இதனால் படக்காட்சிகள் மிகத் துல்லியமாகவும், ஒலி வெகு சீரானதாகவும் இருக்கின்றது. சர்வீஸ் தேவைப்படும்படியான சந்தர்ப்பம் நேர்ந்தால், சிறந்த பராமரிப்புக்குப் பறந்தோடி வருவர் சாலிடெர் சர்வீஸ் என்ஜினியர்கள், இவர்கள் மிகவும் சுமூகமானவர்கள். கடமையில் கண்ணும் கருத்துமாய் இருப்பர். வார 7 நாட் களிலும் சிறந்த பராமரிப்பு. சென்னையிலிருந்து 160 கி.மீ. தொலைவில் வசிப்பவர்களின் சௌகரியத்திற்காக காஞ்சிபுரம் மற்றும் பாண்டிச்சேரியிலும் சர்வீஸ் வசதி. மொத்தத்தில், மட்டற்ற மகிழ்ச்சிக்கு சாலிடெர் ஒரு உத்தரவாதம்.

சாலிடெர்

உங்கள் டிவியின் கிரஹிப்புத் தன்மையை அதிகரிக்கலாம்.

சென்னை டிவி நிலையத்திலிருந்து 85 கி.மீட்டருக்கு அப்பால் வசிப்பவர் சாலிடெர் டிவி பூஸ்டரை இணைப்பதன் மூலம், தங்களது டிவியில் (எந்தவொரு டிவியானாலும்) தெளிவான படக் காட்சிகளை பெறலாம். விவரங்களுக்கு அருகிலுள்ள டீலரை அணுகவும்.

HE. 260


இலங்கை கலவரம்
பாரதம்
பாக்
ஆயுதக் குறைப்பு யோசனை
தமிழக அரசு
அரசு ஊழியர்கள்
கிளர்ச்சி

தலையங்கம்

பிரதமரின் லட்சியநோக்கு

நய்ரோபி. ஐ.நா. சபை ஆதரவில் மாநாடு. நமது பிரதமர் பேசுகிறார்: ''பெட்ரோலியம் போன்ற இயற்கை எரிபொருள்களைக் கண்மூடித்தனமாகச் செலவிட்டு அபிவிருத்தி அடைந்த நாடுகள் வீணடிக்கக் கூடாது. பின் தங்கியுள்ள நாடுகள் முன்னேற அவர்களுக்கு மின் உற்பத்தி செய்யும் புது உபாயங்களைக் கொடுத்து உதவவேண்டும். சூரியசக்தி, காற்றுசக்தி போன்றவற்றைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் மார்க்கங்களில் சர்வதேச ஒத்துழைப்பு வேண்டும்.''

கேட்பதற்கு நன்றாயிருக்கிறது. பிரதமர் பேசியிருப்பது தன்னலமற்ற இலட்சிய நோக்கின் உன்னத நிலை. ஆனால் யதார்த்த உலகம் அவர் நினைக்கிறபடி இல்லை. அது தன்னலமே பேணுகிறது. தனக்கு லாபமின்றிப் பிறருக்கு உதவ இன்று யாரும் முன் வருவதில்லை.

அரபு நாடுகள் நாளுக்கு நாள் பெட்ரோலியம் விலையை உயர்த்துகின்றன. இன்னும் சில காலத்தில் பெட்ரோலியம் எண்ணெய்க் கிணறுகள் வற்றிவிடும். எனவே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்கின்றன.

மேல் நாடுகள் இதனை உணர்ந்து சூரியசக்தி, காற்றுசக்தி, கடல் அலைகளின் சக்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி மின் உற்பத்திக்கு வழி தேடுகின்றன. இதில் அவர்கள் வெற்றி பெறும் போது பெட்ரோலியம் அங்கே மதிப்பிழந்து போகும்.

அதிக நம்பிக்கை தருவது சூரியசக்தி. அதைப் பயன்படுத்தினால் மின் உற்பத்திக்கு இன்று யூனிட் ஒன்றுக்கு 2 டாலர் முதல் 5 டாலர் வரை ஆகிறது. இதை 25 செண்ட் ஆகக்குறைக்க அமெரிக்காவில் முயற்சி நடக்கிறது.

இதற்காக அவர்கள் கோடிக் கணக்கான டாலர்களைச் செலவிட்டு வருகிறார்கள். ஆய்வில் வெற்றி பெற்றபின் இந்தப் பணத்தை வட்டியும் முதலுமாகத் திரும்பப் பெறவே விரும்புவார்கள். சர்வதேச ஒத்துழைப்பு பணத்தின் அடிப்படையிலேயே இருக்கும்.

எனவே பிரதமரின் லட்சிய நோக்கு ஈடேற வாய்ப்பு இருப்பதாகத் தோன்றவில்லை. நாமே முயன்று பாடுபட்டு ஆய்வுகள் நடத்துவதே வழி. இதற்கு நமது சிறந்த விஞ்ஞானிகளை ஊக்குவிக்கவேண்டும். செய்கிறோமா? இல்லையே!

நமது தேசத்தின் மூளைச் செல்வமெல்லாம் அயல் நாடுகளில் குடியேறுகின்றன. அங்கே சாதனைகளை நிகழ்த்துகின்றன. காரணம் இங்கு வருவாய் குறைவு என்பதல்ல; மதிக்கப்படாதது தான்! சிவப்புநாடா, பொறாமை, மட்டம் தட்டல், ஜாதிப்பிரச்னை இவை ஏதும் மேனாடுகளில் இல்லை. தாய் நாட்டுக்கு உழைக்காவிடினும் விஞ்ஞான உலகுக்குப் பணியாற்றும் திருப்தி கிடைக்கிறது.

ஜப்பான் தனது விஞ்ஞானிகளையும் தனியார் துறை தொழிலதிபர்களையும் வியாபாரிகளையும் எப்படி ஊக்குவித்துள்ளது பாருங்கள்! உலகம் போற்றிய அமெரிக்க கார் கம்பெனிகள் ஜப்பானியரின் போட்டி தாங்காது ஆட்டம் கண்டன. உலகப்பிரசித்தி பெற்ற ரோலிஃப்ளெக்ஸ் காமிரா கம்பெனிக்கு மேற்கு ஜெர்மனியில் மூடுவிழா - ஜப்பானிய காமிராக்களின் போட்டி காரணமாக.

சின்னஞ்சிறுநாடு இஸ்ரேல். மணல் பாங்கான சத்தில்லாத பூமி. எனவே அவர்கள் காலிபெட்டிகளில் வெறும் காற்றில் செடிகளை வேர்விட்டு வளரச் செய்கிறார்கள்! மூடிக்குமேலே வளரும் செடி; மூடிக்குக் கீழே நீராவியும் வாயுருபத்தில்

1981 ஆகஸ்டு 30

துன்மதி ஆவணி 14

மலர்: 40 இதழ்: 5



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

உணவுச் சத்தும் கலந்த காற்றில் தழைக்கும் வேர்கள்! மழை குறைவான அத்தேசத்தில் வானிலிருந்து சொட்டும் ஒவ்வொருதுளி நீரையும் வீணாக்காது பயன் படுத்துகிறார்கள். விஞ்ஞானிகளின் மதிப்பை உணர்ந்த தேசம் அது.


இரவு, பகல், கோடை, குளிர் என்று எக்காலத்திலும் சூரிய சக்தியைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் முதல் மின்நிலையம் இஸ்ரேலில் ஏற்கெனவே இயங்குகிறது. தவிர, சோடியம் - பொட்டாஷியம் கலவையான ஒரு திரவத்தையும் சூரிய சக்தியையும் பயன் படுத்தி மின் காந்தப்பரப்பில் மிக சல்லிசாக மின் உற்பத்தி செய்யலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார் இஸ்ரேலியப் பேராசிரியர் பிராணேவர். இஸ்ரேலுடன் நம் அரசு 'டூ' விட்டிருக்கிறது!

நமது விஞ்ஞானக் கூடங்கள் அழுது வடிகின்றன. நமது விஞ்ஞானிகள் தற்கொலை செய்து கொண்டதாக அவ்வப்போது செய்திகள் வருகின்றன. முன்னேறுவதாவது?

விஞ்ஞானத்துக்கும், சகல துறைகளிலும் விஞ்ஞான ரீதியான அணுகுமுறைக்கும் வழிவிட்டு அரசியல் ஒதுங்கிக் கொண்டால்தான் தேசம் உருப்படும்.

சமையல் குறிப்பு

[illegible]



தாஜ் கோரமண்டல் ஓட்டலில் பிரதம சமையல்காரராகப் பணியாற்றுபவர் ராஜீவ் ஷெத். டெல்லியில் இதற்கென்றே படித்துப் பயிற்சி பெற்றிருக்கும் இவர் உலகின் பல பாகங்களுக்கும் சென்று வந்திருக்கிறார். பதினொரு வருடங்களாகத் தாஜில் இருக்கும் இவர், சென்னைக்கு வந்து சில வருடங்கள் தான் ஆகிறது.

இவரைச் சந்தித்தபோது கிடைத்த இரண்டு குறிப்புக்கள்:

பச்சை வாழைப்பழ உருண்டை (Kebabs)

தேவையான பொருட்கள்:
2 வாழைப்பழங்கள் (நடுத்தரம்)
கடலை மாவு (ஒரு டேபிள் ஸ்பூன்)
தனியா பொடி (டீஸ்பூன் அளவு)
மசாலாப் பொடி (சிட்டிகை)
தயிர் ஒரு கப்
இஞ்சித் துண்டுகள்
பச்சை மிளகாய் 2
வேண்டிய அளவு உப்பு, மிளகுப் பொடி
வறுப்பதற்குத் தேவையான அளவு நெய்.


வாழைப்பழங்களை அதன் தோல்கள் மென்மையாகும்வரை கொதிக்க வைக்கவும். பின், தோலை உரித்து நன்றாக மசிக்கவும். சலிக்கப் பட்ட கடலை மா, தனியாப் பொடி, மசாலா பொடி, உப்பு, மிளகு பொடி (மேலே சொல்லப்பட்ட அளவு) சேர்க்கவும். தயிரைக் குழப்பிக்கொண்டு அதில் மசிக்கப்பட்ட வாழைப்பழங்களைச் சேர்த்து நன்றாகக் கலக்கவும். தேவைப்பட்டால் சிறிதளவு தண்ணீர் சேர்க்கவும். மறுபடி ஒரு முறை கலக்கவும்.

இந்தக் கலவையை வறுத்துக்கொண்டு அதில் இஞ்சி, பச்சை மிளகாய்த் துண்டுகளைச் சேர்க்கவும். உருண்டைகளாக உருட்டிக்கொண்ட பின்னர் அவற்றை வாணலியில் நெய்யுடன் வதக்கவும்.

பரிமாறும்போது - புதினா சேர்த்துப் பரிமாறவும்.

தயிர்க் கோழி

ஒரு கோழி
350 கிராம் தயிர்
இரண்டு டேபிள்ஸ்பூன் நெய்



★ ராஜீவ் ஷெத்


ஏலக்காய்கள்
இஞ்சித் துண்டுகள்
பச்சை மிளகாய், உப்பு.

கோழியைத் துண்டுகளாக்கி வைத்துக் கொள்ளவும். நெய்யை உருக்கிக்கொண்டு, அதில் பச்சை மிளகாயையும் ஏலக்காயையும் சேர்க்கவும். இந்த நெய் நன்றாகக் காய்ந்தவுடன், கோழித் துண்டுகளைச் சேர்த்துப் பொன்னிறமாக வறுக்கவும். பிறகு தயிரைச் சேர்த்து வேக வைக்கவும். தொடர்ந்து கிளறிக்கொண்டே இருக்கவும். கோழி நன்றாக வெந்த பிறகு தேவையான அளவு உப்பு சேர்க்கவும். தயாரிக்கப்பட்ட பிறகு பார்ப்பதற்குக் 'க்ரீம்' போல இருக்கும். சாதத்துடன் சேர்த்து உண்பதற்கு ருசியாக இருக்கும்.

பேட்டி : ஈஸ்வர்குமார்

தளதா மளிகவா

— ஓவியன்



உலகத்தில் உள்ள பௌத்தர்கள் அனைவருக்கும் மிகவும் புனிதமான ஒரு கோயிலை 1975ல் இலங்கைக்குச் சென்றபோது கண்டேன். இந்தக் கோயிலுக்கு தளதா மளிகவா என்று பெயர். புத்தபிரானின் புனிதப் பல் ஒன்றை இங்கு பிரதிஷ்டை செய்து வழிபடுகிறார்கள். அதுபோல் ஒரு புனிதப் பல் சின்னம் உலகத்தில் வேறு எங்கும் கிடையா.

கலிங்க தேசத்திலிருந்து கி. பி. 383ல் இலங்கைக்கு வந்த ஒரு பிராமணப் பெண்மணி அதைத் தனது முந்தானையில் முடிந்து மறைத்து எடுத்துக் கொண்டுவந்ததாக மகா வம்சம் என்ற இலங்கை வரலாற்றுச் சுவடி கூறுகிறது. அவள் பிராமணப் பெண் அல்ல, ஒரு இளவரசி என்று வேறு ஒரு கூற்றும் நிலவுகிறது.

அப்போது அநுராதபுரத்தைத்தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்டு வந்த சிரிமேகவண்ணு என்ற அரசன் (.கி.பி. 362–391) அந்தப் புனிதப் பல் சின்னத்தைப் பயபக்தியாகப் பெற்று ஒரு தூய ஸ்படிகப் பேழையில் வைத்து ஒரு பெரிய விழா எடுத்ததாக மகா வம்சம் கூறுகிறது. அதற்கு அவன் ஒன்பது லட்சம் காஹ பணம் (பொற்காசுகள்) செலவிட்டானும்.

விழா முடிந்ததும் அதை 'தம்ம காக்கா' என்ற கோயிலில் பிரதிஷ்டை செய்தான். அந்தக் கோயிலுக்குள்ள விசேஷம் அதைக் கட்டியவன் இலங்கையில் முதல் முதலாக புத்த மதத்தைத் தழுவிய தேவ நம்பியா திஸ்ஸா என்றஅரசன் என்பதுதான். பின்னால் நடந்த பல யுத்தங்களில் இந்தப் புனிதப் பல் பல கை மாறிப் பல இடங்களில் பிரதிஷ்டையாகி, கடைசியாக இரண்டாம் விமல தர்ம சூரியா என்ற அரசன் கட்டிய தளதா மளிகவாவில்தான் இந்தப் புனிதச் சின்னம் இப்போது இருக்கிறது.

தங்கத்தில் செய்த ஒரு தாமரைப் பூவில் மகரந்தக் காம்பு போல் நீட்டிய இரண்டு தங்கக் கம்பிகளில் இந்தப் புனிதப் பல்லைப் பொருத்தி வைத்திருக்கிறார்கள். அந்தத் தாமரைப் பூவை ஒரு ஸ்படிகப் பேழையில் வைத்துப் பிறகு ஒன்றுக்குள் ஒன்றாய் அடுக்கிய ஏழு தங்கப் பேழைகளுக்குள் அதை வைத்துப் பத்திரப்படுத்தியுள்ளார்கள். தங்கப் பேழைகள் யாவும் புத்த கோபுர வடிவில் (டகோபா வடிவில்) செய்யப்பட்டவை. மிகவும் அபூர்வமான அந்தப் புனிதப் பல் சின்னத்தை எத்தனையோ பௌத்த நாடுகள் பேரம் பேசிப் பார்த்தன. பழைய சயாம் (இன்றைய தாய்லாந்து) அந்தக் காலத்தில் மிகவும் பெரிய தொகையாகக் கருதப்பட்ட ஐம்பதினாயிரம் பவுன் இங்கிலீஷ் நாணயம் தருவதாகப் பேரம் பேசியது. பர்மா இரண்டு விசேஷத் தூதர்களை விலை பேசுவதற்கென்றே அனுப்பிற்று. ஆனால் கிடைத்தற்கரிய அந்தப் பொக்கிஷத்தை இழக்க இலங்கை உடன்படவில்லை.

அந்தப் புனிதச் சின்னத்தை தளதா மளிகவாவின் கருவறையில் பூட்டி வைத்திருக்கிறார்கள். கதவின் முன்னால் இரு பொன் துகில் திரையிடப்பட்டிருக்கிறது.

படம் : தளதா மளிகவா - முகப்புத் தோற்றம்.

சுற்றுலா

திரையின் முன்னால் காலை, மாலை, நண்பகல் என்று மூன்று வேளை வழிபாடு நடக்கிறது. பக்தர்கள் தாமரைப் பூவையும் மல்லிகையையும்சாத்திவிட்டுத்தரையில் துண்டுவிரித்து அதன் மீது மண்டியிட்டு வணங்குகிறார்கள். அகல் விளக்கும் ஏற்றுகிறார்கள்.

கொழும்பு நகரத்திலிருந்து 75 மைல் தொலைவிலுள்ள கண்டி நகரம் கடல் மட்டத்திலிருந்து ஆயிரம் அடி உயரத்திலுள்ள மலைப் பிரதேசம். ஊருக்குள் பிரதான வீதியில் அரை மைல் தூரம் சென்றால் தளதாமளிகவாவை அடையாளம் காணலாம். இரண்டு மாடிக் கட்டிடமான அதன் கூரை எண் கோண வடிவில் அமைந்திருப்பது தான் அதன் விசேஷம். மாளிகையைச் சுற்றி அகழி. அகழியில் ஆமையும் மீனும் ஏராளமாயிருக்கின்றன. அவற்றுக்குப் பக்தர்கள் பொரியும் அவலும் வாங்கிப் போடுகிறார்கள்.

மாளிகைக்குள் பல கட்டிடங்கள் வகை தொகை இல்லாமல் கட்டப்பட்டிருக்கின்றன. அவை புத்த பிட்சுக்களின் மடமாக இருக்கின்றன. கருவறைக்குப் பக்கத்திலுள்ள அறைகளில் பழைய ஓலைச் சுவடிகளைப் பாதுகாத்து வைத்துள்ளார்கள்.

கோயில் முன்னால் தெப்பக்குளம் இருப்பது போல் தளதா மளிவாவின் முன்னால் மிகப்பெரிய செயற்கை ஏரி இருக்கிறது. ஊருக்குள் பிரதான வீதியில் அழகூட்டும் அந்த ஏரிதான் பிரசித்தி பெற்ற கண்டி ஏரி.

தளிதா மளிகவாவில் நடைபெறும் மிகப் பெரிய திருவிழாவை எசலா பெரரா என்பார்கள். எசலா என்பது சிங்கள எட்டாவது மாதத்தின் பெயர். ஜூலை ஆகஸ்ட்டுக்கு இடையில் வருவது. பெரரா திருவிழாவில் அலங்கரித்த யானை மீது புனிதப் பல் சின்னம் ஊர் வலம் வரும். ஆனால் இது நிஜமான புனிதப் பல் அல்ல. அதன் நகல். நிஜப் பல்லை எக் காரணம் கொண்டும் வெளியே கொண்டு வருவதேயில்லை.

சாதாரணமாக அந்தப் புனிதப் பல்லைப் பார்க்க முடியாது. மிகவும் முக்கியமான திருவிழா சமயங்களில் மட்டும் வழிபாட்டுக்காகத் திறந்து வைப்பார்கள். அதை வழிபடுகிறவர்கள் செலுத்தியுள்ள காணிக்கைகள் மலைப்பூட்டக்கூடியவை.

தேர் வடம் போல் தங்கச் சங்கிலிகள் கணக்கிலடங்கா. நவரத்தின மிழைத்த தங்கப் பேழைகள் குவியல் குவியலாய் மாணிக்கம், மரகதம், வைடூரியம், கோமேதகம் என்று நவரத்தினக் கற்கள், உலகத்திலேயே விலை மதிக்க முடியாத மிகப் பெரிய ஒற்றைக் கோமேதகத்தில் செய்த புத்தர் சிலை, விலையுயர்ந்த தந்தச் சிலைகள், சையாம் நாட்டு இளவரசியின் கூந்தலில் செய்த வெஞ்சாமரம்! இப்படி எத்தனை எத்தனையோ!

புத்த பிரானின் புனிதப் பல் சின்னத்தின் முன்னால் உலகச் செல்வமெல்லாம் மண்டியிட்டிருக்கின்றன என்று தாராளமாகச் சொல்லலாம்.

சமயம் - வழிபாடு



அருள்வாக்கு

சித்த சுத்தி தேவை

இந்த உலகத்தை யெல்லாம் படைக்கிறவன் யார்? அவனைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நம்முடைய சித்தத்தை அழுக்கில்லாமல் ஆடாமல் வைத்துக்கொள்ள வேண்டும். கெட்ட எண்ணம் வந்து அழுக்குப் படிந்தால் ஒன்றும் தெரியாது.

தாமிரச் செம்பு ஒன்று கிணற்றில் பத்து வருஷங்கள் மூழ்கிக் கிடந்தது என்றால் அதைப் பளபளப்பாக்க எவ்வளவு தேய்க்க வேண்டும். தேய்க்கத் தேய்க்க அது சுத்தமடைந்து வெளுக்கிறது. இவ்வளவு வருஷ காலம் எத்தனை கெட்ட காரியங்களைச் செய்து நம்முடைய சித்தத்தில் அழுக்கை ஏற்றிக் கொண்டு விட்டோம். அந்த அழுக்கைப் போக்க அவ்வளவு நல்ல காரியங்களைச் செய்து மனத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். அப்போதுதான் சித்த சுத்தி வரும். நல்ல சீலங்கள் உண்டாகும்.

''சித்த சுத்தி பண்ணிக் கொண்டு ஏகாக்கிரக சித்தத்தோடு உன் உள்ளே ஆண்டவனைப் பார். கோயிலில் இருக்கும் ஆண்டவன் உன் உள்ளும் இருக்கிறான்'' என்கிறது நமது மதம். இதையே ஆதாரமாகக் கொண்டு ''கோயிலுக்குப் போகவேண்டாம். கோயிலே, வேண்டாம். விக்கிரக ஆராதனை தப்பு; கடவுள் நம் உள்ளத்துக்குள் இருக்கிறார்'' என்று சொல்வது ஒரு புது மதம்!

எப்படி இருந்தாலும் யாரை வழிபட்டாலும் முடிவான இறைவனை நினைத்து வழிபடு.

–ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

பொன்மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்



○ நாடோடி மன்னன் படத்தில் எம். ஜி. ஆர். சரோஜாதேவி

சினிமாத் தொடர்

வித்துவான் வே. லட்சுமணன்

3

"**பா**த்திரம் நிறையப் பாலைக் கண்டு பழகிய உங்களுக்குச் சாக்கடை நடுவே வாழும் மக்களின் நிலை புரியாதென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இரண்டாயிரம் ஆடைகளில் எதை அணிவது என்று புரியாது திண்டாடும் நீங்கள், ஏதாவது ஓர் ஆடை இருந்தால் மானத்தைக் காக்க உடலை மறைக்கலாமே என்று ஏங்கும் ஏழைகளைப் பற்றி எப்படி அறிந்து கொள்ள முடியும்?"

—இந்த உரையாடலைச் சிந்தனை செய்ய வேண்டும்.

"நாடோடி மன்னன்" படத்தில் 'வீராங்க'னாக வரும் பொன் மனச் செம்மல் பேசுகிற பல வசனங்களில் ஒன்று இது.

இது போன்ற வசனங்களைக் காட்சிகளோடு பொருத்திக் கச்சிதமாக முழக்கமிட்டால், படம் பார்ப்பவர்களின் நெஞ்சத்தில் பரபரப்பும் எழுச்சியும் ஏற்படாமலா போகும்?

இதில் ஓர் அரிய உண்மையும் உண்டு.

"பாடுவோர் பாடினால் ஆடத் தோன்றும்" என்பார்கள். அதுபோல் பேசுவோர் பேசினால்தான் எழுச்சி உண்டாக முடியும்.

பொன்மனச் செம்மல் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த இலட்சியங்களை, ஆற்றிய தொண்டுகளைப் பிரதிபலித்த காரணத்தாலேயே இந்த மாதிரி உரையாடல்களுக்கு முக்கியத்துவம் உண்டாயிற்று.

நடிப்பை 'நடிப்பு' என்ற கண்ணோட்டத்தில் பார்ப்பது வேறு.

நடிப்பை வாழ்க்கையின் நடப்போடு இணைத்துப் பார்ப்பது வேறு.

மக்கள் திலகம் அவர்கள் மேற்சொன்ன இரண்டு வகைகளில் இரண்டாவது வகையாலேயே அதிகமாகப் பார்க்கப்பட்டவர்.

நடப்பு வாழ்க்கையில் ஏழைகளுக்கு உதவி செய்தார். கல்விக் கூடங்களுக்கு நன்கொடை வழங்கினார். மாதர் நல விடுதிகளின் அபிவிருத்திக்கு மானியம் வழங்கினார். தேசிய சேமிப்பு நிதிக்குப் பெரும் பொருள் அளித்தார். எளிய ரிக்ஷாக்காரர்களுக்கு மழைக் கோட்டு வழங்கினார்.

இன்னும் எந்தெந்த வகைகளில் யார் யாருக்கு உதவ வேண்டுமோ அத்தனையும் செய்தார்.

புயல், வெள்ளச் சேதமா? முன்னால் போய் நின்று தொண்டாற்றுவார்.

தீயால் உடைமைகளை இழந்தார்களா? தக்க உதவிகளைச் செய்வார்.

இப்படியெல்லாம் மக்கள் நலத்தையே தம் நல்மாகக் கருதிச்செயல்பட்ட காரணத்தாலேயே சொல் மேடைகளிலும் சரி, வெள்ளித் திரைகளிலும் சரி, எம். ஜி. ஆர். அவர்களின் நாவிலிருந்து வெளிவரும் சொற்களுக்கு மந்திரசக்தி போன்ற ஒரு கவர்ச்சி ஏற்பட்டது.

சொல்லும் செயலும் ஒன்றானால் வெல்லும் கீர்த்தி ஏற்படத் தடை ஏது?

"என் இரத்தத்தின் இரத்தமே!" என்று அழைத்தாரானால், அந்த அழைப்பின் அரவணைப்பில் எத்தனை உள்ளங்கள் நெகிழ்ந்து விடுகின்றன!

ஏன்? என்ன சக்தி இது?

''வாய்மை, தூய்மை, நேர்மை'' என்ற மூன்று 'மை'களைத் தவிர வேறு மாயமான 'மை'களுக்கு அங்கு இடமில்லை! இது மக்கள் தீர்ப்பாயிற்று. காலத்தின் கணிப்பாகவும் உறுதியாயிற்று.

தங்கள் குடும்பத்தில் ஒருவராகவும் தங்கள் வாழ்வுக்கு வழி காட்டியாகவும் உள்ளவர் இவர் என்று பல்லாயிரக் கணக்கானவர்கள் கருதினார்கள்.

சமுதாய மறுமலர்ச்சிக்கு எத்தனையோ மகான்களின் மகத்தான தொண்டுகளைக் கண்ட நாடு இது.

சமூகப் புரட்சிக்கும் கிளர்ச்சிக்கும்கூட மாபெரும் தலைவர்களைத் தோற்றுவித்த நாடு இது.

புரட்சி, கிளர்ச்சி, மலர்ச்சி என்ற இவை யாவும் 'அன்பு' என்கிற அஸ்திவாரத்தின் மீது எழுதப்படுகிற அஹிம்சை மாளிகையாக ஒளிர வேண்டும் என்பதில் யாருக்கும் 'இசைவு' இருக்க வேண்டும்.

கொலை செய்து கோபுரம் கட்டுவதால் பயனில்லை. தூய கொள்கைகளின் அடிப்படை மனிதாபிமானம் ஒன்றுதான்!

அந்த மனிதாபிமானத்தை ஒவ்வொரு சொல்லிலும் செயலிலும் பொன்மனச் செம்மல் வெளிப்படுத்தினார். இதனால் எண்ணிக்கையைக் கடந்த நல்லோர்களின் இதயத்தில் இடம் பெற்றார்.

இந்த வாய்ப்பைப் பெறுவதற்குத் திரைப்படம் என்கிற சாதனம் பலமான ஒருதுணையாக அமைந்தது என்றும் அதை அவ்வண்ணம் இவரே அமைத்துக் கொண்டார் என்றும் சொல்ல வேண்டும். இதனால் இவர் சார்ந்த இயக்கமும் வளர்ந்து முன்னேறியது உண்மை. அந்த இயக்க வளர்ச்சியின் விசேடங்களைப் பற்றிப் பிறகு சொல்லவிருக்கிறேன்.

இவரது வளர்ச்சியின் காரணமாகத் தமிழ்த் திரையுலகம் பெற்ற வளர்ச்சி முதலாவதாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

சாதாரணமாக ஒரு நாளில் மூன்று காட்சிகள் ஒரு கொட்டகையில் நடப்பது வழக்கம். நான்கு என்பது அபூர்வம். 'ஐந்து' காட்சிகள் அபூர்வத்திலும் அபூர்வம் அல்லவா?

'மக்கள் திலகம்' அவர்களின் பல படங்கள் இத்தகைய அபூர்வ சாதனைகளைக் கண்டிருக்கின்றன. அணை போட்டுத் தடுக்க முடியாத அளவுக்கு ஆர்வம் என்கிற பெரு வெள்ளம் புரண்டு வரும்போது எப்படியாவது அதற்கு ஈடு கொடுக்க வேண்டுமல்லவா? அதனாலேயே ஐந்துகாட்சிகள் நடத்துவார்கள்! அத்தனை காட்சிகளிலும் கொட்டகை நிறைந்து, மேலும் காத்திருக்கும் ரசிகர் கூட்டம்.

'ரசிகர்' என்ற வார்த்தைக்கே ஒரு தனிச் சிறப்பு உண்டானது தமிழ் நாட்டில்தான். அதுவும் பொன் மனச் செம்மலால்தான்.

கலைஞர்கள் எல்லோருக்குமே ரசிகர்கள் இருப்பது இயற்கை. ரசிகர்கள் இல்லையென்றால் கலைஞர்களும் இல்லை; கலையும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆனால், மக்கள் திலகம் அவர்களின் ரசிகர்களுக்கு ஒரு தனித் தன்மை இருந்து வந்ததை நான் அறிந்திருக்கிறேன்.

அவரது பெயரை வெள்ளித் திரையில் கண்டதும் கர ஒலி எழுப்பி, பூமாரி பொழிவார்கள்!

அவர் முதன் முதலாகத் திரையில் தோன்றும் காட்சி வரும்போதும் பூமாரி பொழிவார்கள்.

தனக்கே உரிய பாணியில் அவர் சில 'சைகை'களைக் காட்டும்போது கொட்டகை அலறும்.

கையிலே வாளை எடுத்தார் என்றால், அப்போது ஆரம்பிக்கும் கரகோஷம் கடைசி வீச்சு வரை நீடிக்கும்!

ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அவர் தாவினாரானால் ரசிகர்கள் தங்கள் இருக்கையில் எழுந்து குதிப்பார்கள்.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம், இந்த ரசிகர்களின் அன்பு கலந்த உள்ளத்தின் ஆரவாரத்தை.

இதற்கு அடிப்படை மக்கள் திலகம் அவர்கள் கையாண்ட கலைநயம் மட்டும் என்று கூறினால் போதாது; உள்ளங்களில் புகுந்து உறவாடும் ஆற்றல்; படம் பார்ப்போருக்கும் தனக்கும் ஒன்றியதோர் பிணைப்பை உருவாக்குகிற திறமை, ஆகியவற்றையும் குறிப்பிட வேண்டும்.

நாடெங்கனும் பட்டி தொட்டிகள் என்பார்களே, அந்தப் பகுதிகளிலும் கூட எம். ஜி. ஆர். அவர்களுக்கு எண்ணற்ற ரசிகர்கள் உண்டு. கொள்கைக் கோமகன் என்றும், குறை தீர்க்கும் குமணன் என்றும் வாரி வழங்கும் பாரி என்றும் வாயாறப் போற்றி, மனமாற நேசித்து, இந்தரசிகர்கள் மக்கள் திலகம் அவர்களின் வெற்றிக்குப் பின்னணியாகத் திகழ்ந்தார்கள்.

லட்சக் கணக்கான ரசிகர்கள், ஆயிரக் கணக்கான ரசிக மன்றங்கள் அங்கங்கே

அவன்: ''வியர்வையில் புழுங்குகிறபோது உசிலைமணி என்ன ஆவார் தெரியுமாடா?''

இவன்: ''என்ன ஆவார்?''

அவன்: ''உஸ்லைமணியாக!''

உ. ராஜாஜி





பணியாற்றிய சிறப்பையும், தமிழகத்தில் 'புதியதோர் உலகம்' பூத்திடும் வகையில் ஆக்கப் பணிகள் வளர்ந்த சீர்த்தியையும் கடந்த கால வரலாறு தன் பொன்னேடு களில் பொறித்துக் கொண்டிருக்கிறது என்பது உண்மை.

இந்த ரசிகர்கள் மக்கள் திலகம் அவர்களுக்காக எப்பேர்ப்பட்ட தியாகங்களையும் செய்யக்கூடியவராக உருவான காரணத்தால் திரைப்படங்களிலும் சரி, பொது மேடைகளிலும் சரி, அவர் மூலம் வெளியாகும் கருத்துக்களை மனமார ஏற்றுக் கொண்டார்கள்.

ஒரு பக்கம் திரைப்படத் தொழில் வளரவும், மறு பக்கம் புதிய சித்தாந்தங்கள் உருவாகவும் வழி உண்டாயிற்று.

'நாடோடி மன்னன்' ஏற்படுத்திய வெற்றியில் 'பண வசூல்' என்பது குறிப்பிடத் தக்கதுதான் என்றாலும், அதை விடப் பெரியதாகக் கருதப்பட வேண்டியது சமுதாய மலர்ச்சியாகும்.

இனிய சுவையோடு கலக்கப்பட்ட மருந்தைப் போல் மறுமலர்ச்சிக் கருத்துக்கள் படம் முழுவதும் நிறைந்திருந்தன. இதனால் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வருவது போன்ற ஒரு புதிய சகாப்தம் திரையுலகிலும் சரி, சமூக நிலையிலும் சரி ஏக காலத்தில் உதயமாயிற்று.

எல்லோராலும் பாராட்டப்பட்ட இந்த வெற்றிச் சித்திரத்தின் நாயகனை எல்லாப் பத்திரிகைகளும் போற்றிப் புகழ்ந்தன.

'எம். ஜி. ஆர். பயனுள்ள ஒரு பணியைச் செய்தார்' என்றும்,

'உலக முதற் பரிசு பெறும் தகுதி இப் படத்துக்கு உண்டு' என்றும்,

'எம். ஜி. ஆருக்கு வைரம் பதித்த மோதிரத்தைப் பரிசளிக்கவேண்டும்' என்றும்

'தமது முதல் டைரக்ஷனின் வெற்றி குறித்து எம். ஜி. ஆர். பெருமைப்படலாம்' என்றும்,

'ஒரு சிறந்த நடிகர் ஒரு சிறந்த டைரக்டராகவும் இருக்க முடியும் என்பதை இந்தப் படத்தில் பார்க்கிறோம்' என்றும்

'தமிழ்ப் பட உலகில் இது ஓர் இமாலய வெற்றி' என்றும் பல வகைகளில் பத்திரிகைகளால் ஒரு முகமாகப் புகழப்பட்டது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ''இதன் வெற்றி குறித்து இன்னும் பல காலத்துக்கு மக்கள் பேசக் கூடிய ஒரு நல்ல படம். அவர் பெற்ற புகழ் நாம் பெற்ற புகழாகும்; நாம் பெற்ற புகழ் நாட்டுக்குச் சொந்தம். நம் நாட்டின் தலைசிறந்த மகனாக அவரைக் கருதுகிறோம்'' என்றார்.

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், கவிதையால் புகழ்ந்தார்:

''இயக்கக் கொள்கை, இலட்சிய விளக்கம்
மயக்கும் மடமையைக் கொளுத்தும்
மார்க்கம்
கலையினிற்காணச் செயல்முறை வகுத்தார்
அளவிலாப் புகழை அடைந்தார்;
உயர்ந்தார்
அண்ணா தம்பிகள் அனைவரும் வாழ்த்தப்
பொன்னார்விளக்கெனப் புகழ்மலை ஏறினார்"

இவ்வாறு மேலும் பல பெரியோர்கள் பாராட்டினார்கள்.

பாராட்டுக்களுக்கு எல்லை இல்லை என்ற அளவுக்குச் சரித்திரம் பிறந்தது.

இந்தச் சரித்திரத்துக்குச் சிகரம் பொறித்தாற் போன்று மதுரை மாநகரில், நான்கு பரிகள் பூட்டிய அலங்கார ரதத்தில் மாபெரும் ஊர்வலம் மக்கள்திலகம் அவர்களுக்கு நடத்தப்பட்டது. அன்று நடந்த விழாவில் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டுக் கூடிய மக்களிடையே, நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்களின் கரத்தால் தங்க வாள் ஒன்று பொன் மனச் செம்மலுக்குப் பரிசளிக்கப்பட்டது. அப்போது எழுந்த வாழ்த்துக் குரல்களின் ஒலி இப்போதும் என் செவிகளில் ரீங்காரம் இட்ட வண்ணம் இருக்கிறது.

இத்தனை பெருமைகளும் எம். ஜி. ஆர். அவர்களுக்கு உரித்தானவை என்று சொல்வதை விட, அவர் மூலம் தமிழ்த் திரை உலகுக்குக் கிடைத்தவை என்று சொல்வது சிறப்பாகும்.

(தொடரும்)

பிரமுகர்கள்





✖ 'என்ன வெட்கம்! சாப்பிடும்மா'

✖ எம். பி. சுப்பிர மணியம் (ஒரு சீக்கியர் கோயிலுக்கு வந்தபோது)

● முருகேசன் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். அவருடைய மனைவியோ அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர். பெரியோர்கள் சம்மதத்தோடு திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற இடம் திருவேற்காடு கருமாரி அம்மன் கோயில். திருமணம் நடந்த உடனே சமபந்தி போஜனத்தில், மணமக்களுக்கு எம். ஜி. ஆரோடு சேர்ந்து விருந்து! வெள்ளை வெளேர் என்று உடையணிந்த சர்வர்கள் உணவு வகைகளைப் பரிமாற, மணப்பெண் சந்திராவுக்கோ தவிப்பு. அவருடைய கவலையெல்லாம் எம். ஜி. ஆரிடம் 'ஆட்டோகிராப்' வாங்க வேண்டுமே என்பதுதான். இதைப் புரிந்துகொண்ட எம்.ஜி. ஆர். 'இதோ பாரும்மா நீ சாப்பிட்டு முடிக்கும்வரை இருந்துஆட்டோகிராப் போட்டுக் கொடுத்து விட்டுத்தான் போவேன், தைரியமாகச் சாப்பிடு.' என்றார். எம்.ஜி. ஆருடைய இடது பக்கத்தில் இருந்த பெரியவருக்கோ சரியாக உட்கார முடியவில்லை. இதைக் கண்ட முதல்வர், 'சரியா உட்கார்ந்து சாப்பிடுங்க.' என்று அன்புடன் கேட்டுக் கொண்டார். ஆனால் அந்தப் பெரியவருக்குக் காலைச் சரியாக மடக்கி உட்காருவது என்பது கஷ்டமான காரியமாம். சமபந்தி போஜனத்தில் வழங்கப்பட்ட உணவு வகைகள் ஹோட்டல் ஸ்ரீலேகாவில் தயாரிக்கப்பட்டவையாம்.

●● ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் எம்.பி சுப்பிரமணியத்தின் காங்கிரஸ் தலைவர் பதவி எப்போது பறிக்கப்படும்? இந்தக் கேள்விக்கான பதிலைத்தான் மூப்பனார் ஆதரவாளர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். பிரதமரோ, மூப்பனார் கோஷ்டிக்கும், எம். பி. எஸ். கோஷ்டிக்கும் நடுநிலையான ஒருவரைத் தேடிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட ஒரு நபர் இல்லாததுதான் கோஷ்டிச் சண்டைகள் வளரக் காரணமாக இருக்கிறது. பா. ராமச்சந்திரனைத் தலைவராகப் போடலாம் என்றால், அவரோ, 'என்னை விட்டுவிடுங்கள், நான் கவர்னர் பதவியையோ அல்லது தூதர் பதவியையோ எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்கிறாராம். ''ஆளும் கட்சியாக உள்ள மாநிலத்தில்தான் கோஷ்டிப் பூசல்கள் வருவதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் எதிர்க் கட்சியாக இருக்கும் தமிழ் நாட்டில் ஏன் இப்படி'' என்று கேட்கிறாராம் இந்திரா.

●●● சட்டமன்றத்தில் தற்போது கேள்வி மன்னராக விளங்குபவர் அண்ணா தி.மு.க. எம்.எல்.ஏ. திரு தாமரைக்கனி. இந்தத் திருவில்லிபுத்தூர்காரர், சட்டமன்றம் கூடும் நாட்களில் சரியாக 9 மணிக்கு அங்கு இருப்பார். அதுதான் கேள்வி நேரம். 'காலையில் எழுந்தவுடன் எல்லா நாளிதழ்களையும் பார்த்துவிட்டு, அன்றைய பிரச்னை எதுவோ அது சம்பந்தமாகக் கேள்வி கேட்பது என் வழக்கம்'' என்று கூறுகிறார் இவர்.

●●●● சென்னையில், ''சட்டத்தின் சமூகப் பாதை'' என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற சுப்ரீம் கோர்ட் நீதிபதி திரு கிருஷ்ணய்யர் பேசியதிலிருந்து...

● நமது நாட்டிலுள்ள முக்கால்வாசி நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சட்டம் என்றால் என்ன என்பதே தெரியாது. அப்புறம், அவர்கள் எப்படி அதற்குண்டான திருத்தங்களைச் செய்ய முடியும்?

— கௌசல்யா

படங்கள் : சுபா நியூஸ்

திரை உலகம்

முதல் சம்ஸ்கிருதப் படம்



✕ மது அம்பாட்

சம்ஸ்கிருத மொழியில் முதன் முதலாக ஒரு படம் எடுக்கிறார்கள். ''ஆதி சங்கரா சார்யா''. தேசிய திரைப்பட அபிவிருத்தி கார்ப்பரேஷனின் தயாரிப்பு. படத்தின் டைரக்டர் ஜி. வி. ஐயரின் பத்து வருடக் கனவு நினைவாகப் போகிறது. சம்ஸ்கிருதத்தில் எடுத்தால்தான் படம் இயற்கையாக இருக்கும் என்று நினைத்தார். கடனுக்கு மேற்படி கார்ப்பரேஷனை அணுகியபோது மறுத்துவிட்டார்கள். சம்ஸ்கிருத படம் லாபகரமாக இராது என்றார்கள். சமீபத்தில் திரு டி. வி. எஸ். ராஜு இதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விஷயமறிந்ததும் கார்ப்பரேஷனே தயாரிக்கும் என்று கூறிவிட்டார்!

புது முகங்கள்தான் நடிக்கப் போகிறார்கள். யாருக்கும் மேக்கப் கிடையாது. தாடி தேவை என்றால்கூட நடிகர் வளர்த்துக் கொள்ள வேண்டியதுதான்! சுலோகங்களே பாடல் வடிவம் பெறுகின்றன. பாலமுரளி கிருஷ்ணா தாமே பாடி, இசையும் அமைத்திருக்கிறார்.



ஜி. வி. அய்யர்

பல சம்ஸ்கிருத அறிஞர்களையும் காஞ்சி, சிருங்கேரி ஆசாரியர்களையும் சந்தித்து ஆலோசனைகள் செய்திருக்கிறார் ஜி. வி. ஐயர். ஆதி சங்கரர் தொடர்புடைய எல்லா ஸ்தலங்களுக்கும் சென்று வந்திருக்கிறார். படப்பிடிப்பும் ஆங்காங்கேதான். ஸ்டுடியோ செட் கிடையாது!

ஆதி சங்கரரைத் தெய்வமாகச் சித்திரிக்காமல், சாதாரண மானிடராகப் பிறந்து உயர்ந்ததை இந்தப் படம் உணர்த்தும்.


படத்தின் ஒளிப்பதிவாளர் திரு மது அம்பட் சொல்கிறார்: ''பூனா பிலிம் பள்ளியில் தேர்ச்சி பெற்ற திரு எஸ். டி. பானர்ஜி இதில் சங்கரராக நடிக்கிறார். முதல் ஆறு மாதம் காலடியில் படப்பிடிப்பு நடக்கிறது. தொடர்ந்து மற்ற இடங்களிலும் இறுதியில் இமாலயப் பகுதிகளிலும் படப்பிடிப்பு நடக்கும். காமிராவுக்கு முக்கியத்வம் கொடுக்கப்பட்ட இந்தப் படத்தில் பல புதுமைகள் செய்யப் போகிறேன்.''

-பேட்டி : சிக்கி

ஒருவர்: ''உங்க வாட்ச் கம்பெனி பார்ட்னர்ஸ்களுக்குள் ஏதாவது தகராறு?''

''எப்படி சார் கண்டு பிடிச்சீங்க?''

''நேத்து உங்க 'ஷோ ரூமில்' வாங்கிட்டுப் போன வாட்சில் சின்ன முள் ஒரு திசையிலும், பெரிய முள் ஒரு திசையிலும் ஓடுது...!'' -கிணத்துக்கடவு ரவி



கணவன்: ''நேற்று நீ வச்ச சாம்பார் பிரமாதம்!''

மனைவி: ''நேற்று அதைப் படுமோசம்னு சொன்னீங்களே...?''

கணவன்: ''இன்றைய சாம்பாரைப் பார்த்ததும் தானே நேற்றைய சாம்பார் எவ்வளவோ பிரமாதம்ங்கிறது தெரியுது!''


உ. ராஜாஜி.



சமூகத் தொடர்கதை

அந்தி நோக்கி உதயங்கள்

-வாஸந்தி-



9

பஸ்ஸிலிருந்த கூட்டம் மூச்சைத் திணற அடித்தது. நசுங்கி நண்ட முண்டலாய்ப் போயிருந்த உடம்பை நெரிசலிலிருந்து விடுவித்துக் கொள்ளச் சாந்திக்குச் சிரமமாக இருந்தது. மேலேவிழுந்த சதைப் பிண்டங்களின் அழுத்தலும் வியர்வை நாற்றமும் வயிற்றைக் குமட்டிற்று.


எப்படி இத்தனை குண்டாக மனிதர்கள் ஆகிறார்கள்? பலூனை ஊதவைக்கிற மாதிரி உடம்பை யோசனை இல்லாமல் ஊத வைக்கிறார்கள்? இது ரொம்பவும் பொறுப்பற்றதனம் என்று அவளுக்கு ஓர் எரிச்சல் ஏற்பட்டது. அந்த ஊளைச் சதையில் ஒரு பிடிவாதம் தெரிந்தது. உன்னைவிட இந்த உலகில் எனக்கு அதிக இடம் தேவை என்கிற பிடிவாதம்.

பஸ் நின்று இரண்டு பிரயாணிகள் இறங்கிக் காற்றுக்கு இடம் கிடைத்ததும் சாந்தி தன் உடம்பைச் சற்று நேராக்கிக் கொண்டாள். பஸ் மறுபடி கிளம்புகையில் திறந்த ஜன்னல்கள் வழியே சூடாகக் காற்று அடித்தது.

திடீரென்று முன் பக்கத்திலிருந்து ஏக இரைச்சல் கேட்டது. ஒரு பெண் பெரிய குரலில், ''சோர், சோர்'' (திருடன்) என்று கத்தினாள். சட்டென்று ஒரு கலவரம் வண்டியில் பரவிற்று.

''வண்டியை நிறுத்து!'' என்று ஏகக் கூக் குரலுக்குப் பின் டிரைவர் பஸ்ஸை நிறுத்தினார்.

தன்னுடைய தங்க வளையை யாரோ வெட்டிவிட்டதாக அந்தப் பெண் மகா கோபத்துடன் தெரிவித்தாள். வெகு நேரக் கூக்குரலுக்குப் பிறகு ஒரு வழியாக ஆளைப் பிடித்தார்கள். வெகு நாகரிகமாகத் தோற்றமளித்த ஓர் இளைஞன் — கொஞ்சங்கூட கூச்சமின்றி, அசடு வழியாமல் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டுவிட்ட கம்



பிரத்துடன் இறங்குவதைப் பார்க்கையில் மனசில் ஒரு அதிர்வு ஏற்பட்டது. நடித்தனம் இல்லாத மனிதர்களே இல்லை என்று தோன்றிற்று. மனத்தில், உடம்பில், செய்கையில், எண்ணங்களில் — அந்தப் பெண்ணின் கத்தலிலும் கூக்குரலிலும் கூட ஒரு நடித்தனம் இருக்கிற மாதிரி தோன்றிற்று. அவளுடைய அசைவுகளின் ஆபாசத்தைப் பற்றின பிரக்ஞை இல்லாத நடித்தனம்.

பஸ் மறுபடி கிளம்புகையில் முப்பத்தி ஐந்து நிமிஷங்கள் நகர்ந்து விட்டிருந்தன.

சாந்தி யோசனையுடன் கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். 6.20. வீடு போய்ச் சேருவதற்குள் ஏழேகால் ஆகிவிடப்போகிறது. இன்றைக்குச் சீக்கிரம் வீட்டுக்கு வந்துவிடும்படி நடராஜன் சொல்லியிருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

அவள் ஒரு ஐந்து நிமிஷம் தாமதமாக வந்தாலும் அவனுள் ஏன் அப்படி ஒரு ஆத்திரம் பொங்குகிறது? அவள் ஏதோ வேண்டுமென்றே செய்த மாதிரி?

''எவனோடவாவது பேசிண்டு நின்னுண்டிருந்திருப்பே!''

இவனுக்கு ஏன் எப்பவும் இப்படி ஒரு சந்தேகம்?


''உங்களுக்கு இந்தச் சந்தேகமும் வேண்டாம். இந்த மாதிரி நான் பேச்சைக் கேட்கவும் வேண்டாம். நான் வேலையை விட்டுடறேன். உங்க ஒருத்தர் சம்பாத்தியம் போதும்.''

அவனை அவமானப்படுத்தி விட்டது போல் அவனுக்குச் சுர்ரென்று கோபம் வரும்.

''என்ன பயமுறுத்தறியா? அல்டிமேட்டமா? இனிமே ஒழுங்கா இருக்கேன்னு சொல்லேன். வேலை முடிஞ்சோன்னே நேரா வீட்டுக்கு இனிமே வரேன்னு சொல்லேன்!''

தன்னுள் எழுந்த ஆத்திரத்தை அவள் சிரமத்துடன் விழுங்கிக் கொள்வாள்.

''ஒழுங்கா இருந்தா இரு. ஒழுங்கா இல்லையானா உன் வழியைப் பார்த்துக்கிட்டுப் போ....''



பிரக்ஞையுடன் தான்சொல்கிறானா? பெற்றோர்கள் இல்லாத இந்த அனாதைக்கு வேறு போக்கிடம் கிடையாதுஎன்கிற தைரியத்தில்சொல்கிறானா? கல்யாணமாகி அவனுடன் கிளம்புகிற சமயத்தில் அவளுடைய மாமா விட்டேற்றியாகச் சொன்னது அவனுக்கு நன்றாக ஞாபகம் இருக்க வேண்டும்.

''நான் கடமையை முடிச்சுட்டேன் சாந்தி. இனிமே உன் வாழ்க்கையைப் பார்த்துக்கிறது உன் சொந்தப் பொறுப்பு. இனிமே நானும் அவளும் கிராமத்துக்குப் போயிடப்போறோம். இருக்கிற நிலத்தில் விளையறது எங்களுக்குப் பத்தும்....''

இனிமேல் எங்களைத் தொந்தரவு செய்யாதே என்கிற மாதிரி... எங்கள் கதவை அனாவசியமாய் இனிமேல் தட்டாதே என்கிற மாதிரி....

மாமா எடுத்து வளர்த்ததும் முன் யோசனையுடன் நர்ஸ் வேலைக்குப் பயிற்சி எடுத்துக்கொண்டதுமே பெரிய கருணைகள்... இதற்கு மேல் எதுவும் யாரிடமும் எதிர் பார்ப்பது பேராசை....

என் பிரச்னைகளை நானேதான் சமாளிக்க வேண்டும். சமாளிக்கத் தெரியாமல் யார் வாசலையும் தட்ட மாட்டேன்.

அவள் பஸ்ஸிலிருந்து இறங்கித் தன் வீட்டை நோக்கிச் செல்கையில் நிதானமாகத் தீர்மானித்துக் கொண்டாள். அவன் என்ன கத்தினாலும் ரோசப்படாமல் இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவன் வார்த்தைகள் மனத்தை முள்ளாகக் குத்தாமல் கண்களில் நீரை வரவழைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த மாதிரி ஒரு மனசாக நம் மனசை மாற்றிக்கொண்டால் தான் கொஞ்சம் வெளிச்சம் ஏற்படும். இல்லாவிட்டால் நம் வீட்டின் அசிங்கங்கள் நடுச் சந்திக்கு வந்து விடும்.

இந்த மாதிரி ஜடத்தனத்தோடு இருப்பது சாத்தியமா?

நன்றாக இருட்டி விட்டது. கட்டிடத்துக்கு வெளியில் அநேகமாக யாருமில்லே. அவரவர்கள் வீட்டுக்குள் அமர்ந்து கொண்டு டீ. வி. பார்த்துக் கொண்டோ ரேடியோ கேட்டுக் கொண்டோ இருப்பார்கள்.

அவள் வேகமாகப் படபடத்த மார்புடன் அந்த நிசப்தத்தைக் கலைக்க யோசிப்பவள் போல் காலிங் பெல்லை அழுத்தினாள். இரண்டு மூன்று நிமிஷங்கள் நகர்ந்தன. கதவு திறக்கவில்லை. அவள் மறுபடியும் அழுத்தினாள்.

கதவு திறந்தது.

அவள் சட்டென்று உள்ளே நுழைந்து மெல்லப் புன்னகைத்தாள்.

''நாழியாயிடுத்து. ஸாரி. இன்னிக்கு பஸ்ஸிலே.....''

பளாரென்று கன்னத்தில் அவள் எதிர்பாராமல் ஒரு அறை விழுந்தது. அவள் நிலைகுலைந்து போனாள்.

அவன் அவசரமாக வாசற் கதவைச் சாத்தினான்.

அவன் முகமும் கண்களும் கோபத்தில் ஜிவுஜிவு என்றிருந்தது. ஓ எதற்கு இத்தனை கோபம்?

''எதுக்குடி கதவைச் சாத்தறே? ஊருக்கெல்லாம் தெரியட்டும் உன் பவிசு. எந்தச் சிரிப்பைச் சிரித்து ஊரையெல்லாம் ஏமாத்திண்டு வரே. எல்லாருக்கும் தெரியட்டும், நீ எப்படிப்பட்ட பொம்பளைன்னு!''

அவனுடைய ரௌத்திரத்தையும் கோபத்தில் சிங்கமாகத் தெரிந்த அவனுடைய முகத்தையும் பார்க்கும்போது வழக்கமாக மனத்துள் பொங்கும் அருவெறுப்பும் ஆத்திரமும் மறுபடியும் பொங்க ஆரம்பிக்கையில் அவள் அவசரமாக அதை அடக்கிக்கொண்டாள். வலுக்கட்டாயமாகச் சிரித்தாள்.

''நீங்க அனாவசியமாக் கோபப்படாதீங்க. ப்ளீஸ். இன்னிக்கு பஸ்ஸிலே ஒரு திருட்டு நடந்து போச்சு. அதனால பெரிய கலாட்டாவும் கால தாமதமும் ஆயிடுத்து. எப்படாப்பா வீட்டுக்கு வரப் போறோம்னு எனக்கும் பேஜாராப் போச்சு.''

''நீ விடற ரீலை நம்ப நான் ஒரு முட்டாள் இல்லே. பஸ்ஸிலே திருட்டுத்தனம் நடந்ததா, நீ ஏதாவது திருட்டுத்தனம் பண்ணிட்டு வந்தியா?''

அவளது பொறுமை மெல்ல மெல்ல நழுவிற்று. அவள் பலவந்தமாக அதைப் பிடித்திழுத்தாள். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவனுடைய தோளில் கையை வைத்தாள்.

''இத பாருங்க. இந்த மாதிரி என்னை நீங்க பழி சொல்றதினாலே உங்களுக்கு என்ன திருப்தி? இந்த வார்த்தைகளை நீங்களே நிச்சயமா நம்பறீங்களா?''

அவன் வெடுக்கென்று கையை உதறினான்.

''சத்யமா நம்பறேன். இல்லேன்னா என்னை நீ இப்படி அலட்சியம் பண்ண மாட்டே. இன்னிக்கு நீ கண்டிப்பா வீட்டுக்குச் சிக்கிரம் வரணும்னு சொல்லியிருக்கேன். வழக்கத்தை விட லேட்டா வந்திருக்கே. வேற ஒருத்தனுடைய உறவு உனக்கு இருக்கிறதினாலே தான் என் உறவு உனக்கு வேண்டாமாய்ப் போயிடுத்து. இது திமிருத்தனம் இல்லாம வேற என்ன? உனக்கு மட்டும்தான் அப்படி இருக்கத் தெரியும்னு நினைக்காதே. எனக்கும் இருக்க முடியும். நீ எனக்குத் தேவையில்லே. நீ போகலாம்.''

அவள் ஒரு விநாடி ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்தாள்.

''ஐ ஸெட் கெட் அவுட்!''

''என்னங்க நீங்க?இது என் வீடு இல்லேயா?''

''இனிமே இல்லே. உன் இஷ்டப்படி இங்கே வர இது சத்திரமில்லே.''

''நா சொல்றதைக் கொஞ்சம் கேளுங்க. இது என்ன விபரீதம்? நான் எங்க போவேன். இந்த ராத்திரியிலே...?''

''எவன் கிட்ட வேணுமானாலும் போ.''

அவளுக்கு அழுகையும் ஆத்திரமும் வெடித்துக்கொண்டு வந்தது.

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படிக் கத்தறீங்க? கொஞ்சமாவது பொறுப்புள்ள ஆம்பிளையா பேசறீங்களா?''

''உனக்கென்னடி வாயிருக்கு என்னைக் கேக்க? ''....'' முண்டமே!''

அவள் கூசிப்போய்க் காதைப் பொத்திக் கொண்டாள்.

எத்தனை குடித்திருப்பான் இன்று?

அவன் பலவந்தமாக அவளைப் பிடித்து வெளியில் தள்ளிக் கதவைத் தாளிட்டுக்கொண்டான்.

அவள் பெரிய திகைப்புடன் ஒரு மணி நேரம் போல் வெளியில் நின்று பார்த்து அவன் திறக்காமல் போனதில் பசியும் ஆத்திரமும் சோர்வும் அவமானமுமாக லிஃப்டுக்குள் நுழைந்து தெருவில் இறங்கி நடந்தாள்.

(தொடரும்)

''அதிசயமாயிருக்கே எதற்கு எங்க அம்மாவின் போட்டோ நூறு பிரதி போடச் சொன்னீர்கள்?''

''கோபம் வரும்போதெல்லாம் ஒவ்வொரு போட்டோவாகச் சுக்கல் சுக்கலாய்க் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போட...!''




ஆரோக்கியம், ஆனந்தம்,
ஒன்றுக்கொன்று ஆதாரம்
SPECIAL REFILL PACK
Save Re 1/-
Cadbury's
Bournvita
The tastier food drink
500 g
Cadbury's
Bournvita
The tastier food drink
உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன.
இப்போது! பெரும் சேமிப்பு ஒரு முழு ரூபாய்
பேக்குடன்
காட்பரிஸ்
போர்ன்விடா
அளிப்பது அத்தனையும் நலம்

சரித்திரக் கதை

சந்திர மல்லி

இளையராணி

மேகச் சாளரத்தை மெல்லத் திறந்த இளங்கதிர்ச் செல்வன் எட்டிப் பார்க்கும் இளங்காலை விடியல். காலை வெய்யிலின் 'கதிர் நடவு'. ஐப்பசித் திங்களின் ஏழாம் நாள்.

திருச் சதயத் திருநாள்.

சோழப் பேரரசன் இராஜராஜ சோழன் தஞ்சைப் பெரிய கோயிலினுள் பிரவேசித்துக்கொண்டிருந்தான்.

மந்திரி பிரதானியர் மட்டுமே தொடரத் தனது மகன் இளவரசன் இராஜேந்திரனுடன் திரு உண்ணாழி எனும் கருவறையை இரண்டெட்டில் அடைந்து நின்றான். ஆம். இன்று இராஜ ராஜனின் பிறந்த நாள். திருச் சதயத் திருநாள்.

தஞ்சைப் பெருநகர் விழாக் கோலத்தில் மிதந்தது. திருவுண்ணாழிக் கருவறையைச் சுற்றியமைந்த தஞ்சைப் பெரிய கோயிலின் ஓவியச் சாலையை அழகுற அமைத்து, காலத்துக்கும் அழியாத ஓவியங்களை நிலையான வண்ணக் கலவையை ஊட்டி செம்மையுற அமைக்கும் பொறுப்பை, சித்திர விதானச் செல்வன் சித்திராபதித் தேவனிடமே அளித்திருந்தான். சித்திரம் ம்ட்டுமில்லாது சிற்ப சாஸ்திரமும் பயின்றவன் துல்லியம்—அஸ்தமென அரிய இலக்கணம் தெரிந்தவன். அவன் சமைத்த இருங்கோளீச்வரமென்ன, உலகமாதேவீச்வரமென்ன – எந்தத் திருமேற்றளியும் அவன் சிற்றுளியில் சிறந்தவையே. இப்போது அவன் அமைத்து முடிக்கும் தஞ்சைப் பெரிய கோயில் மட்டும் முடிந்து விட்டால்....?

தீட்டிய ஓவியங்களைப் பார்க்கும் அவசரம் இராஜராஜனுக்கு.

திரை விலகியது... புதிய ஓவியம் புன்னகை புரிந்தது. இராஜராஜனின் மலர்ந்த வதனத்தில் மந்தகாசம் ஒரே ஒரு நிமிடம் தான்.

அது ஒரு ஆடல் மகளின் ஓவியம். உலகின் அழகெலாம் ஒன்று சேர்ந்தாற்போன்ற ஒரு அப்சரஸ் நிலவைப் போன்ற மென் துகில் போர்த்து, மேகலை சந்தம் மெல்லிடை சேர வயிர சாயலாம் வாகுவலயம் வளைக்கரமேந்த அவள் அபிநயித்த முத்திரையும் பாவமும் அளவிட இயலாது... ஆனால்....

அவளாகச் சாயல் 'பூண்டிருந்தவளோ சந்திரமல்லி... அதுதான் அரசனின் திகைப்புக்குக்காரணம். இளவரசன் இராஜேந்திரனை நோக்கிய பின் அவனது கோபம் குமுறியது.

''சித்ராபதீ.....!'' – அந்தராளம் அதிர்ந்தது. திருவுண்ணாழி திருப்பமெல்லாம் தெறித்தன. சுற்றாழி மண்டபமும் சுமை கனத்தது. சித்ராபதியின் உடலே நடுங்கியது.

''சித்ராபதி! அழகாய்த்தானிருக்கிறது... ஆடல்மகளின் ஓவியத்துக்கு ஓர் அரச மகனா கிடைத்தான்?''

''அரசே!''

''நாளை விடியலுக்குள் இவன் இச்சித்திரத்தைத் திருத்தியமைத்துவிட்டு நாடு கடந்திட வேண்டும். இல்லையேல் இவனது பெருவிரல் களைச் சிதைத்துவிட உத்தரவிட்டுவிடு'' என்று சொல்லிவிட்டு விரைந்த சோழ மன்னன் அந்தப்புரம் சென்றுதான் நிதானித்தான்.



யானைகளுக்கு விருந்து!

குருவாயூரப்பன் கோயிலுக்கு யானைகளைக் காணிக்கையாக அளிப்பதற்குச் சில விதிகள் உள்ளன. யானை குறைந்தது ஏழு அடி உயரம் இருக்க வேண்டும். யானையுடன் பத்தாயிரம் ரூபாய் தொகையும் அளிக்க வேண்டும். யானையைக் கோயிலில் சேர்ப்பிக்கும் தினத்தன்று அதற்கு வரவேற்பு அளிக்கும் முகமாக. அதற்கும் ஏற்கனவே கோயிலில் உள்ள யானைகளுக்கும் ஒரே பந்தியில் விருந்து படைக்கப் படுகிறது. இதற்கு ஆகும் செலவு ரூ. 1200. இதையும் யானைக் காணிக்கை செலுத்துபவரே ஏற்க வேண்டும். தற்சமயம் அக்கோயிலிலுள்ள யானைகளின் எண்ணிக்கை 39!

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ்

தகவல்: ஜனார்த்தனன்

''குழந்தாய்... சந்திரமல்லி இதேதம்மா? ஒரு சிற்பி உன்னை இவ்வளவு தூரம் அரியுமளவுக்கு....'' ராஜராஜன் நிறுத்தவில்லை.

''ஆம் அப்பா... நாடாளும் சிம்மாசனத்தைவிட சிற்றுளியே பரவாயில்லையப்பா. அரச போகத்தைவிட அமைதிதானப்பா நான் விரும்புவது.''


''கலையை நானும் விரும்புகிறேனம்மா... ஆனால் அரசகுலத்தின் நியதிகள் நீ யறியாததையா....''


''இருக்கலாமப்பா. என் உள்ளம் எப்போதோ சிற்பியிடம் சென்றுவிட்டது.''

தோளில்வளர்த்த மகளிடமே தோல்வியா?

ஐப்பசிமழை அடைமழையாய் ஊற்றிற்று. கண்மாய்க்கரைகளை உடைத்துக் கொண்டு சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது. ஏரி வாரியத்தின் பணியைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த சோழ மன்னனின் பார்வையில் சித்ராபதி தேவனின் சிதறிய சடலமே பட்டது. கண்மாயை உயர்த்தும் பணியில் அந்தச் சிற்றுளி சிதறிவிட்டிருந்தது.

மாமன்னன் மனம் பொறுது அந்தப்புரத்தின் வாயிலை அவசரம் அவசரமாக அடைந்தபோது இளவரசி சந்திரமல்லி ''மாதேவடிகளாக'' துறவியாகி அந்தப்புரத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தாள்.





பிறந்த அன்றே இருதய ஆபரேஷன்!

கருப்பையில் கரு உருவாகி எட்டாவது வாரம் அதற்குப் பட்டாணி அளவில் இருதயம் தோன்றி விடுகிறது. வளர்ந்த பெரிய இருதயத்தின் பாகங்கள் அனைத்தும் இதற்கு உண்டு. ரத்தத்தை 'பம்ப்' செய்து வெளியேற்றி — உள்வாங்கும் நான்கு அறைகள்; அவற்றிடையே ரத்தத்தை ஒரு திக்கில் மட்டுமே அனுப்பஉதவும் மெலிதான வால்வுகள்; ரத்தத்தைக் கொணர்ந்து சேர்க்கிற, வெளியேற்றுகிற ரத்த நாளங்கள்...

ஆனால் இந்த நுணுக்கமான சிருஷ்டியில் சில சமயம் தவறும் நேர்ந்து விடுகிறது. வால்வுகள் சரியான வடிவில் இருப்பதில்லை; இரண்டு அறைகளுக்கு இடையில் உள்ள சுவரில் சிறு துவாரம் விழுந்து விடுகிறது; ரத்த நாளங்கள் சரியாகப் பொருந்தாமல் போய் விடுகின்றன...

சில ஆண்டுகளுக்கு முன் இப்படிப் பிறந்த குழந்தைகளுக்கு விமோசனமே கிடையாது. அவை மற்ற குழந்தைகளைப் போல் ஓடி விளையாட முடியாது. ஆனால் இன்று சின்னஞ்சிறு குழந்தையின் இருதயத்தையும் திறந்து பார்த்துச் சீர்படுத்த நிபுணர்கள் தயார்!

ஃபிலிப் எப்போது அழுதாலும் நீலம் பாரித்துவிடும். ஒன்றரை வயதானபோது, அவனுக்கு உடலில் சக்தியே இல்லை. தவழ்ந்தாலும் ஒரு தலையணையைத் தள்ளிச் செல்வான். அடிக்கடி களைத்துச் சோர்ந்து அதில் தலைசாய்ப்பான்.

டாக்டர்கள் நாலு மணி நேர ஆபரேஷன் செய்து ஃபிலிப்பின் இருதயத்தைச் சீராக்கினார்கள். இரு வெண்ட்ரிகிள் அறைகளுக்கும் இடையில் இருந்த ஓட்டையை டெஃப்லான் ஒட்டுப் போட்டு அடைத்தார்கள். பல்மனரி ஆர்ட்டரி என்ற ரத்த நாளத்தின் நுழைவாயிலைப் பெரிதாக்கினார்கள். ஒரே வாரத்தில் ஃபிலிப் கூடம் முழுக்க ஓடினான். நாற்காலிகளில் ஏறினான். படுக்கையில்குதித்தான். அவனைச் சும்மா இருக்கச் செய்வது பெரும்பாடாகி விட்டது!

சென்ற தலைமுறையில் ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு அமெரிக்காவில் இருதய ஆபரேஷன் செய்ய மாட்டார்கள். ஆனால் இன்று பிறந்த 24 மணி நேரத்துக்குள் ஆபரேஷன் செய்ய நிபுணர்கள் தயங்குவதில்லை! அவ்வளவு முன்னேற்றம் சிகிச்சைத் திறனில், அதற்கான உபகரணங்களில், கண்காணிப்புக்கருவிகளில்!

இருதயக் கோளாறுகருவிலேயே தோன்றக் காரணம்? பல உண்டு எனினும் மிக அதிகமாக 'உணரப்படுவது கருவுற்றிருக்கும் நிலையில் தாய்க்கு மணல்வாரி போன்ற சின்ன அம்மை ரகங்கள் போட்டுவதுதான்!

-நன்றி: நியூஸ் வீக்

மருத்துவம்

காதலின் நிறம் கறுப்பு

—பாமா கோபாலன்—

கடற்கரை. மணல் இல்லே. பட்டாணி சுண்டல் இல்லே.

வாசந்தி காத்திருந்தாள். அவள் பார்வை அந்த போர்டில் நிலைத்தது. 'கடற்கரை—சந்திப்பு' என்ற பீச் ஸ்டேஷன் பலகை. ரயில்வே ஸ்டேஷனில் மணலாவது, சுண்டலாவது!

அவள் மனத்தில் குழப்பம். அப்பாவுக்கு இப்படி ஒரு சோதனையா! சே, இன்கம் டாக்ஸ் ரெய்டு நடத்தி... பாவம் அப்பா.

'ஹாய் வாசந்தி' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தாள். மகேஷ். மாடர்ன் இளைஞன். அழுக்கு ஜீன்ஸ்: அடங்காத தலைமயிர்; விருது வாங்கத் தகுதியான கிருதா. ரஜனி மீசை (தில்லு முல்லு ரஜனியல்ல!) ஓ.வி. ஸ்கூட்டர் சவாரியில் வந்துவிட்டான்!

''என்ன முனகிண்டு நிற்கிறே?''

''இல்லே காதலர்கள் பீச்சிலே,பார்க்லே சந்திப்பாங்க...நாம இப்படி ஸ்டேஷனில்..''

''பெண்ணே... ஸ்டேஷன்லே சந்திப்பது ரொம்ப நல்லது. வெயிட் பண்றது ரயிலுக்கா காதலுக்கா என்றே தெரியாது. பைதபை... போர்டிலே பாரேன் 'கடற்கரை சந்திப்புன்'னு தானே போட்டிருக்கு!''

''போதும்... 'பிளேடு மழை பொழிகிறது. ஒவ்வொரு துண்டிலும் உன் குரல் கேட்கிறது'ன்னு பாடலாம் போல இருக்கு!'' என்று உதட்டைச் சுழித்தாள் வாசந்தி.

ஹோட்டலில் குடும்ப அறைக்குள் காதலர்கள் நுழைந்தார்கள். சற்றே இருட்டான இடம். குளுகுளு வசதி.

''மகேஷ்... நேற்று பெரிய கலாட்டா வீட்லே. வருமான அதிகாரிகள் வந்து... ரெய்டு....'' மெலிதாகப் பேசினாள்.

''அட கஷ்டமே! வருமானம் இருக்கோ இல்லையோ, இப்படி நடந்தால் மானமே போகுமே! மூணு வாரம் முன்னாடியே உன் அப்பா 'பேரர்' பாண்ட்லோ, பேத்தி பாவாடையோ வாங்கல்லியா?''

''ச்சீய்.. எப்பவும் தமாஷ்தானா மகேஷ்? நான் உங்க கூடப் பேசப்போவதில்லே.'' பொய்க் கோபம் காட்டினாள்.

சர்வரிடம் ''ரெண்டு பாசந்தி, மெது பக்கோடா — மெதுவாக் கொண்டா... ரெண்டு கிரேப் ஜூஸ்....'' என்றான்.

''ஏய்... பாசந்தி... சே... வாசந்தி.. என் ஷாக்? எவன் டிப்ஸ் கொடுத்தான்?''

''எதுக்கு? யாருக்கு? சர்வருக்கா?''

''இல்லே... வருமான வரி அதிகாரிக்கு?'' என்று சொன்ன மகேஷ் வாசந்தியைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

ஒரு கரப்பான் பூச்சி சட்னி ஆற்றில் குளித்து, எழுந்து, சாம்பார் குளத்தில் ஸ்நானம் செய்து கொண்டிருந்தது. எதிர்பாராமல் பறந்து வந்து, வாசந்தியின் முதுகில் ரவிக்கையில் சமர்த்தாக அமர்ந்தது. பட்டென்று அதைத் தட்டிவிட்டான் மகேஷ்.

வாசந்தி சகஜ நிலைக்கு வந்தாள். அப்போது எதிரேயிருந்த மூதாட்டி, ''அட! கரப்பு உன்கிட்ட வருதே.. பணம் நிறைய இருக்கு போல..'' என்றபடி மீதியிருந்த மோரை உறிஞ்சிக் குடித்தாள்.

வாசந்தியின் மூளையில் மின்னலடித்தது. அந்த மூதாட்டியை அதிக வாத்சல்யத்துடன் பார்த்தாள். புத்தனுக்குப் போதி மரம். வாசந்திக்கு மூதாட்டியின் பொன் மொழி!

''மகேஷ்! இப்ப எனக்குப் புரிஞ்சு போச்சு! வீட்லே தண்டச் சோறு சாப்பிடற அத்தை பிள்ளை செல்லப்பன்தான் இன்கம் டாக்ஸ் ஆபீஸுக்குத் தகவல் சொல்லி யிருப்பான்!'' என்றாள் விழிகள் மின்ன.

''அது எப்படி?''

''எங்க வீட்லேயும் நிறையக் கரப்பான் பூச்சி பறக்கும். அம்மா அடிக்கடி சொல்வாங்க... கரப்பு இருந்தால் பணம்—லட்சுமி பூச்சின்னு இந்த செல்லப்பன் — இனிமேல் அவன் எட்டப்பன் — கரப்பு, பணம்னு கேட்டுட்டு முடிச்சுப் போட்டு என் மேலே உள்ள கோபத்தை இப்படி தீர்த்துண்டான் போல இருக்கு! நல்லவேளை .. ரெய்டு செய்ய வந்த ஆபீஸர் கடைசிலே 'ஐ'ம் சாரி வரதாச்சாரின்னு' சொல்லிட்டுப் போயிட்டார். போறச்சே என்னையும் அன்பா பார்த்துட்டுப் போனார்!''

மகேஷுக்கு இப்பொழுதுதான் புரிந்தது. தன் மாமா — வருமான வரி ஆபீஸர் — நேற்று இரவு கல்யாணப் பேச்சை ஏன் ஆரம்பித்தார் என்று! 'ரெய்டு'க்குப் போன இடத்தில் மருமானுக்கு ஜோடி பார்த்துட்டாரா?

''வாசந்தி! காதலின் நிறம் கறுப்பு'' என்று ஆரம்பித்து விளக்க ஆரம்பித்தான்.

''ஆ ரம்பமா... அறுப்பு....'' என்று சுணங்கினாள் அவள்!



நகைச்சுவைக் கதை

சித்திரத் தொடர்கதை

வேலைக்குப் போகும் பெண்

நடிப்பு:
டணால் தங்கவேலு

கதை:
சாருகேசி, தமயந்தி

சித்திரம்:
செல்லம்

போட்டோ: உத்ரா

5




யார்ரா இவன்! நிதிமந்திரிய அரிக்கற மாதிரி உதவி உதவின்னு உயிர வாங்கறான்! வேற, வேலைக்குப் போற பொண்ணை கெடைக்கலியா ஒனக்கு?
அய்யோ, அப்பா! இந்த ஆளைக்கப் பாருங்க, மூக்குக்குக் கீழே ரெண்டு கொடுவாள்!
அப்போது கொடுவாள் மீசையுடன் ஒரு முரடன் திடீரென்று உள்ளே பாய்ந்து வந்தான்
நீதானேய்யா காசி? நீதானேப்பா பன்னீரு?
அவன்தான் காசி, நான்தான் பன்னீரு இத்தான் ஒனக்கு என்ன வித்யாசமா தெரியப் போவுது?
யோவ், எங்கிட்டயா விளையாடறே? தொலைச்சுப்புடுவேன் தொலைச்சு!
நீதானே ஏங்க ஜம்னுப் பொண்ண லவ் பண்றே?
ஆமாம்பா, தெரியாத்தனமா லவ் பண்ணிப் புட்டேன்!
யோவ் கஞ்சிலிங்கம்! பையன் ஏங்க ஜம்னுவைக் கூட்டிக்கிட்டு ஓட்டலிலும் பார்க்குன்னும் அலையறான். அவள உட்டுட்டு இவுற யாருக்காவது ஓம் பையனைக் கட்டி வச்சே, ஒன்னைக் கட்டி வச்சு உரிச்சுருவேன்.
உரிச்சுப்புட்டு அப்படியே உட்ருவியா? வைத்தியம் பாக்க மாட்டியா?
டே பன்னீரு, ஒங்க அப்பாவுக்குப் புரியும் படியாச் சொல்லிடு. நான்தான் ஜம்னுவோட மாமன்! அவள ஏமாத்தினே, நீயும் தொலைஞ்சே!
ஓயா பேரு என்னன்னு சொல்லலியே?
எம் பேரா? காடுவெட்டி, ஆடுவெட்டி, அரைச்சா வெட்டி, முறைச்சாவெட்டி தாத்துக்குட்டி முத்து! கியூரபகும் இருக்கட்டும், வர்றேன்!
இதென்னப்பா, கொறுவு வெட்டாமயே பூதமா வந்திட்டானே இவன்........
மீசாவக் காட்டி பயமுறுத்துவாங்க, தெள்ளிப்பட்டிருக்க கொம்மீசையைக் காட்டி இல்லே பயமுறுத்தறான் இவன்!
தொடரும்



நாடகம்

யார் செலவில்...?

சௌந்தர்யன்

[நடுத்தர வீடு: எழுபதைத் தாண்டியவர் இன்றோ நாளையோ என்று கூடத்துக் கட்டிலில் இழுத்துக்கொண்டு கிடக்கிறார். செல்லப்பா, தியாகு, மூர்த்தி அந்தப் பெரியவரின் அருமைப் பிள்ளைகள்.]

செல்ல: நான் அப்பாவுக்கு மூத்தவனாய்ப் பிறந்தேனே தவிர, எனக்குன்னு இது வரைக்கும் எதுவுமே செஞ்சதில்லை அப்பா. ஏதோ படிக்க வச்சார்... அப்புறம் நானா முயற்சி பண்ணி முன்னுக்கு வந்தேன். அப்பாவுக்கு எந்தத் தொந்தரவும் கொடுக்காம ஒதுங்கி வாழ்ந்தேன்...

தியாகு (குறுக்கிட்டு): இதை யெல்லாம் இப்ப யாரு கேட்டா... அப்பா இப்பவோ இன்னும் கொஞ்ச நேரத்துலயோ போய்ச் சேரப் போறது நிச்சயம்னு டாக்டர் சொல்லியாச்சு. அவருடைய கடைசிச் செலவுகளுக்குப் பணம் வேணும்.... நீ எவ்வளவு தரப்போறே?

செல்ல: மூத்தவன் கரத்தினாலே கொள்ளி வச்சுடறேன்...

தியாகு: ம்... அம்மா அப்பாவை நான் வச்சிண்டதுக்கு இப்படியெல்லாம் பழியா? சாப்பாட்டுக்குன்னு நூறு ரூபாய் தந்திட்டு மத்ததெல்லாம் அவரே செலவு பண்ணிடுவார்...

மூர்த்தி: அடப் பாவி.... பணம் வாங்கிட்டுத்தான் அம்மா அப்பாவுக்கு நீ சோறு போட்டியா?

தியாகு: அதுகூட உங்க ரெண்டு பேருக்கும் வக்கில்லையே...பெண்டாட்டிக்குப் பயந்தவர்களாச்சே?

செல்ல: சரி...சரி... நீங்க ரெண்டு பேரும் என்னைவிட நிறையச் சம்பாதிக்கிறீங்க... ஆளுக்குக் கொஞ்சமாப் போட்டு எல்லாக் காரியத்தையும் பண்ணுங்க. அம்மாவுக்கு இப்படி ஆகும்போது நானே எல்லாச் செலவையும் பார்த்துக்கறேன்...

மூர்த்தி: சே...சே... என்ன பேச்சு இது... ம்... இந்தக் கிழமாவது ஒவ்வொருத்தராட்டம் சொத்துக் கித்து வச்சிருந்தா இப்படிச் சாவுச் செலவை நாம ஏலம் போட வேண்டாம்... அண்ணா... என்னால முடிஞ்சது முந்நூறு ரூபா தந்திடறேன். தியாகு நீ எவ்வளவுடா...

தியாகு: நானும் முந்நூறு ரூபா தந்திடறேன்...

செல்ல: சரி... நான் கொள்ளி வைக்கிறேன். நூறு ரூபா தந்திடறேன். ஆனா, அப்புறம் வருஷ திவசத்துக்கெல்லாம் நீங்கதான் பணம் கொடுக்கணும்...

[இப்பொழுது கிழவர் பயங்கரமாய் இருமுகிறார். மூவரும் அவர் அறைக்குள் செல்ல... கிழவர் தலை சாய்கிறது. கிழவி அழாமல் நிதானத்தோடு ஒரு கடிதத்தை அவர்களிடம் தருகிறாள். அதில்....]

செல்ல (படிக்கிறான்): நான் இறந்துவிட்டால் என் காரியங்களுக்குப் பணம் இல்லாமல் என் பையன்கள் அவதிப்படக்கூடாது என்று பென்ஷன் பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து ரூ. 2000 என் பெட்டியில் வைத்திருக்கிறேன், எடுத்துக்கொள்ளவும்.

—திரை

கடுகு பதில்கள்



⌘ ஆர். ஸ்ரீனிவாசன், திருச்சி-6

கே: ஒவ்வொரு பத்திரிகையின் விற்பனையையும் கணக்கெடுக்கிறார்களா?

ப: நியூஸ் பேப்பர் ரிஜிஸ்டிரார் ஆபீஸ் என்ற அலுவலகம் கணக்கெடுக்கிறது. சர்க்குலேஷன் அடிப்படையில்தான் நியூஸ் பிரிண்ட் கோட்டா கொடுக்கப்படுகிறது. வருஷ முடிவில் விரிவான அறிக்கை வெளியிடுகிறார்கள். — ஆயிரம் பக்க புத்தகம். அகில இந்தியாவில் உள்ள எல்லாப் பத்திரிகையைப் பற்றிய ஜாதகங்களும் இருக்கும்.

⌘ ஆர். முரளி, குரோம்பேட்டை

கே. சார்லஸ் கலியாணத்திற்குப் போனீர்களா?

ப: போயிருப்பேன். பிரஸ்டிஜ் தடுத்துவிட்டது. என் கலியாணத்துக்கு அவர் வந்தாரா?

⌘ பி. வசந்தா பார்த்தசாரதி, சென்னை-88

கே. பேர் வரவேண்டும் என்பதற்காகச் சிலபேர் தானம் செய்கிறார்களே, சரியா?

ப: சரிதான். காரணத்தைப் பற்றி நமக்குக் கவலை இல்லை. காரியத்தைப்பார்க்கலாமே. பெயருக்காகச் செய்தால் என்ன? தானம் செய்கிறார்களே, அது வரவேற்கத் தக்கது தானே! (பெயர் வரவேண்டும் என்று கடுகுக்குக் கேள்வி எழுதுவதை விட இது 'பெட்டர்' இல்லையா?)

⌘ ஆர். ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்


கே. கடவுள் ஏன் எல்லாரையும் நல்லவர்களாகப் படைக்கக் கூடாது?

ப: இது பற்றி கடவுளிடம் உங்கள் சார்பாக கேட்டேன். அவர் சொன்னார்: ''வேண்டுமென்றேதான் எல்லா வித மனிதர்களையும் படைத்தேன். அதே அடிப்படையில்தான் மானைப் படைத்த கையோடு புலியையும் படைத்தேன். கரும்பைத் தோற்றுவித்த உடனே எட்டிக்காய் மரத்தையும் உண்டாக்கினேன். இப்படி நாலாவிதமான குணம், ருசி, அமைப்புக்களைஉண்டாக்கவே தான் உலகவாழ்க்கைபோரடிக்காமல்இருக்கிறது. வாழ்க்கை பூராவும் மாம்பழத்தையும் கரும்பையும் திராட்சையையும் தேனையும் மட்டும் சாப்பிட்டுக் கொண்டு இருக்க முடியுமா? என்று ஆர். ஸ்ரீனிவாசனைக் கேட்டுச் சொல்லுங்கள்?'' இதற்கு உங்கள் பதில் என்ன?

⌘ என். சக்ரபாணி, கோவை-11

கே. ஒரு கேள்விக்குப் பல பதில்களை அளிக்க வேண்டுமென நீங்கள் நினைக்க, அந்தப் பல பதில்களில் ஒரு பதில் பல கேள்விகளுக்குத் தருந்த பதிலாக அமைய அந்தப் பல கேள்விகளில் ஒரு கேள்விக்கு நீங்கள் பல பதில்களை அளிக்க நினைக்கும் சமயம்... அதாவது என் கேள்வி என்னவென்றால்...

ப: மிஸ்டர்... மிஸ்டர்... இப்படியா ஒரேயடியாகவா என் பாணியைக் காப்பி அடிப்பது? தெளிவான கருத்துக்களைத் தெளிவான நடையில் நான் எழுதுவது உங்களுக்குப் பிடித்திருக்கலாம். அதற்காக இப்படியா ஏகலைவனாக இருப்பது! உங்களுக்கென்று ஒரு ஒரிஜினலிடியை வளர்த்துக் கொள்ளுங்கள்.



⌘ கே. பிரதாப்சிங், அரகண்டநல்லூர்

கே. மது அருந்துவது கேவலமா?

ப ஆம். அதுமட்டுமல்ல. உங்கள் உடல் நலத்துக்கும் குடும்ப நலத்துக்கும் செய்யப்படும் துரோகம். உடலைக் கெடுத்துக்கொண்டு உள்ளத்தையும் கெடுத்துக் கொண்டு குடித்து அழியாவிட்டால் என்ன?

⌘ எம். பொன்போலியன், தாம்பரம்

கே. அலைகள் ஓய்வதில்லை; விலைகள்?

ப: இறங்குவதில்லை.

⌘ விசாலினி, நாக்பூர்-1

கே. சிலரைத் திருப்திப் படுத்தவே முடிவதில்லையே?

ப: உண்மைதான். பலருக்குக் குறைப்பட்டுக் கொண்டிருந்தால் திருப்தி. மூக்கால் அழுதால்தான் சந்தோஷம். முணு முணுத்துக் கொண்டு இருந்தால்தான் மகிழ்ச்சி. ஒரு துணுக்கு: மெக்ஸிகோ நாட்டில் சில பகுதிகளில் வெந்நீர் ஊற்றுக்கள் உண்டு. அவைகளுக்கு வெகு அருகிலேயே குளிர்ந்த நீர் ஊற்றும் உண்டு. இது இயற்கையின் ஓர் அற்புதம். அங்குள்ளவர்கள் துணிகளை வெந்நீர் ஊற்றில் அமுக்கிப் பிறகு குளிர் நீர் ஊற்றில் போட்டுத் துவைப்பார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சுற்றுலாப் பயணி ''கடவுள் உங்களுக்கு நிறைய வசதி ஏற்படுத்தி யிருக்கிறார்'' என்றார். அதற்கு ஒரு மெக்ஸிகோவாசி, ''ஹும்... பெரிய வசதி! வெந்நீரும் தண்ணீரும் தந்து விட்டார். சோப் எங்கே கொடுத்தார்?'' என்று கேட்டார்!

பரிசு பெறுபவர்:
ஆர். ஸ்ரீனிவாசன்
155, கீழசித்திரை வீதி
ஸ்ரீரங்கம், திருச்சி-6

கேள்வி - பதில்



ஸ்ரீகாயத்ரீ சுவாமிகள்

ஸ்ரீ மஹா சண்டி ஹோமம்

மக்களின் இன்னல்கள் தீரவும்,
உலகம் க்ஷேமம் பெறவும் வேண்டி,
ஸ்ரீலஸ்ரீ காயத்ரி சுவாமிகளின்
ஆசியுடன் பொது மக்களால்

1. ஸ்ரீ கணபதி ஹோமம்
2. ஸ்ரீ நவக்ரஹ ஹோமம்
3. ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம்
4. ஸ்ரீ ஆவஹந்தி ஹோமம்
5. ஸ்ரீ சுதர்சன ஹோமம்
6. ஸ்ரீ காயத்ரீ ஹோமம்
7. ஸ்ரீ மஹா சண்டி ஹோமம்

1981, செப்டம்பர் 10, 11, 12, 13 தேதிகளில் ராம ராயர் மண்டபத்தில் ஷெனாய் நகர், மதுரை-20 நடைபெற இருக்கின்றன. இந்த யாகங்களில் பங்கேற்று அருள்பெற விரும்பும் அன்பர்கள்

ஸ்ரீ சுப்ரமணிய ஐயர், அட்வோகேட்
14, கக்கன் தெரு, ஷெனாய் நகர்,
மதுரை - 625 020

அவர்களிடம் தொடர்பு கொள்க.

ஆன்றோர் தொடுத்த கலை
அழகு கலை ஜோதிடத்தை
அறிந்து கற்றிடவே
ஓர் அரிய வாய்ப்பு இது

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழிப் போதனை முறைப் பயிற்சி)

இன்று நாள் எப்படி? நாளை, நாள் என்ன வரும் என்ற நாமறியா காலத்தை நாடியே அறிந்து கொள்ளும் அரியகலை. ஜோதிடத்தை — அழகு தமிழ்த்தென்றல் வீச— ஆழ்ந்த நல்ல கருத்துடன் அமிழ்து தாற்றுக்கி அள்ளி அள்ளிப் படைக்கின்றோம். எவர் துணையுமின்றி எதிர்காலம் அறிந்திடலாம் — எவர்க்கும் எடுத்துரைத்து உதவிடலாம். தப்பாது பலன் சொல்லும் தரமான முறையினிலே பாடங்கள் தரப்படுகின்றன. அதிகப் பக்கங்கள் — அதிசயிக்கும் விளக்கங்கள் ஆரம்ப அரிச்சுவடி முதலாக — அறிந்து கொள்ள அடுக்கடுக்காய் பாடங்கள். எள்ளளவும் மாறாது பலன் சொல்லும் மார்க்கங்கள். இது போலும் இனியோர் வாய்ப்புக் கிட்டுதல் அரிதாகும். படித்து முடித்தார்க்கு பட்டமும் சான்றிதழும் பாங்குடனே தருகின்றோம்: வந்திடுவீர் வளமான நலம் பெறுவீர்.

சேரும் முறை, செலுத்தும் கட்டணம்தனை அறிய 50 நயா பைசா தபால்தலை ஒட்டிய சுய விலாசமிட்ட கவரிணைத்து 10-9-81த் தேதிக்குள் மனுச் செய்து கொள்க.

பிரபல ஜோதிடர்,
ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா யோகி,

ராஜயோகப் பயிற்சியாளர்

பிளாட் 204, கதவு எண் 5,
அண்ணா நகர்,

மதுரை - 625020

எது புரட்சி




மதிவண்ணன்

புதுக்கவிதை

வறட்சிக்கும்
வாழ்க்கைக்கும்
வித்தியாசமே
இல்லாதபோதுதான்
புரட்சி
தன் அத்தியாயத்தையே
தொடங்குகின்றது!
ஆர்ப்பாட்ட கோஷம்
வானைப் பிளக்க
ஒரு ஊர்வலம் சென்றது!
ஊர்வலக் கோரிக்கை
என்ன என்று பார்த்தால்
நாட்டில் அமைதியை
நிலைநாட்ட வேண்டுமாம்!
இப்படித்தான் இருக்கும்
புரட்சியைக்
கூப்பிட்டு வரவழைத்தாம்!
ஒரு
கால கட்டத்துக்குப் பிறகு
வாழை இலைதருவதை விடுத்துக்
குலை தருகின்றது!
ஒரு வானிலையில்
அசையும் காற்று
அசைக்கும் காற்றாக மாறுகிறது!
புரட்சி
இப்படித்தான் பூக்கும்
அல்ல... பூகம்பிக்கும்!
புரட்சி
இந்தச் சொல்லுக்கு மட்டும்
இங்கே வயதாகிக்
கிழப் பருவம்கூட
வந்துவிட்டது! ஆனால்
புரட்சி இன்னும்
பிறக்கவே இல்லை!
உதடுகளில்
இந்தச் சொல்லுக்கு
ஊர்வலமே
தினமும் நடக்கிறது.
ஆனால் இது
ஒற்றையாய்க்கூட இன்னும்
வெளியே வரவில்லை!
சமுதாயப் புரட்சி, கலைப் புரட்சி
சமயப் புரட்சி, அரசியல் புரட்சி,
தொழிற்புரட்சி, பசுமைப் புரட்சி
இப்படிப் புரட்சிக்கு
நாமகரண வைபவங்கள்
நிகழ்கின்றன!
ஆனால் புரட்சியோ
அமைச்சர்கள் திறந்துவைத்த
அடிக்கற்களாக இருக்கின்றன!
அரங்குகள் எழும்பக் காணோம்!
சர்க்கரை
மண்ணெண்ணெய்
இவை க்யூவில் நின்று
நம்மை ஒன்றொன்றாக
வந்தடையும்!
மானிடச் சக்தி
ஆலய அந்தஸ்தைப் பெறும்!
புரட்சிக்குப் பிறகு
நட்சத்திரங்கள் எல்லாமே
நிலவாகி விடும்!
கிழக்கில் மட்டுமல்ல!
எல்லாத் திசைகளிலும்
தீபச் சூரியன்
தெரியத் தொடங்கும்!
'குடிசைகள்'
மியூசியத்தின் காட்சிப் பொருளாக
மாறும்!
'வறுமை'
அகராதித் தொகுப்பில் மட்டுமே
இடம்பெறும் சொல்லாக மாறும்!
பொற்காலம் பூக்கத்தான்
போகிறது!
ஆனால் ஒன்று!
வீட்டில் புரட்சி செய்வதை
விடுப்போம்!
ஜனத் தொகை குறையட்டும்!
இல்லாவிடில்
பகலிலேயே இருள் வந்துவிடும்!
ஆமாம்!
நடபாடுபவர்களின்
நிழல் நெருக்கத்திலேயே
இரவு
உருவாகிவிடும்!


ஆசையில் ஆபத்து!
ஒரு விடுமுறை நாளில் ராஜா மட்டும் ஆபீஸ் அறையில் தனியாக...
ஹலோ ரகு, நேத்தி என்ன ஆச்சு தெரியுமோ? பீச் ஸ்டேஷன்லே ஒரு பிக்பாக்கெட் ரவுடியைப் பிடிச்சு செமத்தியாய்ப் பூசை வாங்கிக் குடுத்தேனாக்கும்! ஹ ஹா!
இப்பத்தான் நம்ப ரமேஷுக்கு இந்த லெட்டரை எழுதினேன். லெட்டரைப் போஸ்ட் பண்ண வேண்டியது மட்டும்தான் பாக்கி. போனை வச்சுடவா? பை பை!
டெலிபோனை வைத்து விட்டு நிமிர்ந்த போது.
டேய் சோமாரி.. ..பெருமைப் பட்டுக்கறயா பெருமை... என்னைப் பிடிச்சுக் குடுத்ததில் உனக்கு அத்தினி சந்தோசமா! தூக்குடா கையை!
அடடே! செக் புக்! எவ்ளோ பேலன்ஸ் இருக்குது! அட! அதையும் பின்னாடி எளுதியிருக்கியே! ஊம் எம் பேருக்கு ஒரு பேரர் செக் எளுதுடா.


படக்கதை
சே, என்தான் பேலன்ஸை எழுதினேனோ?
நல்ல பையனாய் நாலாயிரத்துக்கு பேரர் செக் போட்டுட்டே இரு இரு. ஏதோ லெட்டர் எழுதி வச்சிருக்கியே... அதில் போட்ட கையெழுத்து இதோடு பொருந்துதா பாக்கறேன்... ....பொருத்தமாய் இருக்கு. இனிமேல் இதே மாதிரியே கவுண்டர் ஃபாயில்லே இருப்பை எழுதிவை ராஜா!
ஓவர் டைமுக்காக ஆபீஸ் வந்ததே தப்போ? இப்ப தனியாய்...
இரு இரு. பக்கத்து தெருவுல இருக்கிற பாங்குக்குப் போயி பணம் பண்ணிக்கிட்டு வந்துடறேன். நீ யாருக்கும் போன் கூடப் பண்ண முடியாது. லைனைக் கட் பண்ணிட்டேன்.
அரை மணியில் போலீஸ் வர...
நீங்க வந்து காப்பாத்துவீங்கன்னு எனக்கு அப்பவே தெரியும் சார்! அந்த ரவுடி பாங்கில் அரஸ்ட் ஆயிடுவான் என்பதும் தெரியும்
ஹ ஹா! நான் கடிதங்களில் போடும் கையெழுத்தும், பாங்க் சமாசாரங்களுக்குப் போடும் சிக்கலான கையெழுத்தும் ஒன்றுக்கொன்று சம்பந்தமே இல்லாதவை!
இஸிட்!
ரவுடி ஜெயிலுக்குப் போயிட்டான்! இதையும் ரமேஷ் கடிதத்தில் எழுத வேண்டும்....
கதை: ஜி.வேதா
படம்: ஜெயந்தி

11

மர்மத் தொடர்கதை

காலையில்தான் மகேஷ் தல்லாகுளம் போனான்.

தல்லாகுளம் போஸ்ட் மாஸ்டர் 'கணக்குகள்' டாலி ஆகாமல் நாலு குமாஸ்தாக்கள் புடைசூழ லெட்ஜரில் ஆழ்ந்திருந்தார்.

பட்டுவாடா ஆகாத தந்திகள் ஒரு மூலை மேஜை மீது கும்பலாகக் கிடந்தன. ஒரு ஒன்றரைக் கண் குமாஸ்தா வெற்றிலை பாக்குப்போட்டுக் கொண்டு அரை இருட்டில் உட்கார்ந்திருந்தார். அவர் மேஜைக்கு மேலே பல்ப் 'செத்து'விட்டிருந்தது.


''பேர் என்ன ஸார்?'' என்றார் குமாஸ்தா.

''சுரேஷ் குமார்.''

''சுரேஷ் குமார்னு ஒண்ணும் வந்ததா ஞாபகம் இல்லையே – அதோ கிடக்கு – பார்த்துக்குங்கோ'' என்றார்.

எட்டுத் தந்திகள் போஸ்ட் மாஸ்டருடன் சொந்தம் கொண்டாடிக் கொண்டு கிடந்தன. சுரேஷ் குமார் இல்லை: நிஷார் அகமது கிடந்தது – ஒபனாக.

''ஒரு தந்தி ஒட்டாமே கிடக்கு சார்'' என்றான். பிரித்துப் பார்த்தான். நூர் அடித்திருந்தான். 'அக்பருக்கு டபிள் ஜே' போட்டு மகிழ்ச்சி தெரிவித்திருந்தான்.



''அட, கொண்டாங்க இப்படி! நேத்தே வந்தது அது. பார்த்துட்டுப் போட்டுட்டுப் போயிட்டான் போலிருக்கு.''

''என்ன சார், கண்டண்ட்ஸ் விசித்திரமா இருக்கு! 'அக்பருக்கு ஜே'ன்னா என்ன அர்த்தம்? வேடிக்கையாக இல்லை?'' மகேஷ் கேட்டான்.

''வேடிக்கை இல்லே சார் – இது ஒரு ''கோட் டெலிகிராம்'' அந்தப் பயலையே கேட்டேன். அவனோட பட்டணத்துலே ஒரு பெண் படிக்கதாம். இரண்டு பேரும் 'லவ்' பண்ணுங்களாம். ''நீ ஊருக்குப் போ. நான் எங்க வாப்பா கிட்டே நைஸா சொல்லிச் சம்மதம் வாங்கி உனக்கு டெலிகிராம் குடுக்கிறேன்'னாளாம். சம்மதம் கிடைச்சுடுத்துங்கறதைத்தான் இப்படித் தெரிவித்திருக்கிறான்.''

''டபிள் ஜேன்னா?''

''அப்பா – அம்மா ரெண்டு பேரும் சம்மதிச்சுட்டான்னு அர்த்தமாம். அப்படித் தான் சொன்னான். இதுக்காக எத்தனை

சந்திரநாத்



நீயா?

வாட்டி அலைஞ்சான். 'சந்தோஷத்துலே போட்டுட்டுப் போய்ட்டான் போலிருக்கு-பைத்தியக்காரன்.''

''இந்தக் காலத்துப் பசங்களே விசித்திர மானவங்க.''

''அதுலேயும் இது ரொம்ப...''

''எங்கிருக்கானும்?''

''நான் கேட்கலே – அது என் ''டூட்டி'' இல்லே.''

போஸ்ட் மாஸ்டர் கூப்பிட்டார். ''நயினார் ஸார், இத்த வந்துட்டுப் போங்க'' போய்விட்டார். வெளியே வந்தான். தந்தி மூளை முழுக்கப் பிராண்டிச் சிரித்தது. உபயோகமில்லாத ஒன்றைத் தூக்கிக்கொண்டு வந்தது போலிருந்தது.

சிம்மக்கல் பஸ் ஏறினன். 'கமல்நாத் என்ன கண்கட்டு வித்தை காட்டறீங்க?' உறுமினன். கோபப்பட்டான். செத்தது யார்? கமல்நாத் நீங்களா இல்லே வேறு யாராவதா?

கேள்விகள் ஒன்றன் பின் ஒன்ருக மூளைக் கத் தொடங்கின. கமல் ஏன் மதுரைக்கு வந்தார்? அவர் வருவது யாருக்காவது முன் கூட்டியே தெரியுமா? யாரையாவது ரகசிய மாகச் சந்திக்க வந்தாரா?

இரண்டு பேர் தங்கும் அறையை அவர் கேட்டதினல் அவர் யாரையும் ரகசியமாகச் சந்திக்க ஏற்பாடு இருந்திருக்காது. ரகசிய மாகச் சந்திக்க எண்ணி யிருந்தால் மகேஷ் போன்ற ஒரு துப்பறிபவனை தம்மைக் கண் காணிக்க அமர்த்திக் கொண்டிருப்பாரா?— நிச்சயமாக மாட்டார்.

லோ – அவருடைய விஜயம் அவரா லேயே திட்டமிடப்பட்டதுதான்.

என்ன திட்டம் அது? – தெரியவில்லே. குழப்பம்... குழப்பம்....

கமல் ஏதாவது கஷ்டத்தில் மாட்டிக் கொண்டிருந்திருக்கலாம். யாருக்கோ பயந் திருக்கலாம். சந்திக்க வரும்படி அவரைக் கட்டாயப்படுத்தி யிருக்கலாம். வராவிட் டால் கொன்று விடுவேன் என்று மிரட்டி யிருக்கலாம்.

அவன் மகேஷைக் கவனித்து, சந்தேகப் பட்டு, அவன் தூங்கப் போன பின் வர— இவர் ஆத்திரப்பட்டு அவனைத் தாக்கிக் குத் திக் கொன்றுவிட்டு, தானே இறந்துவிட்ட தாக எல்லாரும்நினைக்கட்டும் என்று நினைத்து' கொல்லப்பட்டவனுக்குத் தீயிட்டு, அடை யாளம் தெரியாத சவமாக்கிவிட்டு—

தலைமறைவாகி விட்டிருப்பாரோ?

ஒரேயடியாகக் குழம்பினன். சம்பந்த மில்லாமல் யோசித்தான். 'அக்பருக்கு ஜே'— நூர்' எந்த அக்பருக்கு ஜே – ஏன் அல்லா வுக்கு ஜே போடவில்லே? – கடவுளுக்கல்லவா நன்றி சொல்ல வேண்டும்? நிஷார் அகமது இது என்ன வேலே – கமலுக்குத் தனி வீடு இருந் திருக்குமோ? அங்கே நூரும் அவன் அம்மா வும் இருக்கிறார்களோ? நூர், அகமது இதெல் லாம் கூட நிஜப் பெயர்களாக இராதோ? —கமல்நாத், நூர் உன் மகளா? அவள் நிஜப் பெயர் என்ன? – இந்த நிஷாரைச் சந்திக்கத்தான் வந்தாயா? யார் இந்த நிஷார்?

—நூர் இவனைப் பண்ணிக்கொள்வது உனக் குப் பிடிக்கவில்லேயா? சம்மதிக்கிற மாதிரி தலையாட்டிவிட்டு, பையனை இங்கே சந்திக்க வந்து, பணத்தைக் கொடுத்து விரட்ட வந்தாயா?

-முடியாமல், பயலேயே கொன்றுகொளுத்தி விட்டாயா?

கேள்விகள் ஜகா வாங்கின. ஹோட்டல் நிர்மலா வந்து விட்டது. ஒன்றுமே நட வாதது போல நின்று கொண்டிருந்தது. லாபியில் நியூஸ் ஸ்டாண்டில் ஒரு பத்திரி கையை வாங்கிக்கொண்டு உள்ளே போய்—

ஒரு நாற்காலியைத் தேடிப் பிடித்து உட்கார்ந்தான். சில நிமிஷங்களில் பக்கத்தில் நிழல் தட்டிற்று. ''நீங்கதானே மிஸ்டர் மகேஷ்?''

நிமிர்ந்தான். இனிமேல் சொல்லிக்கொள்வதில் தப்பில்லை. பாண்ட் கோஷ்டியில் டிரம் வாசிக்கிறவன் மாதிரி ஒரு ஆள் நின்றுகொண்டிருந்தான்.

''உங்களுக்காகத்தான் அப்போ பிடிச்சுக் காத்துக்கிட்டு இருக்கேனுங்க.''

''எதற்காக?''

''எங்க பாஸ் உங்களைப் பார்க்க விரும்பறாங்க.''

''நான் யாரையும் பார்க்கவிரும்பவில்லை!''

''விஷயம் இன்னதுன்னு தெரிஞ்சாஉடனே வந்துடுவீங்க.'' சிரித்தான். ''கமல்நாத் விஷயம்.''

சுறுசுறுப்பானான். ''யார் உங்க பாஸ்—எங்கே இருக்கார்?''

''வாங்க என் கூட; சொல்றேன்.''

பத்திரிகையைப் போட்டு விட்டுப் பின்னால் போனான். பின் பக்கமாக இருந்த ஒரு கதவைத் திறந்து கொண்டு இருவரும் போனார்கள்.

வீதியில் ஒரு கறுப்புக் கார் நின்று கொண்டிருந்தது. பின் சீட்டில் அரை மோட்டாவாக ஒரு ஆள் உட்கார்ந்திருந்தார். லேசாக ஆனால், கடுமை குறையாமல் சிரித்தார். முன் கதவை டிரைவர் திறந்து விட்டான். மகேஷ் ஏறிக்கொண்டதும் வண்டி நகர்ந்து தெருக்களைக் கடந்து, நாற்சந்திகளைத் தாண்டியது.

சட்டென்று இரு பக்கமும் வீடுகள் குறைந்து கொண்டே வருவதைக் கவனித்தான். ஓ, ஊருக்கு வெளியில் அழைத்துப் போகிறார்கள். எதற்கு?

இனியும் பேசாமல் இருப்பது தவறு என்று முடிவுக்கு வந்து, அவர்களை முந்திக்கொள்ள நினைத்து, கையை மெதுவாகக் கால் சட்டைப் பைக்குள் விடும்போது,

கார் சட்டென்று நின்றது. ''மகேஷ் அதற்கு அவசியமே இல்லை'' என்றான் அரை மோட்டா. ''நாம் பேச வந்தது வேறு விஷயம்.''

''சொல்லுங்கள்'' என்றான் கடுமையாக.

மோட்டா தயங்கினார். ''மகேஷ், நான் உன்னிடம் 'பிரண்ட்லி'யாகவே பேசவிரும்புகிறேன்.... உனக்கு எந்தத் தீங்கும் செய்ய நான் நினைக்கவில்லை. உன்னிடம் 'ரிக்வெஸ்ட்' செய்துகொள்ளவே வந்தேன்.''

''புரியவில்லை'' என்றான் மகேஷ்.

''கமல்நாத் உன்னிடம் என்னென்ன ரகசியங்களை வெளியிட்டிருக்கிறாரோ எனக்குத் தெரியாது. — அவசியமும் இல்லை. ஆனால் என்ன சொல்லியிருந்தாலும் அதை எல்லாம் நீ அடியோடு மறந்துடணும்... உனக்குக் கொடுப்பதற்காக இதோ இந்தப் பையில் ஆயிரம் ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்.''

''ஓ—'' என்றான்.

''இதை வாங்கிக்கொண்டு, கமல்நாத் என்கிற பெயரையே மறந்துவிட்டு இந்த ஊரை விட்டே போய், எங்கேயாவது சௌகரியமாக இருந்துக்க.''

''போலீஸ் என்னை இரண்டு நாள் இருக்கச் சொல்லியிருக்குது.''

''தெரியும். ஆனால் இரண்டு நாள் கழித்து உன்னைப் போக விட்டுவிடுவாங்க. அதுவரை நீ எதையும் வெளியிடாமல் இருந்தால் போதும்.''

மகேஷ் எடுத்த துப்பாக்கியை ஜேபியில் போட்டுக் கொண்டான். ஆயிரம் ரூபாயை எதற்காக இழக்க வேண்டும்? ''சரி, இரு தரப்புக்கும் நஷ்டமில்லாமல் பிஸினஸ் பேசுவோம்'' என்றான்.

மோட்டா ஒரு சிகரெட்டை நீட்டினார். எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டார். ''ஆரம்பிப்போமா? — கமல்நாத் தேடி வந்தது உங்களைத்தான் என்று நினைக்கிறேன்!'' என்றான்.

மோட்டா உடனே பதில் சொல்லாமல் அவனை வெறித்தார். பிறகு ''கரெக்ட்—என்னைப் பார்க்கத்தான் வந்தார். என் பெயர் கங்குலி. அந்தத் தெருவில் ஒரு 'கூல் பார்' வைத்திருக்கிறேன்'' என்றார்.

''ஏன் அவரைக் கொன்றீர்கள்?''

''அவர் என்னிடம் ஒரு பணவிவகாரம் பற்றிப் பேசத்தான் வந்தார். யாரோ முந்திக் கொண்டு அவரைக் கொன்றுவிட்டார்கள்'' என்றார்.

அவர் முகம் கபடமற்று இருந்தது. உண்மையே பேசுகிறார் என்று தெரிகிறது. கொலைகாரர் போலத் தெரியவில்லை.

''எதைப் பற்றிப் பேச அவர் வந்தார்?''

''நாங்க ரெண்டு பேரும் ரொம்ப வருஷத்துக்கு முன்பு ஒரு தொழிலில் பார்ட்னர்களாய்ச் சேர்ந்தோம். நல்ல லாபம் வந்தபோது என் பங்கையும்எடுத்துக்கொண்டு தலைமறைவாகி விட்டார். சமீபத்திலேதான் அவர் சென்னையில் இருப்பதைக் கண்டு பிடித்தேன். என் பணத்தைக் கொடுத்து விடும்படி நெருக்கினேன். அவர் பயந்து போய்விட்டார்.''

''பணம் கொடுக்கத்தான் வந்தாரா?''

''இருக்கலாம். ஜூன் 3ம் தேதி தருவதாகச் சொன்னார்.''

''கலர் படம் எடுத்தோமே அதன் சாயம் வெளுத்துப் போச்சு!''

''அடடா! எப்படி?''

''அதே கலர் படத்தை டி. வி. க்காரங்க கறுப்பு வெளுப்பாகக் காட்டிட்டாங்க!''



உண்மை நிகழ்ச்சி

புனர்ஜன்மம்

அவ்வளவுதான்... குழந்தை இறந்துவிட்டது என்று எல்லோராலும் தீர்மானிக்கப்பட்ட போதிலும் பெற்றோர் விடாப் பிடியாகத் தேடச் செய்ததால் பாதாளச் சாக்கடையிலிருந்து மீட்கப்பட்டது. அண்மையில் இது நடந்தது புது தில்லியில்.

தாத்தாவுடன் பூங்காவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை ஷானு,மேன்ஹோல் திறந்திருந்ததால் 15 அடி ஆழமுள்ள பாதாளச் சாக்கடையில் விழுந்து விட்டான். தாத்தாவின் கூக்குரலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் உதவிக்கு வந்தார்கள். ஆனால் அப்பொழுது இருட்டிவிட்டதால் யாருக்கும் சாக்கடையில் இறங்கும் தைரியம் வரவில்லை. காரணம், சாக்கடை மெயின் லைனுடன் சேர்ந்து யமுனையில் கலக்கிறது. நெருப்பணைக்கும் படையும் காவல் துறையும் உடனே வரவழைக்கப்பட்டு அவர்கள் உதவியுடன் தேடினார்கள். கண்டது தோல்விதான்.

விடிந்ததும் மீண்டும் தேடத் தொடங்கினார்கள். செங்கோட்டைக்கு அருகே செல்லும் இந்தச் சாக்கடையைச் சோதனை செய்ய வேண்டும் என்று யோசனை கூறப்பட்டு அங்கு சென்று பார்த்தபோது டார்ச் விளக்கின் ஒளியில் ஒரு குழந்தைஉட்கார்ந்திருந்தது தெரிந்தது. குழந்தையை வெளியே கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில் அங்கு 4 அங்குலம் தண்ணீரே இருந்தது. 17 மணி நேரம் சாக்கடையின் உள்ளே இருந்த குழந்தை கை கால் கொஞ்சம் ஊறியிருந்தது தவிர வேறு ஒரு ஆபத்தும் இல்லை!

இந்துஸ்தான் டைம்ஸ்
தகவல்: கலாமூர்த்தி



பணத்தைச் செக்காக அனுப்பியிருக்கலாமே?''

''அது அப்படி அனுப்ப முடியாத பணமாக இருந்தால்?''

''எவ்வளவு கொடுக்க வேண்டும்?''

''ஒரு லட்சம்.''

''இப்போது கமல்நாத் இறந்துவிட்டதால் உங்களுக்கு ஒரு லட்சம் நஷ்டம்தானே? பின் ஏன் அவரைப் பற்றிப் போலீசுக்கு எதுவும் தெரியக்கூடாது என்கிறீர்கள்?''

''ஓபனாகச் சொல்கிறேன் மிஸ்டர் —என் பெயர் இந்த விவகாரத்தில் எந்த இடத்திலும் தலை காட்டுவதை நான் விரும்பவில்லை. அவ்வளவுதான்.''

—முகம் தெளிவாக இருந்தது. கொன்றது நானில்லை என்றது. அப்படியானால் கொன்றது யார்?கமலே தன்னைத் தானே கொன்று கொண்டு விட்டாரா? ஏன்? இந்த ஆளுக்குப் பயந்தா?

''மிஸ்டர், இறந்து போனது கமலாக இல்லாமலும் இருக்கலாம் அல்லவா?''

''என்ன சொல்றீங்க?'' — தூக்கி வாரிப் போட்டுக் கொண்டு கேட்டார் கங்குலி.

''யோசியுங்கள். இறந்தவர் உடல் முழுதும் அடையாளம் தெரியாமல் கருகியிருக்கிறது. அப்படி அடையாளம் தெரியாமல் போக வேண்டும் என்பதற்காகத்தான் கொன்ற பிறகு தீவைத்திருக்கிறார்கள். அப்படி ஏன் செய்ய வேண்டும்? கொன்று கொளுத்த வேண்டிய அவசியமில்லையே?''

''நீ சொல்வதில் அர்த்தம் இருக்கிறது.''

''அப்புறம் பாருங்கள். கமல்நாத் உங்களுக்கு ஒரு பெரிய தொகை தரவேண்டியிருக்கிறது. கமல்நாத் என்ற ஒருவர் இறந்துவிட்டார் என்று நீங்கள் நம்பும்படி செய்து விட்டால், நீங்கள் அவரைத் தேடுவதையும் நெருக்குவதையும் விட்டு விடுவீர்கள் அல்லவா? ... யாரோ ஒரு ஆளை நடுநிசியில் நான்கூட அறியாமல் தருவித்து, அவனைக் கொன்று அவன் அடையாளம் தெரியாமல் இருப்பதற்காக அவனுக்குத் தீயுமிட்டு—''

''எஞ்சாமி—'' என்று கூவினார் கங்குலி. ''அப்படியானால் கமல்நாத் இப்போது எங்கே இருக்கிறார்?''

''யாருக்குத் தெரியும்? வேறு ஏதாவது ஒரு ஜன நெருக்கமுள்ள நகரத்துக்குச்சென்று யாரும் அறியாமல் வாழநினைத்திருக்கலாம்.''

''இதை நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே'' என்றார் கங்குலி.

''இப்பொழுது சொல்லுங்கள் மிஸ்டர், இந்தக் கேஸை இப்படியே நான் விட்டு விட்டு ஊருக்குப் போய்விடவா? உண்மையைக் கண்டுபிடித்து, உங்களுக்குச் சொல்லவா? கமல் இருப்பது தெரிந்தால்தானே லாபம்?''


''கரெக்ட். கமலைக் கண்டுபிடி. விடாதே. இந்த ஆயிரம் உனக்கு அட்வான்ஸ்; கண்டுபிடித்ததும் இன்னொரு ஆயிரம்'' என்றார் ஆர்வமுடன் கங்குலி.

கார் நகரத்தை நோக்கித் திரும்பியது.

பையில் ஆயிரம் கனமாக இருப்பது மிகவும் மகிழ்ச்சி அளித்தது. செத்தும் கொடுக்கிறாரே கமல்நாத்! (தொடரும்)

மாயாவின் பயம்

சுப்ரஜா



"நேத்து ஈவ்னிங் அப்படித்தான் டாக்டர் நாங்க ரெண்டு பேரும் கோவிலுக்குப் போய்விட்டு ராத்திரி எட்டு மணிக்கு வீட்டுக்குத் திரும்பினோம். சமையல்கட்டு ஜன்னல் வழியா ஒரு பூனை எப்படியோ உள்ளே நுழைஞ்சு, பாலைக் காலி பண்ணிட்டு, அடுப்புகிட்டப் படுத்துட்டு இருந்தது. அப்பப் பார்த்து இவ உள்ளே நுழைய, அது அவசரத்துலே ஜன்னல் வழியை மறந்து கதவுப் பக்கமே பாய, இவ மயக்கம் போட்டு விழுந்துட்டா!" — மாயாவைக் காட்டி லேடி சைக்கியாட்ரிஸ்ட் வேணியிடம் சொன்னான் மாதவன் — அவள் கணவன்.

"சின்ன வயசுலே பூனையோட சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி ஏதாவது நடந்திருக்கா?"

"நடந்திருக்கு டாக்டர். எனக்கு வயசு அப்போ எட்டு இருக்கும். எங்க காலனியில 'ரீட்டா'ன்னு ஒரு பூனை இருந்தது. அது அப்பத்தான் நாலு குட்டி போட்டிருந்தது. அது குட்டிகளுக்குச் சாய்ந்து படுத்துப் பால் கொடுத்துட்டு இருந்தது. நான் அப்பக் கையில ஸ்கிப்பிங் கயிறோட மாடிக்குப் போனேன். என்ன செஞ்சுகிட்டு இருக்குன்னு சரியா விளங்காமக் குட்டிங்க மேல படற மாதிரி கயிறால அடிச்சிட்டேன். அவ்வளவுதான். ரீட்டா எம்மேல பாய்ஞ்சு குதற நான் அலறின அலறல்லே காலனியே திரண்டு வந்துடுச்சு. ஒரு வாரம் ஜுரத்துல படுத்திருந்தேன். அதுலேயிருந்து பூனையைக் கண்டாலே பயம்."

மாயாவுக்கு 'ஐலூரோபோபியா — அர்த்தமற்ற பயம். சின்ன வயசில் நடந்த நிகழ்ச்சி மனசில பதிஞ்சு பாதிச்சிருக்கு!

"மாயா... பூனை தன் குட்டிகளுக்குப் பாசத்தோட பாலைச் சுரந்து கொடுத்துட்டிருக்கிறப்போ நீ நடந்துகிட்ட விதம் அதனோட தாய்மை உணர்ச்சியை அவமானப்படுத்தியிருக்கு. அதனாலதான் உன் மேலே பாய்ஞ்சிருக்கு!"

"நான்வேணும்னு பண்ணலையே டாக்டர்!"

"பட்... அந்தப் பூனைக்கு அது புரியாதே. சரி... இது எத்தனையாவது மாசம்?" மாயாவைக் கேட்க, மாயா சின்ன வெட்கத்துடன் "தேர்ட் மன்த்" என்றாள்.

மாயாவும் மாதவனும் கிளம்பினார்கள்.

மறுநாளும் வந்தார்கள்.

வேணி மேஜை டிராயரைத் திறந்து புசுபுசுவென்ற ரோமத்துடன் இருந்த பூனைப் பொம்மையை எடுத்து மாயாவிடம் கொடுத்தாள்.

மாயா பயத்துடன் வாங்கினாள்.

"மாயா...பொம்மைதான்... கைதேர்ந்த சிற்பியின் கைவண்ணத்திலே அழகாச் செய்யப்பட்டிருக்கு... எவ்வளவு தத்ரூபமா இருக்கு பாரு!"

மாயாவுக்குச் சற்றுப் பயம் தெளிந்தாற் போல் இருந்தது.

ஆயிற்று. இன்றோடு எட்டாவது நாள். ஒன்பதாவது நாளன்று—

"டாக்டர்.... உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கும்... நேத்து கோயில் போகும்போது லேடி டாக்டர் சீதாலட்சுமி வீட்டு வாசல் வழியாப் போக வேண்டியிருந்தது. அப்ப அந்த வீட்டு வாசல்லே சின்னக் குழந்தை படியில. பக்கத்துல வேகமா போச்சு ஒரு பூனை. . என்னோட உணர்வுகள் உந்தப்பட வேகமாகப் போய் பூனையைத் தூக்கி வேற பக்கம் விட்டுட்டேன். அப்பவே பயம் போயிடுச்சு!" என்றாள் மாயா.

"பாத்தியா மாயா... ஒரு தாய்மை உணர்ச்சியோடதான் நீ அந்தக் காரியத்தைச் செஞ்சிருக்கே!" என்றாள் லேடி சைக்கியாட்ரிஸ்ட், முதல் நாள் தன் தோழி சீதாலட்சுமியிடம் சொல்லி மாயா வரும் நேரத்தில் குழந்தையையும் பூனையையும் இணைத்து ஒரு சின்ன நிகழ்ச்சி நடத்தியதை மனத்திற்குள் நினைத்துக் கொண்டே.

மனோதத்துவக் கதை

காற்றில் ஏறி...



சமீபத்தில் பம்பாய் சௌபாத்தி கடற்கரையில் காற்று வாங்கப் போனவர்கள், சிவப்பும் நீலமுமாக வண்ண மயமான பாராசூட் குடையொன்று வானத்திலிருந்து இறங்க, அதில் இளம் பெண் ஒருத்தி ஊஞ்சலாடிக் கொண்டிருப்பதை வியப்புடன் பார்த்தார்கள்—

அவள் பெயர் ரெஸியா ஷேக். வயது 19.

பாராசூட் தரித்து வானிலிருந்து தரையில் குதிப்பதற்குப் பதிலாக, பட்டம் விடுகிற மாதிரி தரையிலிருந்து புறப்பட்டு விண்ணில் பறந்து, மீண்டும் கீழே இறங்குகிற இந்தப் புதிய சாகஸ விளையாட்டுக்கு 'பாரா கைட்டிங்' என்று பெயராம். இந்த 'பாராகைட்' (பட்டம்) தடிமனான ஒரு கயிறு மூலம் தரையில் ஒரு ஜீப் அல்லது கடலில் ஒரு மோட்டார் படகோடு இணைக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியில் சேரக் குறைந்தது பதினெட்டு வயது ஆகியிருக்க வேண்டும். நாற்பத்தைந்து கிலோ எடை இருக்க வேண்டும். இதற்குக் குறைந்தால் பறக்கவும், இறங்கவும் கஷ்டமாம்! குறைந்தபட்சக் காற்று வேகம் மணிக்குப் பத்து மைலாவது இருக்க வேண்டும். பயிற்சி பெற்ற பின் சான்றிதழ் வழங்குகிறார்கள்.

நானூறு பவுண்ட் எடை வரை — யானை கூட! — இந்த 'பாரா கைட்டி'ல் பறக்கலாம் என்கிறார் ஓய்வு பெற்ற ஐ. ஏ. எஃப். ஜூனியர் வாரண்ட் ஆபீசர் ஹெச். எம். ஷேக்.

பம்பாயில் ஜுஹு ஏர்போர்ட்டிலும், மகாலட்சுமி ரேஸ் கோர்ஸ் மைதானத்திலும் இதற்குப் பயிற்சி கொடுக்கிறார்கள்.

தகவல்: சாருகேசி

.- ஆதாரம்: 'பாம்பே'

விளையாட்டு

துணுக்குகள் கொறிக்க...

● ஆட்டோ டிரைவர்கள் பெரும்பாலானோர் தம் இருக்கையில் சாய்வாக அமர்ந்து ஓட்டுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். ''ஏன் அவ்வாறு சாய்வாகஅமர வேண்டும்?'' என ஒரு ஆட்டோ டிரைவரைக் கேட்டேன். ''ஏதேனும் விபத்து ஏற்பட்டால் உடனே டிரைவர் வெளியே தூக்கி எறியப்படுவதற்கு அவ்வாறு அமர்ந்தால்தான் நல்லது என்றார்'' அவர். இது உண்மையாயின், பயணிகள் கதி என்ன என்று அவரையே கேட்டேன். அவர் மெதுவாகச் சிரித்துக் கொண்டார்.

● விஜயா — வாஹினியின் பத்தாவது படப்பிடிப்புத் தளம். நுழைகிறேன். என்ன விந்தை! தமிழ்ப் படங்களில் முந்தானை ஓர் அங்குலம் கூட விலகாமல் நடிக்கும் ரூபா அட்டகாசமாய் இளைப் டான்ஸ் உடையில் கவர்ச்சி நடனம் ஆடிக் கொண்டிருந்தார். சௌமிய சித்ரா நிறுவனத்தினரின் 'ஆம்பல் பூ' என்ற மலையாளப் படத்துக்காக அந்த நடனமாம்! ஆனால் மன்னிக்க வேண்டும் ரூபா அவர்களே! கவர்ச்சி உடை உங்களுக்குக் கவர்ச்சியைத் தரவில்லை.





● தொடர்ந்து பட்டினியால் வாடுபவர்கள் பசி காரணமாக இறந்துவிடாமலிருக்க நூறு ரூபாய் உதவிப் பணம் வழங்கும் திட்டத்தைக் கிராமப்புறங்களில் ஓசைப்படாமல் தமிழ் நாடு அரசு நிறைவேற்றி வருகிறதாம். இத்தகைய உதவி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் மூலம் வழங்கப்படுகிறது.

● கல்லூரித் தேர்தல்களில் ஓட்டுக் கேட்கும் முறையில் மாணவர்கள் புகுத்தியுள்ள புதுமை முறை விளம்பரம் வருமாறு:

காணவில்லை!

பெயர்: ஏ. ஜெயகுமார்
வயது: 20
உயரம்: 5' 7''
நிறம்: மாநிறம்
தாய்மொழி: தமிழ்

வைஸ் சேர்மன் ஆனால்தான் எங்களைச் சந்திப்பேன் என்று சொல்லிச் சென்றவனைக் காணவில்லை. எனவே அவனை வைஸ் சேர்மனாக்கி எங்களிடம் ஒப்படைக்கவும்.''


இந்த விளம்பரத்தை வெளியிட்டுள்ளவர்கள் ஜெயின் கல்லூரி மாணவர்கள்.

● மாலை வேளை. நண்பர் ஒருவர் வீட்டின் வெளித்தோட்டத்தில் அமர்ந்திருந்தோம். அப்போது வீதியில் ஒருவர் தேகப் பயிற்சிக்காக வியர்க்க வியர்க்க ஓடிக்கொண்டிருந்தார். அதைக் கண்ட நண்பரின் மனைவி, ''என்னங்க தினமும் காலையிலும் மாலையிலும் நம் வீட்டைச் சுற்றி எத்தனை பேர் ஓடுறாங்க... நீங்களும் ஓடினால் என்ன?'' என்று கேட்க, நண்பர் அமைதியாகக் கூறினார்: ''உன்னைக் கல்யாணம் பண்ணினதற்காக வீட்டைச்சுற்றி ஓட முடியாது. வீட்டை விட்டே ஓடணும்...''.

● ''என்னதான்கிரைண்டர்லேமாவுஅரைச்சாலும் மாப்பிள்ளை ஒரு கை அரைச்சால் தான் 'இட்லி' 'மெத்'துன்னு இருக்குது!'' என்ற 9—8—81 கல்கி அட்டைப்பட ஜோக்கை வெட்டி எடுத்துத் தம் வீட்டு கிரைண்டரில் ஒட்டி வைத்திருக்கிறார் பெரம்பூரைச் சேர்ந்த ஓர் இல்லத் தலைவி!

● தம் குழந்தைகள் வெளி நாட்டில் படிக்க வேண்டும் என்று எல்லோரும் விரும்புவர்.

ஆனால், வெளி நாட்டில் வசிப்போரின் குழந்தைகளுக் கென்றே சென்னையில் ஒரு ஹாஸ்டல் உள்ளது. இந்தியப் பண்பாடும் பழக்க வழக்கங்களும் ஒழுக்கங்களும் வெளி நாட்டில் பிள்ளைகளுக்கு ஏற்படாது என்ற காரணத்தின் அடிப்படையில் தம் குழந்தைகளை இந்தியாவில் படிக்க வைக்கின்றனர் சில பெற்றோர்'' எனக் கூறுகிறார் விடுதி நிர்வாகி.



● விபத்தில் விரல்கள் துண்டாகி விட்டால், உடனே துண்டான விரலை எடுத்து ஒரு சுத்தமான பாலிதீன் பையில் இட்டு, முடியுமானால் பாலிதீன் பையைச் சுற்றி ஐஸ் கட்டிகளை அடுக்கிச் சற்றும் தாமதிக்காமல் ஸ்டான்லி மருத்துவமனை வந்தால் வெட்டுண்ட விரலை ஒன்று சேர்த்துவிட முடியுமாம். ஆனால் ஓர் எச்சரிக்கை. எக்காரணத்தை முன்னிட்டும் ஐஸ் கட்டிகள் வெட்டுண்ட விரலின் மீது நேரடியாகப் படக் கூடாது.

—பெம்ஜி



Smt. RENGAMONY

In fond and affectionate memory of

Smt. RENGAMONY

Born : 25-3-1925

Died : 29-8-1972

Beloved wife of S. Padmanabhan Affectionate mother of Jana and Kanna, mother-in-law of J. Gopalan & Malathy, Grandmother of Sandhya & Srinivas



இரு சைக்கிள்களில் இரண்டாயிரம் கி.மீ.
[illegible]

திருநெல்வேலி தொலை பேசி நிலையத்தில் வேலை பார்க்கும் திரு. பத்மநாபன் (31) திரு முத்துக்குமாரசுவாமி (30) ஆகியோர் சமீபத்தில் வெற்றிகரமாகத் தங்கள் இலங்கை சைக்கிள் பயணத்தை முடித்தனர்.

9.3.1980 தேதியில் வெளிவந்த கல்கியில் இடம்பெற்ற 'உலகம் சுற்றும் சைக்கிள் வீரர்' மன்மோகன் சக்ரவர்த்தி பற்றிய கட்டுரை அளித்த ஊக்கத்தால் இவர்கள் முதலாவதாக 1000 கி. மீ. கேரளா – தமிழ்நாடு சைக்கிள் பயணத்தை மேற்கொண்டனர். (அதைப் பற்றிய செய்தி 1–2–81 வெளிவந்த கல்கியில் இடம்பெற்றுள்ளது.) இப்பொழுது ஈழம் முழுவதையும் சைக்கிளிலேயே சுற்றி வந்து சாதனை ஏற்படுத்தி உள்ளனர்.

இலங்கையில் சுமார் 2000 கி.மீ. சைக்கிளிலேயே பயணம் செய்தனர். இந்தியாவிலும் சேர்த்துக் கடந்த மொத்த தூரம் 2500 கி.மீ.

''இலங்கையின் சாலைகள் சிறப்பாக உள்ளன. மொத்த பயணத்தில் இரண்டு முறை மட்டுமே சைக்கிளுக்கு காற்றுஅடைத்தோம். ஒருமுறைகூட 'பங்சர்' ஆகவில்லை. கடல் மட்டத்தை விட 2500 அடி உயரத்தில் உள்ள கண்டி, ரத்தினபுரி போன்ற மலைப் பாங்கான இடங்களையும் சைக்கிளிலேயே சென்று பார்த்தோம்'' என்கின்றனர்.

இவர்கள் மறக்க முடியாதது இலங்கை மக்களின் உபசரிப்பும், விருந்தோம்பல் குணத்தையுமே. அடுத்து யானையிடமிருந்து உயிர் தப்பிய நிகழ்ச்சியைக் கூறுகின்றனர்.

''பொலனுருவாவிலிருந்து சிகிரியா செல்லும் வழியில் ஹபரணு என்னும் இடத்தில் சாலையில் ஒரு காட்டு யானை நின்று வழியை மறைத்துக்கொண்டிருந்தது. நாங்கள் சைக்கிளைச் சாலையை விட்டுக் கீழிறக்கி இறந்தவர்கள் போல் தரையில் கிடந்தோம். எங்கள் அதிர்ஷ்டம் யானை நின்று பார்த்துவிட்டுப் பின் சாலையை விட்டுக் காட்டுக்குள் சென்று விட்டது.''

இலங்கை மக்களிடம் உள்ள வினோதப் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கேட்டபோது:

1. சிங்களமக்கள் பொதுவாகத் தங்கள் பிறந்த தினத்தைக் குறிக்கும்பொழுது முறையே பிறந்த வருடம், மாதம், தேதி என்று (1960–7–4) எழுதுகின்றனர்.

2. ஒரு கையில் வெல்லக் கட்டியும், மறு கையில் பால், சர்க்கரை எதுவும் சேர்க்காத டீயையும் வைத்துக் கொண்டு டீயை ஒரு மிடறும் பின் வெல்லக் கட்டியை ஒரு முறை நாவில் தேய்த்துக் கொண்டும் குடிக்கின்றனர்.

3. பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கும்போது சிறிய பிராணிகள் (நாய், பன்றி) பஸ்ஸின் முன் பின் சக்கரங்களுக்கு இடையில் ஓடி வந்து உயிரிழக்காமல் இருக்க முன் பின் உள்ள பம்பர்களுக்குக் கீழே கம்பிகளை அமைத்துள்ளனர்.

இளைஞர்களின் எதிர்கால ஆசை உலகின் ஒவ்வொரு கண்டத்திலும் தங்கள் சைக்கிள் சக்கரம் சில ஆயிரம் கி. மீ.ட்டர்களாவது சுழல வேண்டும் என்பது. -இரா. எஸ்.மணி

※ இடது பக்கம்: சைக்கிளுடன், கறுப்பு பனியன் அணிந்தவர் திரு முத்துகுமாரசுவாமி
வலது பக்கம்: சைக்கிளுடன், வெள்ளை பனியன் அணிந்தவர் திரு பத்மநாபன்
திருநெல்வேலி தொலைபேசி நிலையத்திலிருந்து இலங்கை யாத்திரை கிளம்பும்போது எடுத்தது.

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்



புதிதாக மாற்றியமைக்கப்பட்டதால் மேன்மையாக இயங்குகிறது: விரைவாகவே குளிர்ச்சியடைகிறது.

தீவிர ஆராய்ச்சி மற்றும் கடும் உழைப்பின் விளைவாக ஜான்ஸன் அளிக்கும் புதிய, மேன் படுத்தப்பட்ட மிக்சர்-கிரைண்டர் எல்லா வேலைகளையும் சிறப்பின் சிகரமாகச் செய்கிறது.

கிளர்ச்சியூட்டும் புது அம்சங்கள் பாரீர்!

முழுமையான செயலாற்றலுக்காக தனிச்சிறப்பு வாய்ந்த பிளேடுகள்



இரு கிண்ணங்களிலும் அமைக்கப்பட்ட புதிய பிளேடுகள் மேலும், கீழும் மற்றும் சுழன்றும் இயங்குவதால் முழுமையான செயலாற்றல் கிடைக்கிறது. கட்டிகளோ, தானியங்களோ இருக்க வாய்ப்பில்லை.

மேல்பாகத்தில் இடைவெளி இருப்பதால் துரித குளிர்ச்சி



சூடான காற்று துரிதமாக மேல்பாக இடைவெளியிலிருந்து வெளியேறுவதால் மோட்டார் சூடாகாமல் 45 நிமிடங்கள் தடையின்றி இயங்க முடிகிறது. சாதாரணமாக மோட்டார் எரிந்து விடும் அபாயமில்லை.

புதிய கலவை கிண்ணம் தாராளமான காற்றோட்டத்திற்கென.



கலவைகிண்ணத்தின் வளைந்த உட்பாகம் பிளேட் இயங்குவதற்கு வாகாக அமைக்கப்பட்டிருக்கிறது. சீரான கலவை கிடைப்பதோடு சரியான அளவுதான் இதில் அடங்கும்.

எவர்சில்வர் கிண்ணத்தில் சீரியமுறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி



சீரிய முறையில் அமைக்கப்பட்ட கைப்பிடி எவர்சில்வர் கிண்ணத்தைக் கையாள எளிதாகவும், சௌகரியமாகவும் இருக்கிறது.

சுகாதாரத்திற்கென இரு கிண்ணங்கள்; பாதுகாப்புக்கென இரு பிளேடுகள்



இரு தனி கிண்ணங்கள் இருப்பதால் கலவை செய்தவுடன் கழுவும் தொல்லையில்லை. வேறு கிண்ணத்தில் அரைக்கலாம். சிரமம் குறைவு. மில்க் ஷேக்குகளில் மசாலா மணம் கலப்பதில்லை. உறுதியாக இணைக்கப்பட்ட பிளேடுகள் முழுமையாக பாதுகாப்பு அளிக்கின்றன. இயங்கும்போது பிளேடுகள் பறந்து செல்லும் அபாயமில்லை.

ஜான்ஸன் மிக்ஸர் கிரைண்டரின் முதன்மையான சிறப்பு அம்சங்களும் இதிலே உள்ளன.

- துப்புரவாகச் சுத்தம் செய்ய எளிதாகக் கழற்றக்கூடிய பாகங்கள்
- செம்மையாக வேகத்தை மாற்ற மேன்மையான இருசர் விசை.
- ஒரு வருட உத்திரவாதம் மற்றும் சிறப்பான பின் விற்பனை பணி.

JOHNSON

ஆற்றலிலும், இயக்கத்திலும் இணையிலாச் சிறப்பு கொண்டது

Parade/BE/8122

காதல் கடிதங்களே கல்யாணப் பரிசாக....

வி. உஷா

வாழை கட்டிய தூண்களோடு விளையாடும் பட்டுப் பாவாடைக் குழந்தைகள்.

பன்னீர், சந்தனம், ரோஜாக்கள் நிறைந்த ரிஸப்ஷன் டேபிளில் கல்யாணத்துக்காகக் காத்திருக்கும் அடுத்த ஸெட் பெண்கள்.

வெள்ளை ஸ்பீக்கரில் ஒலிபரப்பாகும் 'ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிற'தைக் கேட்டு ஜாடையுடன் ஸைட் அடிக்கும் இளவட்டங்கள்.

பட்டுப் புடவைகளைப் பற்றி, பேசும் கணவனின் பாக்கெட்டைப் பற்றிக் கவலைப்படாத பெண்கள்...

திருமணச் சடங்குகளை அவசரமாய் முடித்துவிட்டு அடுத்த கல்யாணத்துக்கு ஓடக் காத்திருக்கும் புரோகிதர்கள்.

லட்சிய தீபமாய் எரியும் ஹோம குண்டம்.

கண்களில் மையுடன் பார்வையில் மகிழ்வுடன் மணமகன் மனோஜ்.

நெற்றிச் சுட்டி, ஜிமிக்கி, சூரிய சந்திரர்கள் புல்லாக்கு, ராக்கொடி, அரக்குப் பட்டு, இவைகளுடன் சம்பிரதாய மணமகள் தருணா.

ஆனால் அவள் கண்களில்—

சந்தோஷத்தின் சாயல் இல்லை. மானின் மருட்சி இருந்தது.

மயக்கும் புன்னகை இல்லை. பயத்தின் பரிச்சயம் இருந்தது.

நகையாக நாணச் சிரிப்பில்லை. நடுக்கமான நாடி இருந்தது

''தருணா! இப்படி தலையைக் குனிஞ்சுகிட்டே இருந்தா அப்புறம் ஃபோட்டோல உன் நெத்திச்சுட்டியும் ராக்கொடியும்தான் விழும்.... பாரு. உன் முகத்தைப் பார்க்க முடியாம மாப்பிள்ளை இப்படியும் அப்படியும் நெளிஞ்சு கஷ்டப்படறார்.''


குபீரென்று கடலலையாய் எழுந்த சிரிப்பில் மெல்ல தருணா தலை நிமிர்கையில்—

அவனைப் பார்த்துவிட்டாள்.

லேசாய்க் கலைந்த தலையும், கசங்கிய ஷர்ட்டும், ஒல்லியும் இல்லாத- பருமனும் இல்லாத இரண்டுங்கெட்டான் அந்த ஆகிருதியும்—

அவனேதான். அவனேதான்.

மணி.



அவன் ஏன் இங்கே வந்திருக்கிறான், கையில் பெரிய லெதர் பையும், முகத்தில் ஒரு வஞ்சகப் பார்வையுமாக....?

அவள் எழுதிய காதல் கடிதங்கள் அந்தப் பையில் இருக்குமோ? அவற்றைக் கல்யாணப் பரிசாய் மனோஜிடம் கொடுத்து வாழ்க்கை உதயத்தையே அஸ்த மனம் செய்துவிடப் போகிறானோ?

அவள் பயந்து நடுங்கிப் போனாள்.

தெய்வமே. இதென்ன சோதனை?

வாழ்வில் ஒரு நாளே வரும் இந்த மாலை சூடும் மணநாளை அனுபவிக்க முடியாமல் என்னை ஏன் வேதனைப்படுத்துகிறாய்?

'இந்தாங்கோ... இதைக் கெட்டியாப் பிடிச்சுக்குங்கோ... எங்கே, பொண்ணோட நாத்தனாரை அவ பின்னாடி ரெடியா நிக்கச் சொல்லுங்கோ... எங்கே மந்திரம் சொல்லுங்கோ....'

தருணா, மிஸஸ் தருணா மனோஜ் ஆனாள்.

"எக்ஸ்க்யூஸ் மீ... இந்த ஹம்பிள் ப்ரஸண்ட் என்னோடது....தயவு பண்ணி ஏத்துக்கணும் மிஸஸ் மனோஜ்."

மணி தன் மர்மப் புன்னகை வெற்றிப் புன்னகையாய்ப் பளபளக்க அந்தத் தோல் பையை அவளிடம் நீட்டினான்.

"தாங்க்யூ" வற்றிஉலர்ந்துபோன குரலில்.

அவன் அங்கிருந்து போனதும் ரிஸப்ஷன் ஸோஃபாவில் அவளை அமர்த்திக்கொண்டான் மனோஜ். அந்த லெதர் பையை அவளிடமிருந்து வாங்கினான். திறந்தான்.

துடிதுடிக்கும் நெஞ்சுடன் அதைப் பார்த்தாள்.

கட்டுக் கட்டாய்க் கடிதங்கள். கடிதங்களேதான்.

"ஸீ தருணா.. மொதல்லயே உண்மையைச் சொல்லிட்டாத்தான் நம்ப ஃப்யூச்சர்ல எந்த ப்ராப்ளம் வந்தாலும் மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்வராது...ஸோ...சொல்லிடறேன்."

திடுக்கிட்டபடி ஏறிட்டாள்.

"இந்த மீனுவை நான் லவ் பண்ணது உண்மைதான். பக்கம் பக்கமா நெறைய காதல் கடிதம் எழுதினதும் நிஜம்தான்... ஆனா அவளோட காதல் வெறும் பணத்துக்காகவும் பொருளுக்காகவும் மட்டுமே ஏற்பட்டதுன்னு எனக்குத் தெரிஞ்சதோ அன்னிக்கே அவளைச் சுத்தமா மறந்துட்டேன். அதுல அவளுக்கும் அவ அண்ணனுக்கும் ரொம்பக் கோபம்... எனக்குக் கல்யாணம்னு தெரிஞ்சவுடனே நான் அவன் தங்கைக்கு எழுதின லவ் லெட்டர்ஸை உனக்கு ப்ரஸண்டேஷனாக் கொடுத்து நமக்குள்ள ஒரு பிளவை ஏற்படுத்தணும்னுதான் வந்தான்... கொடுத்தான். இதுதான் உண்மை. என்ன சொல்றே தருணா?"

'அவ்வளவுதானே?' என்பது போல் அவனைப் பார்த்துச் சிரித்தாள் முதன் முதலாக.



மறுபடியும் நம் தமிழ்த் திரை நாயகன் தனியொருவனாய்ப் புறப்பட்டு, ஆவேசத்துடன் போராடி சமூக விரோத சக்திகளை அழிக்கிறான். சாக்லெட், பால், தண்ணீர் போன்ற கன்ஸ்யூமர் அயிட்டங்களில் கணிசமாய் விஷம் கலந்து பின் அவதியுறும் மக்களுக்கு உடனடியாக மாற்று மருந்தையும் சப்ளை செய்து கொள்ளையடிக்கும் (ஜெய்) பரகராம்; கூட 'சம்ச்சா' போட சயின்டிஸ்ட் மித்ரா (அட நம்பியார், வாரே வா!)வும், டி. எஸ். பி.யும் (வேற யார், மேஜர்தான்) இவர்களை எதிர்த்துப் போராட இடைவேளை வரைகாத்திருக்கும் நாயகன், டாக்டர் விஜய்.

மோகனாவின் கண்ணைப் பறிக்கும் செட் அமைப்புக்கள் இன்னும் நினைவில் இருக்கிறது. அதிரடிச் சண்டைக் காட்சிகளில் "யாருக்கய்யா வரும், இத்தனை வேகமும், சுறுசுறுப்பும்?" என்று சவால் விடுகிறார் ரஜனி. மனிதர் ரொம்ப ஸ்மார்ட். இவரிடம் வலிய வந்து காதலை யாசிக்கும் மாதவி கண் அழகைக் காட்டியே காலம் தள்ளப் பார்க்கிறார்.

வித்தியாசமான கோணங்களின் மூலம் சண்டைக் காட்சிகளைக் கூட ரசிக்கவைக்கிறார் ஜெயனன். சி.வி. ராஜேந்திரனின் புதுமை முயற்சி, ஓட்டலில் இருந்து புறப்பட்டு ஊர் வலம் போகும் படுக்கையில் வரும் பாடல் காட்சியில் தெரிகிறது. அவுட் ஆப் டேட் 'விகேஆர். + தேங்காய்' உபயத்தில் ஒரு ட்ராக் காமெடி அல்லது அபத்தம் என்ற பெயரில் ஓடி ஏற்கனவே மெல்லஊரும் படத்தை அங்கங்கே நசுக்குகிறது. படத்தில் வரும் பல ஓட்டை உடைசல்களில் ஒன்று—டிஎஸ்பி திடீர் ஞானோதயம் பெற்றுத் தம்மையே சுட்டுக்கொள்வது.

இதுநாள்வரை பெண் என்ற அதிசயத்தின் மீது நமக்கிருந்து வரும் சுவாரசியமான ஈர்ப்பைச் சாகடிக்கிறார் ஜெயமாலினி.

ஆக மொத்தம். மி——யா——வ்!

"சிந்து-ஜீவா"

சினிமா விமர்சனம்

சிவப்பு மல்லி



வைரமுத்துவின் வார்த்தைகளில் சொல்லப்போனால் கதை இதுதான் — ''சமூக பேதங்களைக் கண்டு கொதித்த இரு வாலிபர்களின் அடர்த்தியான கோபம், தீக்குச்சிகளைத் திரட்டி எரிமலை ஒன்றை உற்பத்தி செய்தது.. அந்தக் கிராமத்தில் புழுக்கள் எல்லாம் புலிகள் ஆனபோது இருட்டு விடைபெற்றுக் கொண்டது.'' வங்க மலையாளத் திரைப் படங்களில் மட்டும் பறக்கும் செங்கொடி தமிழ்க் காற்றில் புதிதாய்ப் பறக்கிறது. வலதை நினைவூட்டும் மிதவாதி தியாகுவாக சந்திரசேகரும்,இடதை பிரதிபலிக்கும் தீவிரவாதி ரங்கனாக விஜய் காந்தும் சரியான ஜோடி. ஆக்ரோஷமான போஸ்களில் பின்னவர் புல்லரிக்க வைக்க, முன்னவர் வசனங்களின் துணை கொண்டு மனத்தைக் கொள்ளையடிக்கிறார். சண்டைக் காட்சிகளில் இருவரும் தூள் பரத்துகிறார்கள். இந்தியத் திரைப்படப் பாரம்பரியத்தைக் காப்பாற்ற ஆளுக்கொரு ஜோடியாய் (அருணா — சாந்தி) இரண்டு பொம்மைகள். பல்லை இளித்துக்கொண்டு தேவையில்லாமல் மழையில் நனைந்துகொண்டு ஒரு பின்னணி டூயட். ஓவராய் கோணங்கி சேஷ்டை செய்யும் எஸ்.எஸ். சந்திரன். இப்படிச் சிலவற்றைத் தவிர்த்துப் பார்த்தால் அனைவரும் நன்றாகச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக எஸ்.என். லட்சுமி, துணிச்சலான வசனங்கள் எழுதி இயக்கிய இராம. நாராயணனுக்கு ஏகப்பட்ட கைத்தட்டல்கள். நீதிபதி கையில் அரிவாளும் சுத்தியலும் இருக்கும் காட்சியில் ஒரே கலகலப்பு. கொள்கையை விளக்க விரிவாக எழுதப்பட்ட வசனங்கள் ''தோழர்களை'' அதிகமாகவே கவரும். (''340 கோடி ஜனங்களோட கொள்கையைக் கேவலம், நீ ஒரு துரும்பு ஒழிப்பேன்றியே''). நெஞ்சை உருக்கவும், திலை ஊட்டவும் நிறையவே காட்சிகள். ரங்கனின் தாய் (எஸ். என். லட்சுமி) கையில் கொடியுடன் லாரியில் அடிபட்டு வீழ்வது கொடுமையோ கொடுமை!

காமரா லோகேஷும் எடிட்டர் வெள்ளைச்சாமியும் நிறைவைத் தருகிறார்கள். ஸ்லோமோஷன் உத்தி நீண்ட நாட்களுக்குப் பிறகு புத்திசாலித்தனமாய் உபயோகிக்கப்பட்டிருப்பது இதில்தான். — தியாகு கத்திக் குத்துப்பட்டு வழியும் ரத்தத்துடன், தொய்ந்த கால்களுடன் மணலை உதைத்து, விழுந்து எழுந்து இறக்கும்போது காமரா ஸ்லோ மோஷனில் ஒரு சோகக் கவிதை பாடுகிறது. வைரமுத்துவின் உபயம் படம் முழுவதும் விரவித் தெளித்த கவிதை வரிகள்.

ஏ.வி.எம். பேனரின் பெயர் மீண்டும் காப்பாற்றப்பட்டிருக்கிறது. —''சிந்து-ஜீவா''

சினிமா விமர்சனம்

சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்

விஜய நகர அந்தப்புரத்தில் பல பெண்கள் மல்லர்களாகவும் வில்லாளிகளாகவும் இருந்தார்கள். பலருக்கு வாள் பயிற்சி உண்டு. பலர் ஜோசியக்காரிகளாகவும் பல்லக்குத் தூக்கிகளாகவும் கணக்கர்களாகவும் இருந்தார்கள். (Nuniz) - நுனிஸ்

22

அந்த விசாலமான மாளிகையில் அவள் ஒரு வாரம் தங்கியிருந்தாள்.

அங்கே எப்படி வந்தாள் என்று தெரியாது.

அவளது துயரங்கள் முடிந்துவிட்டன என்று முதலில் நினைத்தாள்.

அவளைத் தெரிந்தவர்கள் யாரோ அவளுக்கு விமோசனம் அளித்திருக்கிறார்கள் என்று நினைத்தாள்.

அப்படியானால் அவர்கள் இப்போது எங்கே? இந்த ஒரு வாரமாக ஏன் அவர்கள் வரவில்லை?

நாட்கள் மேலே செல்ல

சந்தேகம்தான் எழுந்தது.

அவளோடு வந்திருந்த கெல்லி என்ற மலைப் பெண் சின்ன வயசானாலும் சூட்டிகையாக இருந்தாள். என்ன தைரியம் அவளுக்கு? சேலையை வரிந்து கட்டி, அந்த உயரச் சுவரில் காலையும் கையையும் போட்டு அடித்து அதிசயமாக ஏறினாள். மலை இனப் பெண்! கை, கால், உடம்பு, தசைகளில் குருட்டுத் தன தைரியம் பேசியது.

மேலே அந்தக் காற்றுப் போக்கி வழியாக வெளியே பார்த்து,

''அக்கா! மலைமேலே இருக்கோம்!'' என்று குரலில் ஆச்சரியம் பெய்து பேசினாள்.

''மலையா? என்ன மலை?'' என்றாள் சுவர்ணமுகி.

''சமலக் காடு மாதிரி இருக்கும்மா! தூரத்திலே ஏழு மலை மாதிரி தெரியுது'' என்றாள் கெல்லி.

''பக்கத்திலே வீடு கீடு தெரியுதா?'' என்றாள் சுவர்ணமுகி ஆவலுடன்.

'இல்லையம்மா! ஒரே பள்ளம்! கிடுகிடு பள்ளம். சுத்தி எல்லாம் காடு.''

''வழி தெரியுதா பாரு!''

கெல்லி வெகு தூரம் பார்த்தாள். ''இல்லையம்மா. தெரியலை'' என்று சொல்லிக் கீழே குதித்தாள்.

அவள் கால்கள் எப்படி அந்த வீழ்ச்சியை ஏற்றுக் கொண்டன!

கெல்லியின் இந்தக் கண்டுபிடிப்புக்குப் பிறகு அவளுக்குப் பல கலக்கங்கள் உண்டாயின.


இது என்ன சிறைவாசமா?

இங்கே ஏன் அவளை அடைத்துப் போட்டிருக்கிறார்கள்?

எதிரி கைகளில் அவள் சிக்கிவிட்டாளா?

காட்டில் அன்று நடந்ததை எண்ணிப் பார்த்தாள். 'தளவாய் நரசய்யாவின் படை வருகிறது. ஒளியுங்கள்' என்று கூக்குரல் எழுந்த பிறகு பாறையிலிருந்து அவள் கிடுகிடு என்று இறங்கினாள்.

கடைசிவரை இறங்கினவள் பிறகு மீண்டும் குடிலுக்குள் ஓடி அந்த சீனிவாசன் பொம்மையை எடுத்து வெளியே வந்தாள். செஞ்சந்தனத்தில் அவள் செய்த மரப்



பாச்சி! அவளுக்கு ஒரு பொழுது போக்கு இந்தப் பொம்மை செதுக்குவது. சீனிவாசர் பொம்மை அநேகமாக முடிந்து விட்டது. கண் திறக்க வேண்டும்.

அதைச் செய்யாமல் அரை குறையாக ஓடுவது பிடிக்கவில்லை. அபசகுனம் என்று நினைத்தாள்.

பொம்மையை எடுத்து வந்து மற்ற ஏனுதிப் பெண்களுடன் ஓடும்போது, அந்தப் பத்மாவதி நினைவு வந்தது.

ஆகா, என்ன அழகாகச் செதுக்கி வைத்திருந்தான் அவன். திருச்சுகனூரில் (திருச்சானூர்) இருந்து நேரில் பிரசன்னமானது போல் இருந்தது. அவளால் நம்ப முடியவில்லை. அந்தப் பொம்மை இவ்வளவு நேர்த்தியாக வடிந்திருக்கிறது. வட்டப் பாவாடையும், நகைகளும், கிரீடமும், அந்த இளம் புன்னகையும்.

'ஓ! சீனிவாசரை நீதான் காதலித்துக் கல்யாணம் செய்து கொண்டாயா?' என்று எத்தனை முறை அதை நோக்கிக் கேட்டிருக்கிறாள்?



அதைக் கேட்கும்போது மனத்தில் அவளுக்கு எவ்வளவு வேட்கையும், பொய்க் கேலியும், பொய் கவலையும் தோன்றியது?

''பொல்லாதவள் நீ! காதலித்தாயா?'' என்று எத்தனை முறை செல்வமாகக் கடிந்திருக்கிறாள்?

அப்படிக் கடியும்போது அவள் உள்ளத்தின் விசால விளிம்புகளைத் தொட்டு எவ்வளவு உணர்ச்சிப் பிரவாகம் ஓடியது?

என்ன பிரவாகம் அது?

என்ன உணர்ச்சி அது?

புரிந்து கொள்ள முடியவில்லையே!

நினைத்தால் பயமாக இருந்தது. பரவசமாகவும் இருந்தது.

ஓடும்போது பத்மாவதியைக்குடிலில் விட்டு விட்டோமே என்று வருத்தம்.

திரும்பிப்போய் எடுக்க முடியவில்லை. அவளைப் பற்றி இழுத்து ஏனுதிப் பெண்கள் அந்த ஒளிவிடத்துக்கு ஓடினார்கள்.

ஒரு பாறைக்குப் பின்புறத்தில் குகை போன்ற அமைவு.

அதன் குழிவுக்குள் அத்தனை ஏனுதிப் பருவப் பெண்களும், பெரிய பெண்களும் கூடிவிட்டார்கள்.

சிக்கென்று அமைதி.

மூச்சைக்கூட அடக்கி, என்ன நடக்கப் போகிறதென்று காத்திருந்தார்கள்.

ஓசை பெரிதாகி வந்தது.

சீக்கிரத்தில் கனத்த மனிதக் குரல்கள் காற்றை நிறைத்தன. ஓசையான பாதரட்சைகள் கேட்டன. அதிகாரங்களும், தோரணைகளும் நாலு பக்கமும் சிதறின.

ஊடே, ஏனுதி ஆண்களின் பலவீனக் குரல்களும் கேட்டன.

எப்படித்தான் அது நடந்தது. தெரியாது.

இமரெனக் கிங்கரர்கள் போல மூன்று வீரர்கள் அந்த மறைவிடம் முன்னால் நின்றார்கள். உள்ளே அத்தனை பெண்களையும் ஒரே வீச்சில் கண்டு பிடித்து விட்டார்கள்.

பெண்கள் விளறிப்போய்க் கூச்சல் போட்டு நாலுவிதத்திலும் சிதற.

வீரர்கள் மற்ற சகாக்களுக்குக் குரல் கொடுத்தவாறு அவர்களை விரட்ட ஆரம்பித்தார்கள்.

அவளும் செல்வியும் அகப்பட்டது ஒரு துரதிர்ஷ்டம். மற்றவர்களுக்கு என்ன நேர்ந்தது தெரியாது.

அவளைக் கைகட்டி நடத்திச் சென்றபோது, மனம் படாத பாடு பட்டது.

'விதி இப்படித் தொடர்கிறதே' என்று நினைத்தாள்.

'அர்ச்சுனன் சீக்கிரம் வரக்கூடாதா?' என்றும் நினைத்தாள்.

இரவில் அவரோடு போயிருக்க வேண்டும்.

போகாதது தப்பிதம்.

இப்போது அவர் வரக்கூடாதா? காலையில் வந்துவிடுவேன் என்றாரே!

இந்தக் கணம் எதிர்ப்பட்டு அவளை மீட்கக் கூடாதா?

போகிற வழியில் ஒரு குடியற்ற பாலை அவர்கள் பருக வைத்து, கீழே உட்காரச் சொல்லி...

அவ்வளவுதான் நினைவு இருக்கிறது.

அதற்குப் பிறகு இங்கே இந்த மாளிகையில் வந்து கிடப்பது மட்டும்தான் தெரிகிறது.

இதன் உட்புற அமைப்புக்களைப் பார்த்தால் சிறை போன்று தெரியவில்லை.

மாளிகை போல் புதுமையாக இருக்கிறது. ஆனால் அந்தப் பெரிய இரட்டை அறைப் பகுதியை ஏன் தாழ்ப்பாள் போட்டு வைத்திருக்கிறார்கள்?

வேளா வேளைக்கு உணவை ஒன்றும் பேசாத ஒரு தாதியிடம் ஏன் கொடுத்து அனுப்புகிறார்கள்?

எத்தனை முறை கேட்டாலும் அந்தத் தாதி புன்னகை மட்டும் செய்கிறாள். மற்றப்படி உதட்டை இறுக்கமாக மூடி வைத்திருக்கிறாள்.

அந்தத் தாதி திறக்கும்போது மாளிகை மையத்திலிருந்து சுகந்தமான வாசனை உள்ளே மிதந்து வருகிறதே!

சில சமயம் நுட்பமான சங்கீதம்.

சமயங்களில் . பூங்கொத்துச் சிரிப்புகள். இரவு ஆனால் மோகினிகள் நடப்பது போல் சலிங் சலிங் என்று சின்னச் சதங்கை முனகல்கள்.

என்ன இடம் அது?

அன்று காலையில் வழக்கத்துக்கு மாறாக மாளிகைக்கு வெளியே அரவங்கள். சின்னச் சின்னச் சத்தங்கள் உள்ளே வந்து உருண்டன. ஒரு தனி ஒற்றைச் சிரிப்பு. பெண் சிரிப்புத் தான். ஆனால்பெண் தன்மை இல்லை.

சிறிது நேரத்தில் அவர்கள் அறையில் வெளித் தாழ்ப்பாள் திறக்கும் சப்தம்.

வழக்கமான தாதி வந்து, ''வாருங்கள்'' என்று சமிக்ஞை செய்தாள்.

மனம் இலேசாகத் தடதடக்க, அவனும் கெல்லியும் எழுந்து போனார்கள்.

நீள நடைத் தாழ்வாரம்.

இருபுறமும் அறைகள்.

போகப் போகச் சுகந்தம் பெருகிக் கொண்டு வந்தது.

திடீரென்று பரந்த கூடம் காட்சி கொடுத்தது.

சபை நடத்தலாம். அத்தனை பெரிது. உருண்டைத் தூண்கள். சித்திர விதானம். வேலைப்பாடுகளுடன் விளக்குத் தண்டுகள். எங்கும் தூவிக் கிடந்த நாற்காலி, மெத்தை திண்டு வகையறுக்கள்.

அரவம் கேட்டுத் திரும்பினான்.

வலது கோடியில் அந்தக் காட்சி பிரமிப்பைக் கொடுத்தது.

இரண்டு பெண்கள் சேலையை வரிந்து கட்டி மல் யுத்தம் செய்து கொண்டிருக்க, சுற்றி வர ஒரு சிறிய கூட்டம்.

அத்தனையும் பெண்கள்.

அவர்களில் பலர் மல் யுத்தத்துக்கு ஆயத்தம் போல் சேலை வரிந்திருந்தார்கள்.

அவர்கள் புஜங்களில் ஒரு ஆம்பிள்ளையைப் போல் தசை கொழுத்திருந்தது. உடம்பும் காலும் இரும்பு போல் இறுக்கமாக வார்த்திருந்தன. முகத்தில் பெண்மைக் களையை மழுக்கிக்கொண்டு ஒரு ஆண்தனம் விகசித்துக் கொண்டிருந்தது.

நாட்டில் அந்தப்புரப் பெண்களில் பலர் மல்லர்களாகவும், சிலம்புக்காரர்களாகவும், வில்லாளிகளாவும் இருப்பது அவனுக்குத் தெரியும். பலருக்கு வாள் பயிற்சி, வேல் பயிற்சி எல்லாம் கூட உண்டு.

சொல்லப்போனால் பெண்களே நிர்வகிக்கும் அந்தப்புரத்துக்குள் ஒரு ஆண், அவன் வீராதி வீரனாக இருந்தால்கூட நுழைந்து விட முடியாது.

அவனுக்கு ஈடு கொடுக்கும் எத்தனையோ பெண் வீரர்கள் அங்கே இருக்கிறார்கள்.

அவனுக்குத் தெரிய வேண்டியது இந்த மலை மாளிகை ஒரு அந்தப்புரமா என்பது தான்.

அவன் யோசிக்கும் நேரத்தில் ஒரு பெண் கீழே விழுந்துவிட,

கைதட்டலும், சிரிப்பும், பலேக்களும் எழுந்தன.

கடைசியில் அவனுக்குப் பின்புறத்தைக் காட்டி, ஒரு பெரிய ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒரு பெண்மணி தன் முகத்தைச் சிறிதே திருப்பி அவனை நேராக முகத்தில் பார்த்தாள்.

கவர்ணமுகிக்கு ஒரு பரிச்சய நாடி எங்கேயோ சொடுக்கியது.


பெண்மணி உடனே தனது ஸ்தூலஉடம்பை ஆசனத்துக்கு வெளியே குலுக்கி எடுத்து, சிறிது சாவகாசம் எடுத்துத் திரும்பி, பிறகு குட்டை அடிகள் வைத்து அவனை நோக்கி நடந்து வந்தாள்.

அவளுக்குப் பின்னால் அத்தனை பெண்களும் ஊர்வலம் சேர்ந்தார்கள்.

வெளிச்சமான பகுதிக்கு அவர்கள் வரும் போது கவர்ணமுகி அந்தப் பெண்மணியை முழுதுமாகப் பார்த்தான்.

ஒன்று பளீர் என்று உதித்தது.

கல்கத்தாவில் பாராடுரூப் பர்ஸுக்கும் மோகன் பாகனுக்கும் நடந்த கால் பந்தாட்டப் போட்டியில் மக்கள் அனைவரையும் கவர்ந்த அம்சம்: பொதுவாக விளையாட்டு வீரர்கள் மைதானத்திற்குள் நடந்துதான் விளையாட வருவார்கள். ஆனால் இந்தப் போட்டியின் போது பாராடுரூப் பர்ஸ் விளையாட்டு குழுவில்உள்ள அனைவரும் ஹெலிகாப்டரில் இருந்து பாராசூட் மூலம் குதித்து மைதானத்திற்குள் இறங்கினார்கள்! புகைப்படம்; தகவல்: 'கல்கத்தா 'மிக்கி'



சட்டம்

செய்திகள் எழுப்பிய கேள்விகள்



கேள்வி: பத்மஜா நாயுடுவுக்கு நேருஜி எழுதிய காதல் கடிதங்கள் இப்போது வெளிவந்திருக்கும் ஒரு புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இது போல் பல பிரமுகர்கள் எழுதிய கடிதங்கள் அவ்வப்போது நூல் வடிவம் பெறுகின்றன. தனிப்பட்ட கடிதங்களை வெளியிடுவதில் 'காபிரைட்' என்கிற பதிப்புரிமை கடிதம் பெறுகிறவருக்கா, அல்லது அவற்றை எழுதுகிறவருக்கா?

பதிலளிப்பவர் வழக்கறிஞர் திரு ச. செந்தில்நாதன். 'அபூர்வ ராகங்கள்' படக்கதை வழக்கில் எழுத்தாளர் என். ஆர். தாசனுக்காக வாதாடி வெற்றி பெற்ற இவர் 'சிகரம்' இதழின் ஆசிரியரும் கூட.

பதில்: கடிதங்களின் மீதான பதிப்புரிமை எப்போதுமே எழுதியவருக்குத்தான் உண்டு. கடிதம் பெறுகிறவருக்கு அந்த உரிமை கிடையாது.

''லா ஆஃப் காபிரைட்'' என்கிற கோபின்சர் ஜேம்ஸ் சட்டப் புத்தகத்தில் இதற்கான விதிமுறைகள் தெளிவாக உள்ளன.

''ஒரு கடிதம் என்பது அசலான இலக்கியப் படைப்புத்தான். கடிதத்துக்கு இலக்கிய அந்தஸ்து இருக்கிறது. அல்லது அப்படி ஒன்றும் இல்லாத சாதாரணக் கடிதம் என்கிற வாதம் ஒரு பொருட்டே அன்று. கடிதம் எழுதுகிறவர் நிச்சயமாக ஒரு ஆசிரியர் என்கிற தகுதி உடையவர்தான். குமாஸ்தாவைப் போலவோ அல்லது வேறு சம்பளம் பெறும் ஒப்பந்த வேலையாளைப் போலவோ எழுதுகிற கடிதங்களைத் தவிர மற்றக் கடிதங்கள் அனைத்தின் உரிமையும் அவற்றை எழுதியவரைத்தான் சேரும்.''

இந்த விளக்கமே போதுமானது. எல்லாக் கடிதங்களுமே யாருக்கு எழுதப்படுகின்றனவோ அவரை நம்பி எழுதப்படும் தனிப்பட்ட விஷயம்தான். கடிதத்தைப் பெறுகிறவர் அவற்றைப் பாதுகாக்கலாம். படித்துவிட்டுக் கிழித்துப் போடலாம். கையெழுத்து மதிப்புக்காக விற்பனையும் செய்யலாம்.

ஆனால், அந்தக் கடிதத்தையோ, அதன் உள்ளடக்கத்தையோ எழுதியவரின் அனுமதியில்லாமல் பிரசுரிக்க முடியாது. அப்படி வெளியிடுகிறவர்கள் நிச்சயமாய்ப் பதிப்புரிமை விதிகளை மீறுகிறவர்கள் தான்.

காபிரைட் சட்டங்களின்படி வழக்குப் போடுகிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. எழுத்தாளர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுவதும் குறைவு. சுதந்திரம் பெற்று முப்பது ஆண்டுகள் ஆன பிறகு முதன் முதலில் சுப்ரீம் கோர்ட் வரை போன ஒரு முக்கியமான வழக்கு ''நியூ டெல்லி'' என்கிற இந்தியப் படத்தின் மீது எழுந்ததுதான். 1978ல் அந்த வழக்கில் எழுத்தாளருக்கு விரோதமாகவே தீர்ப்புக் கிடைத்தது.

பொதுவாக நோக்குமிடத்து இந்தக் காபிரைட் சட்டங்கள் எழுத்தாளர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கவில்லை.

கேள்வி: கர்நாடக மாநிலத்தில் குறிப்பிட்ட சிலருக்கு எழுதப்படுகிற எல்லாக் கடிதங்களையும் பிரித்துப் பார்க்க நிறுத்தி வைக்க அல்லது அதிகாரிகளிடம் ஒப்படைக்க ஆணையிடப்பட்டுள்ளதே — அது பற்றி?

பதில்: அடிப்படை உரிமைகளை அப்பட்டமாய்ப் பறித்துவிடுகிற நடவடிக்கை இது. அரசியல் சட்டத்துக்கு விரோதமான நடவடிக்கையும் கூட. பொதுமக்கள் அனைவரையும் திறந்தவெளிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட கைதிகள் போல் நடத்துகிற ஒரு செயல். பாதிக்கப்பட்டவர் எவரேனும் நீதிமன்றம் போனால் மிகவும் எளிதில் வெற்றிபெற முடியும்.

- யெஸ்பால்

அவளது நடையும், உடம்பு பூராவுமான சுவர்ண மினுக்கும், வாயில் உறைந்து போன காவியும் அவளைத் தேவதாசி குலத்தவள் என்று எண்ண வைத்தது.

என்றைக்கோ அவளிடம் வாழ்ந்து, இன்று தூர்ந்து போயிருந்த பரத நாட்டியம், அவள் நடையில் சின்னத் தளுக்குகளைக் கொடுத்தது.

யார் இவள்? எங்கேயோ பார்த்திருக்கிறோமே!

வந்தவள், சுவர்ணமுகியின் நேர் எதிரே உள்ள பட்டு மெத்தை ஆசனத்தில் உட்கார, மற்றவர்கள் அவளது பின்னால் பிறை போல நின்று கொண்டார்கள்.

எல்லாரும் ஒரே சமயம் ஈட்டிப் பார்வைகளுடன் சுவர்ணமுகியைப் பார்த்தார்கள்.

அதே சமயம் சுவர்ணமுகி மனத்துக்குள் அலைந்து, பல முக்கு மூலைகளை அலசி அந்தப் பரிச்சயத்தைத் தேடி, கடைசியில் இதோ...இதோ...

'இவள் ரத்னவனி அல்லவா?

பார்த்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டன. எவ்வளவு பருத்துவிட்டாள்!

''உட்கார்'' என்று அவள் குரல் இடி போல் கேட்க, சுவர்ணமுகி பக்கத்தில் ஆசனத்தைத் தேடினாள்.

''கீழே உட்கார்.''

அவள் உட்கார, செல்வி சற்றுத்தயக்கம் காட்டிக் கீழே சம்மணம் இட்டாள்.

பிறகு ரத்னவளி, பின்புறம் திரும்பிக் கண்ணைக் காட்ட, நான்கு பெண் மல்லர்களைத் தவிர மற்ற அத்தனைபேரும் கலைந்து உள்புறத்து அறைகளை நோக்கி நடந்தனர்.

எல்லோரும் போன பிறகு, ''நீ யார்?'' என்று கர்ஜனை செய்தாள் ரத்னவளி. சுவர்ணமுகியின் இதயம் நடுங்கியது.

''சொல்லு.''

''நான் நெல்லூரி வீரமன்னரு ஜெட்டியோட குமாரத்தி வெங்கம்மா!''

''வெங்கம்மா?'' என்று நைச்சியத்தோடு கேட்டாள் ரத்னவளி.

''ஆமம்மா!''

''காட்டுக்குள்ளே எப்படி வந்தே?''

''அம்மாவும் அப்பாவும் பஞ்சத்திலே செத்திட்டாங்க. ஊர்ல இருக்க வழியில்லே. பலபேர் தொந்தரவு பண்ணினாங்க. காட்டுக்குள்ளே போயிட்டேன். உங்களுக்குத் தெரியாதா? ஜனங்களெல்லாம் இப்போ காட்டுக்குள்ளேதான் போறாங்க!''

சிரித்தாள் ரத்னவளி.

அத்தனையும் பொடிப் பற்கள். மனுஷி சிரிப்பதுபோல் இல்லே. ஒரு சிறிய பிராணி வாயைத் திறந்தது போல் இருந்தது.

''பொய் சொல்லாதே! நீலி! உண்மையைச் சொல்றியா இல்லையா?''

முகத்தை அப்படி இலேசாக அசைக்க, ஒரு மல்லர் பெண் முன்னால் வந்தாள். இடுப்பைச் சுற்றிக் கையை விரலியவுடன் ஒரு சாட்டை நீள வாலோடு வெளி வந்தது.

''போடு!'' என்றாள் ரத்னவளி.

சுவர்ணமுகியின் கண் பயத்தில் வெப்பாக, மல்லப் பெண் அவள் பின்னால் வந்தாள்.

எதுவும் அவள் செய்ய மாட்டாள் என்று நினைக்கு முன் ஆஷ்ஷ் என்று சத்தத்துடன் முதுகில் சாட்டை விழுந்தது.

''அம்மா!'' என்று அலறல்.

செல்வி அலறவில்லே. முகம் மட்டும் சிணுங்கியது. இரண்டு பேருக்கும் சேர்ந்து விழுந்த அடி அது.

ஆஷ்ஷ்!

இரண்டாம் முறை அது விழுந்தது. சுவர்ணமுகி சுருண்டு விழுந்தாள்.

செல்வி உடனே அவளைப் பிடித்துக் கொண்டாள். இரண்டு கைகளையும் காற்றில் துடிக்கவிட்டு, சுவர்ணமுகி கோழையும் கண்ணீரும் வழியக் கீழே சாய்ந்தாள்.

''நிறுத்துங்கம்மா அடிக்காதீங்க!'' என்று கத்தினாள் செல்வி.

''நீ பேசாம இரு!'' என்றாள் மல்லர் பெண்.

''உண்மையைச் சொல்லுங்க! விட்டுடறோம்'' என்றாள் ரத்னவளி.

சுவர்ணமுகி மெள்ள எழுந்தாள். கண்ணீரோடு ''நான் சொல்வது சத்தியம்மா! என் பெயர் வெங்கம்மா! என் ஊரு நெல்லூரு!'' என்று இரக்கமாகப் புலம்பினாள்.

''போடு இன்னம்!'' என்றாள் ரத்னவளி.

ஆஷ்ஷ் ஆஷ்ஷ்கள் மேலும் அந்தக் கூடத்தில் எதிரொலித்தன.

சுவர்ணமுகியின் பூவுடல் நைந்து கீழே விழ, அவள் முகம் நிழலாகக் கறுத்தது.

''நிறுத்து!'' என்று சொல்லி ரத்னவளி அவள் அருகே வந்தாள்.

''தண்ணி கொண்டா!''

தண்ணீர் தெளித்து எழுப்பினார்கள்.

சுவர்ணமுகி முதுகில் ஒரு காயம் இரத்தத்தை வெளியே பீளாச்சிட்டது.

அதைப் பார்த்ததும் ரத்னவளி துணுக்குற்றாள்.

பெரிய மூச்சுக்களுடன் தனது ஆசனத்தில் போய் உட்கார்ந்தாள்.

சுவர்ணமுகியைஎழுப்பிஉட்கார்த்தி மெள்ளப் பிடித்துக்கொண்டாள் செல்வி.

ரத்னவளி அவளைப் பார்த்து ''உண்மையைச் சொல்லப் போறியா இல்லையா?'' என்று கர்ஜித்தாள்.

''உயிர் போக அடியுங்கம்மா! நான் உண்மையைத்தான் சொல்றேன்'' என்று பலவீனமாக உரைத்தாள் சுவர்ணமுகி.

''உங்க தாத்தா பேரு என்ன?'' என்று யுக்தியோடு கேட்டாள் ரத்னவளி.

''நெல்லூரி வீரராகவப் பெருமாளு!''

''அவருக்கு சம்சாரம் யாரு?''

''கிருஷ்ணம்பா.''

''தாத்தா என்ன வேலே செஞ்சார்?''

''தறி வச்சிருந்தார்!''

''உங்க அப்பா?''

''அவரும் தறிதான்!''

''பாவு நாலுக்கு எத்தனை ஊடு நூல் போடணும்?''

''ஒரு அங்குலத்துக்கு நாப்பதும் வரும், நூறும் வரும். அதெல்லாம் துணியைப் பொறுத்ததம்மா!''

''நீ என்ன வேலே செய்வே?''

''வீட்டு வேலே செய்வேன்!''

''அதக் கேக்கலே! நெசவிலே என்ன தெரியும்? நெய்வையா, நூற்பையா, சாயம் போடுவையா?''

''நான் புகை போடுவேம்மா.''

''புகையா?'' என்று சந்தேகத்துடன் ரத்னவளி பின்னால் திரும்ப,

''துணிக்கு வாசனைபோடறதைசொல்லு!'' என்றாள் ஒரு பெண்.

''துணியை நெஞ்சீங்களே! எங்கே விப்பீங்க?''

''மசூலிப்பட்டணம் துரை வருவாரு வாங்கிப்பாரு!''

ரத்னவளி எழுந்தாள்.

சுவர்ணமுகியின் பக்கத்தில் போய் அவளைச் சுற்றி வந்தாள். அவள் கூந்தலைத் தொட்டு முகர்ந்து பார்த்தாள்.

''ஹூம்!'' என்று சொல்லித் திரும்பி வந்தாள். ''யாரையோ கொண்டு வந்து உள்ளே அடைச்சிருக்காங்க! விரட்டு இவங்களை!'' என்றாள்.

சுவர்ணமுகியின் முகம் பிரகாசம் அடைந்தது. ஒரு பெண் அவளையும் செல்வியையும் நோக்கி முன்வர

''நிறுத்து!'' என்று ஒரு சத்தம்.

(தொடரும்)


வளர்ந்துவரும்,
தழுவிநிற்கும்
மென்மை...
ஒளிபடைக்கும் பிலிப்ஸ்
புதிய
அர்ஜெண்ட்டா-K
புத்தம்புதிது. கண்ணுக்கிதம்.
நிழலேயற்ற ஒளி. படைத்திடுவோர்
பிலிப்ஸ். ஆர்ஜெண்ட்டா-K.
பால்வண்ணமான பல்பு.
இதற்கேது இணை !
அளவான மின்னலகில் அதிக ஒளிவெள்ளம்
பிலிப்ஸ்
HTB-PEI-6701

இன்னைக் இல்லை செய்திகள்





❋ பூவண்ணன்

போகிற போக்கில்...

✕ அ. வி. கிருஷ்ணன் ✕ சிற்றுண்டி தயார்! (இந்தோனேசியப் பிரிவு)



● சென்னை மருத்துவக் கல்லூரியில் ஒரு கலையரங்கு கட்டுவதற்காக நிதி திரட்டும் வகையில் சுதந்திர தினத்தன்று ஒரு சர்வ தேசக்கலை விழா. இதில் சிற்றுண்டி ஸ்டால்கள் ஒரு பகுதி. உலகின் பல்வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கு படிப்பதால் ஆவரவர் நாட்டின் பிரதான சிற்றுண்டி வகைகளை அவர்களே தயாரித்தார்கள். இந்தோனேசியா, மலேசியா, ஸ்ரீலங்கா, பர்மா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் இந்தியாவின் பிரதான மாநிலங்கள் போட்டியிட்டன.

இதுவரை மருந்துவாடையே வீசும் மருத்துவக் கல்லூரியில் 'கமகம' வென்று சமையல் வாடை! விற்பனையை அதிகரிக்க ஸ்ரீலங்கா மாணவர்கள், பண்டங்கள் வாங்குபவர்களிடம் அந்நாட்டின் தபால் தலைகள், போஸ்டர்களை இலவசமாகக் கொடுத்தனர்.

குஜராத் அரங்கின் பேல்பூரி, பால்கோவாவுக்கு ஒரே டிமாண்ட். எல்லாம் தீர்ந்து விட்டது. டிக்கட் கிடைக்காமல் சினிமாத் தியேட்டரை விட்டுத் திரும்புவது மாதிரி பலரைப் பார்த்தேன்.

விழாவுக்கு வந்திருந்த நாவலர் நெடுஞ்செழியன், தமிழக அரங்கில் தயாரிக்கப்பட்ட போளி, கண்டல், வடைகளை வெட்டினார்! 'ஆகா! பிரமாதம்' என்று பத்து ரூபாய் நோட்டை நீட்டினார். பில் ஐந்துக்கும் குறைவுதான்.

—''சிக்கி''

படம்: உத்ரா

● பம்பாய் 'வர்ணம்' கலைக் குழுவினர், ஆகஸ்ட் 15ம் தேதி மியூசிக் அகாடமி மேடையில் வழங்கிய குஜராத்தி ராஸ்—கர்பா நடன நிகழ்ச்சி, பல 'முதல்'களுக்குக் காரணமாக இருந்தது.

முதல் முதலாக ஐம்பது நடனக் கலைஞர்களை ஒருங்கே சென்னை மேடைக்கு கொண்டு வந்தது; லூமினேஸ்கோப் என்ற ஒளி உத்தியை முதன் முதலாக இங்கே கையாண்டது; முதல்முறையாக பார்வையாளர்களையும் 'ராஸ்' என்ற கோலாட்ட நிகழ்ச்சியின் போது மேடைக்கு அழைத்து, அவர்களும் தாளம் தப்பாது கலைஞர்களுடன் கலந்து ஆடியது; முதல் முதலாக சம்பிரதாயமான கர்பா நடன பாணியிலேயே நவீன 'டிஸ்கோ' நடனத்தையும் அரங்கேற்ற இசையையும் குழைத்து வழங்கியது...

பிரமிப்பூட்டும் மேடை அமைப்பும், ஒலி — ஒளி அமைப்பும் மட்டுமல்ல, இசையும் முதல் தரம்.

இத்தனை பிரும்மாண்டமான நடன அமைப்பின் டைரக்டரும் இசை அமைப்பாளருமான திரு நவீன் ஷா, பம்பாய் ஷா டெக்ஸ்டைல்ஸில் அக்கௌண்டெண்ட்!

ஒரே ஒரு குறை — நிகழ்ச்சி அறிவிப்புகளை ஆங்கிலத்திலும் வழங்கியிருக்கலாம்!

—சாருகேசி

● ''குக்கிங் காஸ்கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விலையும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆனால் அதே சமயம் இந்த 'காஸை' மணலியில் எரிக்கிறார்களாமே? ஏன்? ஸிலிண்டர் பற்றுக்குறை காரணமா?''

மெட்ராஸ் ரிபைனரி ப்ராஜக்ட் மானேஜர் திரு அ. வி. கிருஷ்ணனின் பதில்:



✖ குஜராத்தி ராஸ்-தர்பா-டிஸ்கோ நடன நிகழ்ச்சி

''தவறான கருத்து. சிலிண்டர்கள் நிறையவே கிடைக்கின்றன. ஆனால் இந்த எரிவாயுவைக் குறைந்த பட்ச அளவு எரிக்கத்தான் செய்கிறோம். அது பாதுகாப்பு நோக்கத்துக்காக. 'க்ரூட் ஆயிலே' டீஸல், கெரஸின், குக்கிங் காஸ் போன்றவைகளாக மாற்றுவதற்குக் குறிப்பிட்ட அழுத்தமும் வெப்பமும் தேவை. அதற்கு மேல் அழுத்தம் அதிகமாகி விட்டால் தானாகவே இந்த அதிகப்படியான வாயு அதற்கென உள்ள வெளியேற்றும் இடத்துக்குச் சென்றுவிடும். வெளியே உள்ள காற்றுடன் கலந்து சூழ்நிலையைச் சேதப்படுத்தும். இதைத் தவிர்க்கத்தான் காஸை எரித்து விடுகிறோம். இந்த இடத்துக்கு Hare stack என்று பெயர். ஒரு துளி காஸைக்கூட நாங்கள் வீணாக்குவது கிடையாது.

''இன்னொரு விஷயம்: நீங்கள் வாங்குகிற வாயுவுக்கு அசலாக மணம் ஏதுமே கிடையாது. ஆனால் உங்கள் பாதுகாப்புக்காக —ஒருவேளை 'லீக்' ஆனால் உணர வேண்டும் என்பதற்காக — வேண்டுமென்றே மொர்காப்டான்ஸ் என்ற பொருளைத் துளிஅளவு கலந்து விடுகிறோம்.''

—ஈஸ்வர்குமார்

● கல்கத்தாவில் உள்ள பாரதிய பாஷா பரிஷத் சாண்டில்யனின் நூலுக்கு விருது கொடுத்திருப்பதைப் பற்றிக் கேட்டபோது, தமது குட்டி ஆபீஸ் அறையில் பீங்கான் சிங்கத்தைத் தடவியவாறு பேச ஆரம்பித்தார் அவர்:

''புதிய சங்கம். இந்த ஆண்டுதான் தொடங்கியிருக்கிறது. இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் சிறந்த படைப்புக்கு விருது கொடுக்கிறது. முதல் ஆண்டில் வங்காளம், இந்தி, தமிழ் இலக்கியங்கள் பரிசு பெறுகின்றன. எனது 'ராஜ பேரிகை' என்ற படைப்புக்குத் தருகிறார்கள். இது ராபர்ட் கிளைவ் சம்பந்தப்பட்ட நாவல். குமுதத்தில் தொடராக வந்தது. பரிசுத் தொகை ரூ.



✖ திருமதி ராஜேஸ்வரி செல்லப்பன் பாரதியார் பாடல்கள் அடங்கிய ரிகார்ட்டை வெளியிடுகிறார்



✖ திரு சாண்டில்யன்


11,000. பாரதி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு டிசம்பர் 12ம் தேதி இந்த வைபவம் கல்கத்தாவில் நடக்கும்.

''வேடிக்கை என்னவென்றால், என்னைப்பற்றி வங்காளத்தைச்சேர்ந்தவர்கள் தெரிந்து வைத்துள்ள அளவுக்குக் கூட நம் சங்கங்களோ, ஏன் தமிழக அரசோ கூடத் தெரிந்து கொள்ளவில்லை. இதைப் பார்த்து நான் வேதனையோ, வெட்கமோ படவில்லை. ஒரு எழுத்தாளனுக்கு எமனே அவன் பெறும் விருதுகளும், பட்டங்களும்தான். பரிசும் விருதும் பெற்ற பலர் பேனாவுக்கு ஓய்வு கொடுத்து விடுகிறார்கள். நான் அப்படி இல்லை.

''இண்டர்மீடியட் ஃபெயிலாகிவிட்ட நான் சரித்திரத்தின் மேல் உள்ள ஆசையால் பல நூல்களைப் படித்தேன். ஒரு சரித்திரப் பேராசிரியர், ஆய்வு மாணவனுக்கு ஈடாக என்னால் சரித்திரத்தில் பேச முடியும். ஏதோ என் மகன்தான் எனக்குச் சரித்திரச் சான்றுகள் சொல்வதாக ஒரு பத்திரிகையில் செய்தி வந்தது. சுத்தப் பேத்தல்.

''சாகித்ய அகாதமி எனக்கு விருதுகொடுத்தாலும் நான் மறுக்கத்தான் போகிறேன். இதில் விருது வாங்கும் எழுத்தாளர்கள் ஏதோ தேர்தலுக்கு வேலை செய்கிற மாதிரி அதற்காகப் பாடுபடுகிறார்கள்! மக்கள் என் பக்கம் இருக்கும்போது நான் விருதையோ பரிசையோ தேடிப் போவானேன்?'' என்று பொரிந்து தள்ளும் இவர் ஆரம்பத்தில் பதினைந்து ஆண்டுகள் சுதேசமித்திரனில் பணியாற்றினார்! சாண்டில்ய கோத்திரத்தில் பிறந்ததால் இந்தப் புனை பெயராம். ஹார்ட் பேஷண்டாக இருப்பதால் வெளியூர் பயணத்தின்போது கூட ஒருவரை அழைத்துச் செல்கிறார். டயட்டில் இருக்கிறார். கொஞ்சமாக உப்புச் சேர்த்துக் கொள்கிறார். அதிகமாக ஸ்வீட் சாப்பிடும் இவர், காலையிலும், மாலையிலும் ஒரு கட்ட அப்பளாம் நொறுக்கி உள்ளே தள்ளுகிறார்.

-சிக்கி



✕ திரு சந்திரசேகரன்

● மலையாள மனோரமா ஆசிரியர் குழுவில் ஏழாண்டு காலமும், பிறகு நிர்வாகத்தில் எட்டு ஆண்டு காலமும் பணியாற்றிய பின்னர், திரைப்படத் துறைக்குத் தாவியிருக்கிறார் ஏப்ரகாம்.

தற்போது துரை எடுக்கும் 'இனிஞ்சல்கள்' படத்தில் நடித்து வருகிறார். "கேமிரா முன் நின்றதுமே ஓர் அசாத்தியப் புத்துணர்வு தோன்றும். அந்த உணர்வு எப்போது மறைகிறதோ, அப்போதே நடிகனுக்குரிய தகுதியையும் இழந்து விடுகிறேன்" என்ற பிரபல நடிகர் பால்முனியின் வாசகங்களை உணர்ச்சியோடு குறிப்பிட்டார்.

● ஏவி எம்மின் முதல் இசைத்தட்டு வெளியீட்டு விழா (பாரதி பாடல்கள்: நாம் இருவர், வாழ்க்கை போன்ற படங்களிலிருந்து தொகுக்கப்பட்டவை). பாரதியாரின் வழித் தோன்றல்கள் மற்றும் பாட்டுப் பாடிய டி.கே. பட்டம்மாள், எம். எஸ். பகவதி, தேவ நாராயணன் எல்லோரையும் மேடையில் கௌரவித்தது பாராட்டத் தக்கது.

"ஒரே கடவுளுக்கு ஏன் இத்தனை பெயர்கள் என்று தோன்றும். ஆனால் ஏவி எம். தம் புதல்வர்களுக்குப் பெயர் வைக்கப் பொருத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காகவோ என்னவோ, முருகனுக்குப் பல பெயர்கள் வழங்கி வருகின்றன, குமரன், சரவணன் பாலசுப்பிரமணியன்" — இப்படிக் குறிப்பிட்டது ம.பொ.சி.

—ஈஸ்வர்குமார்

படம்: சுபா ஸ்டூடியோ

● சென்னை அரும்பாக்கம் வைணவக் கல்லூரியில் தமிழ்த் துறையில் துணைப் பேராசிரியராய்ப் பணியாற்றும் திரு பூவண்ணன் (இயற் பெயர் கோபாலகிருஷ்ணன்) சமீபத்தில் சென்னை பல்கலைக் கழகத்தில் தம் ஆராய்ச்சிக்கென டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். பச்சையப்பன் கல்லூரி தமிழ் பேராசிரியர் டாக்டர் சீனிவாசனின் கீழ் தம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்ட தலைப்பு: அமரர் கல்கியின் வரலாற்றுநூல்கள். பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதிலிருந்தே தாம் கல்கியின் எழுத்துக்களால் ஈர்க்கப் பட்டதாய்க் கூறும் இவர்தான் அமரர் கல்கி பற்றி ஆராய்ந்து, டாக்டர் பட்டம் பெறும் முதல் மனிதர். 'வரலாற்று நாவல்கள் மற்றெந்த வகை நாவல்களுக்கும் சற்றும் சளைத்தவை அல்ல' என ஆரம்பமாகும் இவரது கட்டுரை ஐந்தாண்டு கால ஆராய்ச்சியில் எழுதப்பட்டது.

பெரியவர்களுக்கென ஆறு நூல்களும், சிறியவர்களுக்கென அறுபது நூல்களும் எழுதியுள்ள பூவண்ணனைப் பற்றி ஒரு சுவையான தகவல் — பச்சையப்பன் கல்லூரியின் திருபெருமாள் இரண்டாண்டு காலமாய் 'பூவண்ணனின் சிறுவர் இலக்கியம்' என்ற தலைப்பில் டாக்டர் பட்டத்துக்கு ஆராய்ச்சி செய்து வருகிறார்!

● மௌஷ்மி — கடந்த மூன்று மாத காலமாய்ச் சென்னையில் புதுமைகள் புரிவதில் ஆர்வமுள்ள எழுத்துத் திறமை கொண்ட சில இளைஞர்கள் ஒன்று சேர்ந்து நடத்தி வரும் கையெழுத்துப் பத்திரிகை. மற்ற கையெழுத்துப் பத்திரிகைகளுக்கும் இந்த மௌஷ்மிக்கும் ஒரு முக்கிய வேறுபாடு — மௌஷ்மியின் ஒவ்வொரு இதழும் XEROX முறையில் எட்டுப் பிரதிகள் எடுக்கப்பட்டு, வெளியாகிறது. சென்னை நகரில் மட்டும் இல்லாது, பெங்களூர், ஹைதராபாத், பம்பாய், திருச்சி, மதுரை, கோவை, திண்டுக்கல் போன்ற நகரங்களிலும் இப்பத்திரிகைக்கு வாசகர்கள் எண்ணிக்கை சுமார் ஆயிரம். சமீபத்தில் சென்னையில் நடந்த கையெழுத்துப் பத்திரிகைகளின் முதல் மாநாட்டில் 'மௌஷ்மி'யை ஒரு கையெழுத்துப்பத்திரிகை என ஒப்புக்கொள்ளவே சிலர் ரொம்பக் கஷ்டப்பட்டனர்! மௌஷ்மியின் ஆசிரியர் 'சந்துரு' என்கிற சந்திரசேகரன்.

—எஸ். சந்திரமௌலி

இந்த இதழ்...



இந்த இதழை இவ்விதமாகத் தயாரிக்கலாம் என்று யோசனைகூறிச் சிறப்பாக உழைத்தவர்கள்: வாதூலன், சாருகேசி. வேறு பலரது ஒத்துழைப்பும் இணைந்து உங்கள் கரங்களில் தவழ்கிறது. தீர்ப்பு? வாசகர்களின் கடிதங்கள் உணர்த்தி விடாதா என்ன!

—ஆசிரியர்



இமயா களையெடுக்கிறாள்

இனியவன்

சாணாட்டி நாற்றுக் கழனியில் ஊன்றிய இமயா, எஞ்சிய முடிச்சை வரப்பில் போட்டு விட்டு நிமிர முனைந்தாள். இடுப்பு இற்று விடும்போல் வலித்தது.

''ஆளுக்கு ஒரு 'மெனே' இருக்குது... அதுக்குள்ளே இமயா கரையேறிட்டாளே!... நாந்தான் கெழவி... உங்களுக்கெல்லாம்கூட வாடி காரம் செத்துப்போச்சு?'' என்று, அவசரம் அவசரமாக நடவு போட்டபடி ஏனைய பெண்களை இளக்காரமாய்ப் பார்த்தாள், பரிவாதினி.

''எப்பவுமே இமயா பசப்புக்காரி... புருஷன் வேற காயலாக் கிடக்கிறானு? உடம்பிலே இன்னும் துரிதம் கூடிடுச்சி!'' என்றவாறு புகையிலையைக் கிள்ளி வாயில் திணித்தாள் அங்கம்மா.

பண்ணை ஆராய்ச்சி முத்துசாமி, ''அதுவும், அவ அங்கொண்ணும இங்கொண்ணுமா 'ஜாரி' அடிக்கல்லே! எவ்வளவு சேர நட்டிருக்கா பாருங்க! நீங்களும் இருக்கீங்களே, சொரணை கெட்ட ஜென்மங்க'' என்றவாறு முடிச்சவிழ்த்தான்.

சேற்றுக் கால்களையும் கைகளையும் வாய்க்கால் தண்ணீரில் சுத்தப்படுத்திக்கொண்ட இமயா கூலியை வாங்கிக் கொண்டு விரைந்தாள்.

தோப்பில் இறங்கிக் குறுக்காக நடக்கையில், ஓடைப் பக்கம் —, யார் வரவுக்காகவோ காத்திருந்தான் கனகமஞ்சம்.

அவனுடைய ஒப்பனையும், ஒய்யாரமும், கிராமத்துக்குப் பொருந்தாமல் அன்னியமாய்த் தெரிந்தன.

ஓடிப் போய் வழிமறித்து இமயாவின் தோள்களைப் பற்றியபடி இரகசியம்பேசினான்!

இமயா அருவருப்போடு கனகமஞ்சத்திடமிருந்து விடுபட்டாள்.

''இதோ பாருக்கா... இனிமே இப்படிப் பேசினே, எனக்குக் கெட்ட கோபம் வரும்! அப்பிடித் தேவடியாத்தனம் பண்ணி நான் ஒண்ணும் என் கணவனைக் காப்பாத்த வேண்டியதில்லே!''


''ஆத்திரப்படாதேடி இமயா... உன் நன்மைக்குத்தாண்டி சொன்னேன்... அந்த மனுஷன் போகக்குன்னு போயிட்டா கிஷ்டனையும், மாதங்கியையும் எப்பிடி வளர்ப்பியாம்?....''

இமயா மனமும் மேனியும் அதிர ஓடினாள். ஆனால், அவள் வீட்டிலோ....?

வேம்பு போய்விட்டான் - இமயாவின் வாழ்வைக் கரும்பாக்கியவன் கனவாகிவிட்டான்! கிஷ்டன் என்றும், மாதங்கி என்றும் வாகு வாகாய் இரண்டு கண்களைத் தந்துவிட்டு மறைந்து விட்டான்.

''தங்க ரயிலேறி... காசி நதி போயி நங்கி... மாமா... நெருஞ்சிக் காட்டிலே என்னை நிக்க வச்சிப் போயிட்டியே!.....'' என்று வெட்புற அழுதாள் இமயா.

ஏழு வயதுப் பையனையும்ஐந்து வயதுப்பெண்ணை



யும் இன்னும் கொஞ்சம் கேவலைவைத்து வேடிக்கை—பார்த்தது அவன் வியாதி.

தன் சக்திக்கு மீறி அவள்எடுத்துக்கொண்ட முயற்சிகள் — பட்ட பாடுகள் — எல்லாம் வீணென்று தெரிந்தபோது....

என்னவோ — அவள் வாயில் நுழையாத பெயரில், அவனுடைய பூவையும் பொட்டை யும் அழிக்க வந்த.

அவனுடைய அகால மரணத்தை வெல்ல முடியாத வியாதி...

இஷ்டலீயும், மாதங்கியையும் கட்டிக் கொண்டு புலம்பினுள், இமயா.

எல்லாம் முடிந்து விட்டன. இனியும் முட்டிக் கால்களைக் கட்டிக் கொண்டு குமுறு வதில் அர்த்தமில்லை... முகட்டுவளையை வெறித்தபடி பெருமூச்சு விடுவதில் போனது வந்துவிடப் போவதில்லை.

குடிசையைப் பூட்டிக் கொண்டு நடந் தாள்....

எதிர்ப்பட்ட கனகமஞ்சம், "ஆனுலும் நீ உன் புருஷனை அநியாயமாக் கொன்னுட் டேடி" என்று பேசலானுள்.

"ஆமாம்... அவரு இருந்தா, தாசித்தனம் பண்றதுக்கு இடைஞ்சல்னு நான்தான்கொன் னுட்டேன்!" என்று ஆக்திரத்தோடு கத்தி னுள் இமயா.

"பதறாமல் நான் சொல்றதைக்கேளுடி... ஆம்டியான் இருக்கிறப்ப நடத்தை பிசகி யிருந்தா, சமுதாயம் ஏசும்தான்! நான் ஒத்துக்கறேன்... ஆனு இப்ப — 'பாவம், அவ என்ன செய்வா'ன்னு அனுதாபப்படும்!... குழந்தைங்க நன்மைக்காவது நீ கைநிறையச் சம்பாரிக்கணும்!" என்று அவளை இழுத்து நிறுத்தி உபதேசம் செய்தாள் கனகமஞ்சம்.


"தூ!..."என்று காறி உமிழ்ந்தாள்இமயா.

"அரை வயிரு, கால் வயிரு போட்டுப் பிள்ளைகளைக் கௌரவமானவங்களா வளர்க்க என்னுல் முடியும்! அது அவங்களுக்குப் போதும்!" இமயா காளி மாதிரி நடந்தாள்.

கூலிப் பெண்கள் எல்லாம் வரப்பு இறங்கிக் கொண்டிருந்தார்கள்...

இவளும் இறங்கிக் களையெடுக்கலானுள்.

கல்லைக் கப்பலேற்றுகிறுர்கள்!



கல்லை ஏற்றுமதி செய்து சம்பாதிக் கிறுர்கள்.

ஆம். வெறும் கல்தான்!

பல்லாவரத்திலும், திருநீர்மலையிலும் சில இடங்களை அரசிடமிருந்து ஏலத்துக்கு எடுத்துப் பிறகு, வெட்டு வைத்துக் கற்களைப் பெயர்த்து எடுக்கிறுர்கள்.

இருபது வருடமாக இந்தத் தொழிலில் ஊறிப்போன திரு மணியன் திருநெல்வேலி யைச் சேர்ந்தவர்.

"வெளி நாடுகளில் இதை எதற்கு இறக்கு மதி செய்கிறுர்கள்?"

" 'ப்ளாக் க்ரானைட்' என்று சொல்லப் படும் கற்களை ஜப்பானில் அலங்காரத்துக்கும் நினைவுச் சின்னத்துக்கும்பயன்படுத்து கிறுர்கள். இப்போது இந்தோனேஷியாவிலிருந்தே வரவழைத்து விடுகிறுர்கள். அது அருகில் உள்ளது. விலையும் சகாயம்."

இருந்தாலும் போன வருஷம் நல்ல சந்தர்ப்பம் ஒன்று வாய்த்ததாம். மாலத்தீவில்இந்திய விமான நிலைய விஸ்தரிப்புக்கு இங்கிருந்தே கற்கள் சேகரித்துக் கொண்டு போனுர்களாம்!

✕ மணியன்




புளு கிரானைட் கருங்கல் சாலை வேலைக்குத் தான் நிறையப் பயன்படும். சென்ற ஆண்டு அதிக அளவு தேவை இருந்தது. இந்த ஆண்டு அவ்வளவு தேவை இருக்காது. ஏன்? "மழை அவ்வளவாக இல்லாததால் சாலைகள் நிறையச் சேதம் அடையவில்லை!"


எதிர்கால வாய்ப்பு?

"சற்று அதிக லாபம் இருப்பதால் நிறைய பேர் இதில் நுழைந்து விட்டார்கள். எனவே முன் அளவு சந்தர்ப்பம் இல்லை. திண்டி வனம் பக்கத்தில் குன்னம் என்ற இடத்தில் தனி ரகக் கற்கள் (Pure black) கிடைக்கின்றன. ஆனுல் அங்கு தனிப்பட்டவருக்கு உரிமை கிடையாது. 'தமிழ்நாடு மினரல்ஸ் லிமிடெட்' என்ற அரசாங்க நிறுவனத்துக்கு மட்டும் தான் உரிமை உண்டு!" என்று சொல்கிறுர் மணியன். பேட்டி:தமயந்தி

திருப்புகழ் மணி

மீ.ப.சோமு





ரசிகமணி ரசித்த மணிகள்

ரசிகமணியையும் கவிமணியையும் ஒட்டி அனுபவிக்க வேண்டிய இன்னொரு மணி, திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள். ரசிகமணி ரசித்த மணிகளிலே திருப்புகழ் மணிக்கு ஒரு சிறப்பான, ஒரு மணியான இடம் உண்டு!

திருவாங்கூர்த் தலைமைநீதிபதியாக இருந்த காலத்திலும் கையில் 'ஜால்ரா'வைத் தட்டிக் கொண்டு திருப்புகழ் பாடி முருகனை உபாசித்தவர் திருப்புகழ் மணி! இவருடைய பக்தியிலும், இசையிலும், தமிழ்க் காதலிலும் மனமார ஈடுபட்டு அனுபவித்துப் பாராட்டியவர் டி.கே.சி.

இதோ ஒரு கடிதம் பாருங்கள்: திருப்புகழ் மணிக்கு ரசிகமணி எழுதிய இந்த நீண்ட கடிதம் கலை மணி பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் வெளியிட்டுள்ள தொகுப்பிலேயுள்ள ஒரு மணிக் கடிதம்: திருநெல்வேலி வண்ணார் பேட்டையிலிருந்து 10—5—42ல் எழுதியது:

இன்று காலை முற்றத்திலிருந்து கொண்டு நண்பர்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். நடராஜனும் தங்கச்சியும் (பேரக் குழந்தைகள்) ஓடிவந்து 'தாத்தா தாத்தா பாட்டுத் தாத்தா பாட்டுப் பாடுகிறார்கள்' என்று சொன்னார்கள். சொன்னதோடு விடவில்லை. கையைப் பிடித்திழுத்து ரேடியோவுக்கு முன் உட்கார்த்தி விட்டார்கள். வீரட்டானப்பதிகம், கந்தர் அலங்காரம், திருப்புகழ் இவைகளைத் தனியான அழகு வாய்ந்த ராகங்களில் குழைத்து ஊட்டிக் கொண்டிருந்தீர்கள். 'உலகம் ஏது உயிர் வைத்துக் கொண்டிருக்கத் தக்க இடமாய் அல்லவா இருக்கிறது!' என்று பட்டது.

தங்கள் பக்தியும் தமிழும் இசையும் அபூர்வமான கிளர்ச்சியை எனக்குக் கொடுத்து விட்டன. உலகத்தில் வேறு எங்கேயாவது, யாராவது இந்த விதமான உணர்ச்சியை அனுபவிப்பதுண்டா என்று வினவத் தோன்றுகிறது. நம்முடைய நண்ப சிகாமணிகள் ''நீஎன்ன எல்லோருடைய இதயத்தையும் கண்டுவிட்டாயா?'' என்று கேட்கலாம். இதயத்தைக் காணவில்லைதான். ஆனால் நம்முடைய சாவேரி போலவும், அடாணா போலவும் உயர்ந்த ரகமான தேன் எங்கும் கிடையாது.

தன்னை மறந்து
　தலைவாசல் தாள்போட்டு
உன்னை நினைந்து
　உறங்குவ தெக்காலம்

போலவும்,

பாழ்வாழ் வெனும்இப்
படு மாயையிலே
வீழ்வாய் என
　என்னை விதித்தனையே
தாழ்வா னவை
　செய்தன தாம்உள வோ
வாழ்வாய் இனி நீ
　மயில் வாகனனே!

போலவும் தமிழுண்டா? குன்றுதோறாடிய முருகன் உண்டா? வேலுண்டா? தங்கள் இதயத்தைப் பிணித்து நிற்கும் பக்திஉண்டா? கிடையாதுதான் என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு. 'டாங்கிகள்' நம்மிடம் இல்லைதான். 'டைல்பாம்' போடத் தகுந்த விமானங்களும் இல்லைதான்.

கிளைபட் டெழு
　சூருரமும் கிரியும்
தொளைபட் டுரு
　வத்தொடு வேல்

இருக்கிறது. இந்த வேல் போன போன இடமெல்லாம் நாலா பக்கமுமே நின்று காக்கிறது. இத்தகைய ஆயுதத்தை ஜப்பானியர் தான் செய்து கொண்டார்களா! ''மேல்'' நாட்டார்தான் செய்து கொண்டார்களா? இல்லை. நான் சொல்லுவது உபசாரமும் அல்ல, சௌடால்த்தனமும் அல்ல, வெறும் உண்மை.

காலையில் அனுபவித்த விஷயமாகத் தங்களைப் பாராட்டுவதா? தமிழ்ப் பாடல்களை ஆதரிக்க வேண்டும் என்று சொல்பவர்களைப் பாராட்டுவதா? ரேடியோ நிலையத்தாரைப் பாராட்டுவதா? கிராமபோனைச் சிருஷ்டித்த எடிசனைப் பாராட்டுவதா? இப்படிப் பிரிவினை செய்வதும் பாராட்டுக்களை விநியோகம் செய்வதும் கஷ்டம். ஆனதால்,

''ஜெனித்த பிறவியைக்
　கொடுத்த திருவடி
ஜெனியா தமைம இனி
　விடுத்த திருவடி
பனித்த சடையினர்
　பிடித்த திருவடி
இனித்த எமதுளம்
　உடுத்த''

திருவடியைப் பாராட்டி விடுவோம்.

தங்கள் ''கந்தர் அனுபூதி'' நல்ல பொக்கிஷம். அதில் கரன்ஸி நோட்டுக்கள் இல்லை. ஆனால் எந்த மார்க்கெட்டிலும் செல்லும் படியான பொன்னும் ரத்தினங்களுமே கிடக்கின்றன. மூன்றாவது பாட்டு:

வானோ? புனல்பார் கனல்மா ருதமோ?
ஞானோ தயமோ? நவில்நான் மறையோ?

இலக்கியம

யானோ? மனமோ? என்னையாண் டஇடந்
தானோ? பொருளா வதுசன் முகனே

அருமையான பாட்டு. விஷயம் பெரிய விஷயம். பரதத்துவ லக்ஷணத்தை அழகாய் எடுத்துச்சொல்லி யிருக்கிறது. தொண்ணூற்றாறு தத்துவங்களையும் சொல்லிவிட்டு (ஒதுக்கியும் விட்டுத்தான்)

''
என்னையாண்ட இடந்தானே
பொருள்''

என்று முடித்ததின் நயம் தனி. செய்யுளுக்குத் தாங்கள் அழகாகப் பொழிப்புரை கொடுத்து விட்டீர்கள். பொழிப்பே விளக்க உரைதான். 'என்னை ஆட்கொண்ட இடம் தானே!' என்று சொல்லிவிட்டு 'நின் கருணை தானே' என்று வியாக்யானமும் கொடுத்து விட்டீர்கள். உண்மையை, அதாவது பரதத்துவத்தை அறிந்து அநுபவித்திருந்தால் தான் இப்படி யெல்லாம் வருவாகவும் விளக்கமாகவும் வியாக்யானம் செய்யக் கூடும். புத்தகத்தை வாசிக்கும்போது தங்களையும் தங்கள் பக்தி பாவங்களையும் நேரில் காண்கிறேன். ரொம்ப திருப்தி.

தங்கள் அன்புள்ள
டி. கே. சிதம்பரநாதன்

டாக்டர்கள் தயாரிக்கும் புத்தகம்!

நோய்களைப் பற்றியும், மருந்துகள் பற்றியும், மருத்துவம் பற்றியும், அறுவைச் சிகிச்சை பற்றியும் தமிழில் ஒரு புதிய நூல் வெளிவர இருக்கிறது. வெளியிடுபவர்கள், வழக்கமான புத்தக வெளியீட்டாளர்கள் அல்ல. சென்னை லயன்ஸ் கிளப்!

இதை ஒரு முக்கியமான சமூகப் பணியாகக் கருதி, மருத்துவத் துறையின் ஒவ்வொரு பகுதியிலும் நிபுணத்துவம் வாய்ந்த டாக்டர்களை அணுகி, இந்தப் புத்தகத் தயாரிப்பில் ஒத்துழைக்கக் கோரியிருக்கிறது சென்னை லயன்ஸ் கிளப்.

''நீங்கள் கேட்டுக் கொண்டவுடன் உடனே எல்லோரும் சம்மதித்தார்களா?''

''சந்தோஷத்துடன்!'' என்றார் இந்தப் பணியை மேற்கொண்டுள்ள லயன் டாக்டர் எம். எஸ். வெங்கட்ராமன்.

''டாக்டர்கள் மட்டுமே இதில் எழுதியிருக்கிறார்களா? அல்லது வேறு யாரையேனும் நீங்கள் எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டீர்களா?''

''ஆல்கஹாலிஸம் பற்றி திருமதி சிவசங்கரி எழுதியிருக்கிறார். விஞ்ஞானியும் பிரபல எழுத்தாளருமான சுஜாதா ஸி. டி. ஸ்கானர் என்ற நவீன உடல் பரிசோதனைக் கருவி பற்றி எழுதுகிறார். சாலை விபத்துக்கள் பற்றி போலீஸ் கமிஷனர் திரு ஸ்ரீபால் அளித்திருக்கும் பேட்டி பொதுமக்களுக்கு அறிய வேண்டிய செய்திகளைத் தெரிவிக்கும்.''

''எப்போது இதற்கான வேலைகளைத் துவக்கினீர்கள்? எப்போது புத்தகம் வெளிவரும்?''

''இந்த ஆண்டு மே மாதம் இதற்கான பணிகளைத் தொடங்கினோம். இன்னும் இரண்டு மாதங்களில் அநேகமாகப் புத்தகம் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கிறோம்.''

''நீங்கள் எல்லோருமே பிஸியாக இருக்கும் மருத்துவர்கள். உங்களால் ஒரு புத்தகத்தைத் தனியே எழுதி வெளியிடுவது சாத்தியம் என்று நினைக்கிறீர்களா?''

''நாங்கள் ஒருவிதத்தில் அதிர்ஷ்டசாலிகள். சில கட்டுரைகளைத் தயாரிப்பதிலும், புத்தக உருவில் அச்சிட்டு வெளியிடுவதிலும் 'ஆனந்த விகடன்' அதிபர் உதவ முன்வந்திருக்கிறார். 'கல்கி' ஆசிரியரும் ஒத்துழைக்கிறார்.''


விழாவொன்றில் இது வெளியிடப்பட இருக்கிறதாம். சாதாரணமாக விழா மலர் வெளியிட்டால் யாரும் படிப்பதில்லை. விளம்பரங்களைப் புரட்டிவிட்டுத் தூக்கிப் போட்டு விடுவார்கள். ஆனால் இந்தப் புத்தகம் அப்படியல்ல என்கிறார் டாக்டர்.

''காச நோய், புற்று நோய், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, தீக் காயங்கள், அல்சர், குறையுடன் கூடிய குழந்தைகள் பிறப்பு, சிசுக்களின் உணவு முறை, தவிர்க்கக் கூடிய பார்வை இழப்பு, இதய நோய், நீரிழிவு, வலிப்பு, தொழு நோய் என்பன போன்று முப்பத்தைந்து தலைப்புக்களில் கட்டுரைகள் அடங்கிய நூல் இது. யாரும் வாங்கி விரும்பிப் படிக்கும் விதத்தில் எளிய நடையில் இது அமையவிருக்கிறது. வெட்கம் காரணமாக டாக்டரிடமே சொல்லக் கூச்சப்பட்டு மறைக்கும் அதிகமான யூடரல் ப்ளீடிங், பால்வினை நோய்கள், மார்பகப் புற்றுநோய் முதலிய எல்லாவித மான பிரச்னைகளையும் மருத்துவ ரீதியாக மக்களுக்குப் புரியவைக்கும் தமிழ் நூல் என்ற வரிசையில் இது முதலாவதாக இருக்கும் என்பது நிச்சயம்!'' என்கிறார் டாக்டர் எம். எஸ். வி.

—சாருகேசி

டீவி காரணமாகப் படிக்கும் பழக்கம் குறைந்து போகக் கூடாது என விளக்கும் கார்ட்டூன்:

அமெரிக்கன் ரிவ்யூ





வட்டமேஜை

● எம். ஜி. ஆர். பற்றிச் செய்தி இல்லாத சினிமா மலரா என்று நொந்து கொண்டிருந்த எங்களுக்கு வித்வானின் ''பொன் மனச் செம்மலும் பொன்விழா ஆண்டும்'' கட்டுரைத் தொடர் கட்டுக்கடங்காத உற்சாகத்தை அளித்துள்ளது.

இராசபாளையம் ப. முத்துராசன்;
பொன். இளங்கோவன்

● என்ன சார் சர்குலேஷன் டல்லா? எம்.ஜி. ஆர். கட்டுரை போட ஆரம்பித்துவிட்டீரே!

பழவந்தாங்கல் ஆனைக்கூத்தன்

● 16—8—81 மேலட்டையைக் கண்டு திடுக்கிட்டேன். சுதந்திர நாளை ஒட்டி தேசியத் தலைவர்களின் படங்களை எதிர்பார்த்திருந்த எனக்குப் பேரதிர்ச்சி. நம்மை அடிமைப் படுத்திக் கொண்டிருந்த மன்னர்களின் வாரிசுகள் படம் போட உங்களுக்கு இந்த வாரம்தான் கிடைத்ததோ?

சென்னை-10 தா. ரசூல்கான்

● செய்தி ஒன்றும் இல்லையென்றால் அலுவலகத்தை மூடிவிடுங்கள். எப்போதும் சார்ல்ஸ் — டயானுதானு? வயறு எரிகிறது!

குடந்தை கை. இராம மதி

● சார்ல்ஸ் — டயாளுவின் வண்ண மயமான அட்டைப் படமும் உள்ளே அவர்களைப் பற்றின கட்டுரையும், நடுப் பக்கத்தில் அவர்களின் திருமண நிகழ்ச்சிகள் பற்றின அழகான போட்டோ ஸ்டில்களும் அட்டகாசமாக அமைந்து மனத்தை ரம்யப்படுத்தின.

நெல்லிக்குப்பம் ரா. ஜோதிராமன்

● டயாளு — சார்ல்ஸ் கட்டுரை அனுவசிய விஷயங்களை அள்ளி வீசாமல், பாயிண்ட் பாயிண்டாக அமைந்தது பாராட்டுக்குரியது. குட்டி கிருஷ்ணனுக்கு ஒரு குட்டி தாங்க்ஸ்.

வேலூர் தே. கிருபாகரன்

● சிமெண்ட் பர்மிட் விஷயமாகத் தாங்கள் எழுதியிருந்த தலையங்கம் கண்டேன். அழகான தலையங்கம். அற்புதமான தலையங்கம். பர்மிட், லைசென்ஸ், கோட்டா ராஜ்யம் எல்லாத் துறைகளிலும் ஒழியத் தீரத் தலைவர் என்று தோன்றப் போகிறாரோ?

ராசிபுரம் தனுஷ்கோடி.

● தலையங்கத்தில் அரசியல் நேர்மையற்ற சுயநலவாதிகளை 'கரு, கரடி, ஓநாய்' ஆகிய மிருகங்களுக்கு ஒப்பிட்டு எழுதியிருப்பதைச் சம்பந்தப்பட்ட மிருகங்கள் கண்டால் தங்களை இழிவு படுத்துவதாகக் கூறி வழக்கு தொடர்ந்துவிடும்!

கண்ணம்பாளையம் பொன் ஜெயசிங்

● ''என்று மாறும் இந்த சோகம்'' சிறுகதை ஆழமாகச் சிந்தித்து எழுதப்பட்ட அற்புதமான கதை. படித்தும் தனக்கொரு வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கும் இளைஞனின் மனக் குமுறலை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர் கார்த்திகா ராஜ்குமார்.

தஞ்சாவூர் பி. ஜே. ரத்தன்

● ''என்று மாறும் இந்த சோகம்'' என் நெஞ்சில் ஏற்படுத்திய ''வலி''க்கு இதமான மருந்தாய் அமைந்தது, ''டொனேஷன்''. மூன்று கதைகளும் மனத்தைக் கவர்ந்தன.

கோவை துரை பால்ராஜ்

● ''வலி'' சிறுகதையைப் படித்தவுடன், விமலாதித்த மாமல்லன் ஒரு அறிமுக எழுத்தாளர் என்றே நம்ப முடியவில்லை

சிதம்பரம் எம். பன்னீர்

● காதலைச் சிறப்பித்து பாரதி ராஜா தீட்டிய இன்னொரு வண்ண ஓவியம் என்று அலைகள் ஓய்வதில்லை திரைப் படத்தைப் பாராட்டிய அதே கல்கி பாரதி ராஜாவைக் கிண்டல் செய்து ஒரு கற்பனை ஷூட்டிங் வெளியிட்டுள்ளதை என்னால் நம்பவே முடியவில்லை. ஒரு பக்கம் மலர் மாலை மறு பக்கம் கத்திக் குத்து! ஏனய்யா உமக்கு இந்தப் பொல்லாத வேலைகள்?

இராசிபுரம் ஆர்.டி. பாரதமணி

● எமது இயக்குனரின் 'அலைகள் ஓய்வு-இல்லை' காவியத்துக்கு மிகச் சிறப்பாக விமர்சனம் எழுதிய தங்களுக்கு எமது நன்றி! மேலும் சிவாஜி — பாரதி ராஜா கற்பனை உரையாடல் கிண்டல் — கேலி நிறைந்ததாக இருந்தாலும் எமது மன்றம் பற்றி மறக்காமல் குறிப்பிட்டதற்கு நன்றிகள் கோடி!

காரைக்குடி மகேந்திரகுமார்,
தலைவர், பாரதிராஜா விசிறிகள் சங்கம்

● பாரதி ராஜா 'அலைகள் ஓய்வதில்லை' படத்தை மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டும் வண்ணம் படைத்திருக்கிறார். உங்கள் விமரிசகர் அவர் விமரிசனத்தைப் பலமுறை படிக்கும் வண்ணம் சுவைபட எழுதியிருக்கிறார்.

விளாங்குறிச்சி தே. ஞானதுரை

வாசகர் பக்கம்

பாரதி தொடர்

புரட்சிக் கவிஞர்



பாரதி சுதந்திரம் விரும்பியது இந்த மண்ணுக்கு மட்டுமல்ல. இந்த மண்ணிலே வாழும் பல கோடி மக்களுக்குத்தான். மக்களிலே ஒவ்வொருவரும் சுதந்திரத்தின் பலனை அனுபவிக்க வேண்டும் என்று பாரதி கருதினன். அன்னிய நாட்டின் ஆதிக்கத்தை அகற்றுவது போல இந்திய நாட்டிலேயே ஒரு மதத்தவர் மீது இன்னொரு மதத்தவர், ஒரு வருணத்தவர் மீது பிற வருணத்தவர், ஒரு சாதியினர் மீது இன்னொரு சாதியினர், பெண்ணினத்தின் மீது ஆணினம், உழைப்பாளர் வர்க்கத்தின் மீது உடைமையாளர் வர்க்கம் செலுத்திவரும் ஆதிக்கங்களையெல்லாம் அழித்து முடிக்க வேண்டும் என பாரதி விரும்பினன். அதுதான் ''சமதர்ம சமுதாயம்''.

பாரதி மக்களுடைய வாழ்க்கையிலே ஒவ்வொரு துறையிலும் புரட்சியை விரும்பினன். சமுதாயம், பொருளாதாரம், கல்வி, மொழி, சங்கீதம், பழக்க வழக்கம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் அமர கவி பாரதி புரட்சிகரமான மாறுதலை விரும்பினர். ''தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே'' என்பது அவன் செய்த பிரகடனம்.

ஆண், பெண் என்ற பால் வேற்றுமை தவிர, ஏற்றத் தாழ்வோடு கூடிய இதர வேற்றுமைகளெல்லாம் தொலைய வேண்டும் என்று சொன்னன்.

பாரதியாரின் பாடல்கள் அடங்கிய ''ஸ்வதேச கீதங்கள்'' என்னும் பெயருடைய முதல் வெளியீட்டிலே, ''வந்தே மாதரம் என்போம்'' என்று தொடங்கும் முதல் பாடலிலே அவன் செய்யும் முதல் முழக்கம் இதுதான்:

சாதி மதங்களைப்
பாரோம் — உயர்
ஜன்ம மித்தே சத்தி
லெய்தின ராயின்
வேதிய ராயினும்
ஒன்றே — அன்றி
வேறு குலத்தவ ராயினும்
ஒன்றே.

இந்தப் பாடலானது முதன் முதலில் அவன் பாடிய ஐந்தாறு பாடல்களிலே ஒன்றாகும். 1907ஆம் ஆண்டிலே, அவன் இதைப் பாடியிருக்க வேண்டும். அந்தக் காலத்திலே சாதி ஒழிப்பு என்னும் பெயரால் ஒரு இயக்கமோ, பெண்ணுரிமைக் கிளர்ச்சி என்னும் பெயரால் ஒரு கிளர்ச்சியோ, சுரண்டலை எதிர்க்கும் பொருளாதாரப் புரட்சி என்னும் பெயரால் ஒரு புரட்சியோ இந்த நாட்டில் தோன்றியிருக்கவில்லை.

''உயர் ஜன்மம்'' என்று பாரதி சொல்வது மனித ஜன்மத்தை. மனிதரிலே ''எல்லோரும் ஓர் விலை'' என்றும் ''எல்லோரும் ஓர் நிறை'' என்றும், ''எல்லோரும் இந்நாட்டு மன்னர்'' என்றும் அந்த மகா கவிபாடினன்.


மனித சாதியிலே 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை' என்று பிரகடனம் செய்தான். ஆம்; ருஷ்யாவிலே சமதர்ம ஆட்சி தோன்றுவதற்கு முன்பே பாரதி இப்படிப் பாடினன். ''விடுதலை வேண்டும்'' என்று சொன்ன பாரதி, அந்த விடுதலை யார் யாருக்கு வேண்டும் என்பதையும் விளக்கினன். 'பறையருக்கு விடுதலை வேண்டும்' என்று பாடினன். கேரளத்தில் உள்ள தீயர் என்போருக்கும் விடுதலை வேண்டும் என்று கூறினன். பரவர், குறவர், மரவர் எனப்படும் பிற்பட்ட சாதிகளுக்கும் விடுதலை வேண்டும் என்றான். விடுதலை வாழ்வைப் பற்றி இவ்வளவு தெளிவாக தீர்க்கதரிசனமாக வேறெந்த தலைவரும் இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்பு விளக்கம் தந்ததில்லை.

''பறையர்'' எனப்படுவோர் ஈன சாதியினராக எண்ணப்பட்டனர், அக்காலத்திலே! அதனை மறுத்து, 'ஈனப் பறையர்களேனும் அவர் எம்முடன் வாழ்ந்து இங்கு இருப்பவர் அன்றோ?' என்று கேட்டான் பாரதி. 'சீனத்தவராகி விடுவரோ?' என்றும் வினு எழுப்பினன். ஆம்; இன்று அரிசனர் என்று சொல்லுகிறோமே, அவர்கள் நமக்கு அன்னிய நாட்டார் அல்லர் என்பதை விளக்குவது போல, 'சீனத்தவர்' என்னும் சொல்லால் அயல் நாட்டினரை உவமை காட்டினன். பிற தேசத்தாரைப் போல அந்த ஈனப் பறையர் எனப்படுவோர், நமக்குத் தீங்கு செய்வார்களோ? என்றும் கேட்டான்.

(மயிலை இலக்கிய வட்டம் பாரதிய வித்யாபவனச் சொற்பொழிவிலிருந்து)

ம.பொ.சி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran





ஆரோக்கியமான பற்களுக்கும் ஈறுகளுக்கும் என்றுமே ஆதாரம்
நம்பகமான கிராம்புத் தைலம் அது தருமே பரிகாரம்

புதிய

இதோ
ப்ராமிஸ் டூத் பவுடர்

காலங்காலமாக பயன்பட்டு வரும் கிராம்புத் தைலம் கொண்டது.

கிராம்புத் தைலம் கொண்ட
ப்ராமிஸ் டூத் பவுடர்
அளிக்கும் நன்மையைப் பாருங்கள்.

- வாய்த் துர்நாற்றத்தையும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளையும் அகற்றுகிறது.
- உங்கள் சுவாசத்திற்கு புத்துணர்ச்சியையும் தூய்மையையும் தருகிறது.
- உங்கள் ஈறுகளை இதமாகத் தேய்த்துக் கொடுத்து ஆரோக்கியத்தை உண்டாக்குகிறது.
- உங்கள் பற்களுக்கு பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது.
- பெப்பர்மிண்ட் மற்றும் கிராம்புத தைலத்தின் இணையற்ற சுவை.



பல்சாரா

கிராம்புத் தைலம் கொண்ட புதிய இணையற்ற ப்ராமிஸ் டூத் பவுடர்

CHAITRA-BLS-436 TAM


REGISTERED No. M 4392
Registered as a Newspaper in Sri Lanka
சிங்காரச் சேலை
சிருங்காரஸ்
100% பாலியெஸ்ட
ஜார்ஜெட், டிஷ்லா
டிஷ்யூ எனப் பல
சிங்காரச் சேலைகள்
பாலியெஸ்டர் டிரெ
ஃபேப்ரிக் அணிவ
பாம்பே டையிங்
புதுப்புது பாணிகள். நூற்றாண்டுகளுக்கு மேலாக.